திங்கள்

ஆடி...4. அணா.



சிறந்த பொழுது போக்குப் புத்தகங்கள்

சிரஞ்சீவி எழுதிய பயங்கர நாவல்கள்

மர்மம் நிறைந்த மாயவில்லா	1	0	0
சூனியக்காரி	1	0	0
பேய் விடு	1	8	0
சூறைக்காற்று	1	8	0
மரணயாத்திரை	1	8	0
நீதிமயக்கம்	1	0	0
காதலன் கொலை வழக்கு	1	4	0
மர்மத்தீவு	1	4	0
கல்நெஞ்சன்	1	8	0
மர்மக்கொலை	1	0	0
ரத்தப் பசி	1	4	0
பயங்கர மனிதன்	2	0	0
பறக்கும் தட்டு	2	0	0

மேதாவி எழுதிய துப்பறியும் நாவல்கள்

துப்பறியும் ராஜு	1	0	0
ரகசிய அறை	1	4	0
பச்சை மாளிகை மர்மம்	1	4	0
மாய மனிதர்கள்	1	4	0
சூரக்கோட்டை மர்மம்	1	8	0
மலையாளச்சீட்டு மர்மம்	1	8	0

இளவெனில் எழுதியது

புதுமணத் தம்பதிகளுக்கு	2	4	0

அரு. ராமநாதன் எழுதிய புத்தகங்கள்

கோழிப் பந்தயம்	1	4	0
பழையனூர் நீலி	1	4	0
வேதாளம் சொன்ன கதைகள்	1	4	0

வியாபாரிகளுக்கு 25% கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்ப இயலாது.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்,

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை–2

வருகிறது!
ஸ்வராஜ் புரொடக்ஷன்ஸ்
அளிக்கும்
கன்னிகாதானம்
தமிழ்
சௌகார் ஜானகி
சுரபி பாலசரஸ்வதி
வஹிதா ரெஹ்மான்
காந்தாராவ்
ஸி. எஸ். ஆர்
துரைசாமி நடித்தது
PSR
ஸ்வராஜ் புரொடக்ஷன்ஸ் ★ 1 பீமசேன கார்டன் சென்னை-4

திங்கள் ★★★★★

மாதப் பத்திரிகை

சந்தா விவரம்

உள் நாடு ஒரு வருஷம்	ரூ.	6
,, அரை வருஷம்	ரூ.	3
வெளிநாடு ஒரு வருஷம்	ரூ.	8
தனிப்பிரதி விலை	அணா	8

விளம்பர விகிதம்

சாதாரண முழுப்பக்கம்	ரூ.	100
,, அரைப்பக்கம்	ரூ.	50
,, கால்பக்கம்	ரூ.	30
கடைசி அட்டை (மூவர்ணம்)	ரூ.	300
உள் அட்டை	ரூ.	150
முகப்புப் பக்கம்	ரூ.	150

கட்டுரையாளர்களுக்கு

'திங்கள்' பத்திரிகையில் பிரசுரம் செய்ய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நவீன முறையில் எழுதப்படும் கட்டுரைகளுக்கு முக்யத்துவம் அளிக்கப்படும். பழைய விஷயங்களானாலும் புதிய முறையில் எழுதப்பட வேண்டும். எல்லாவித ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கும் நமது பத்திரிகையில் இடம் உண்டு. சொந்த அனுபவங்களைப்பற்றி எழுதலாம். அதிசய சம்பவங்களைப்பற்றியும் கூறலாம். பிரசுரிக்கப்பட்ட எல்லாக் கட்டுரைகளுக்கும் சன்மானம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பிப்பெற விரும்புவோர் போதிய தபால் தலைகள் அனுப்பி வைக்கவேண்டும்.

போட்டோ நிபுணர்களுக்கு

நீங்கள் எடுக்கும் போட்டோக்களை எங்கள் பார்வைக்கு அனுப்புங்கள். தனிப்பட்ட போட்டோக்கள் பத்திரிகையில் இடம்பெறுது. படக்கட்டுரைகளுக்கு ஏற்றதான தொடர் போட்டோக்கள் மட்டுமே எங்களுக்குத் தேவை. போட்டோக்களை அனுப்பும்போது அவற்றின் விளக்க உரைகளையும் அனுப்பி வைக்கவேண்டும்.

கடிதங்கள்

வியாபார சம்பந்தப்பட்ட கடிதங்கள், 'ராமநாத் பப்ளிகேஷன்ஸ் சென்னை-2' என்று விலாசமிட்டு எழுதப்பட வேண்டும்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கட்டுரைகள், போட்டோக்கள் முதலியவற்றை ஆசிரியர், 'திங்கள்', சென்னை-2 என்று விலாசமிடவும். காரியாலய சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு காரியாலய உத்தியோகஸ்தர்களின் சொந்தப் பெயர்களில் கடிதப் போக்குவரத்து கூடாது.

'ஹாஸ்ய சம்பவம்', 'மறக்கமுடியாத சம்பவம்' குறித்து அனுப்பப்படும் விஷயதானங்கள் பற்றிய கடிதங்களுக்கு பதில் எழுத இயலாது.

காரியாலயம் :

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

கோட்டாகுடி பெரியநாயக்கர்
வெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

திங்கள்

ஜூலை 1956

ஆண்டு 1 ★ துன்முகி—ஆடி ★ மாதம் - 7

இம்மாதம்

இந்தியாவும் சீனாவும் ...	7
தமிழ் உயர......... ...	10
காமன்வெல்த்தில் இருப்பது நல்லதா? கெட்டதா? ...	12
இந்தியாவின் நிலப்பிரிவுகள் ...	14
ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ...	17
திருச்சி மலைக்கோட்டை ...	24
சூரியன் வெடித்தால்? ...	29
சைப்ரஸ் ...	33
பாலகங்காதர திலக் ...	40
காவற் கடவுள் ...	44
அயல்நாட்டுப் பிரமுகர்—யூ நூ ...	46
சென்னையின் பத்திரிகைகள் ...	57
அழகு ...	65
மாலைக் காட்சிகள் ...	66
மின்சார விளக்கு ...	69
புல்லாங்குழல் ...	75
பப்பாளியைப் பயன்படுத்துங்கள் ...	77
திருக்குற்றாலம் ...	79
கற்புக்கரசிகள் ...	86
ஹிந்தி இலக்கியம் ...	89
சீர்திருத்தம் ...	93
போலி வைரங்கள் ...	96
பல் சக்கரங்கள் ...	99
இந்திய காமசாஸ்திர நூல்கள் ...	102
மருந்தாகும் மலர்கள் ...	104
பரதநாட்டியக் கலை ...	105
ஜாதகம் பிறந்த கதை ...	111
தேனீக்களில் பல ரகங்கள் ...	116

THINGAL, Tamil Monthly Magazine. Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath.

திங்கள்

வணக்கம்

'திங்கள்' இதழ்களைக் குறித்து இதுவரை தனிப்பட்டோரிடமிருந்தே பாராட்டுரைகள் வந்து கொண்டிருந்தன. இப்போது பல சங்கங்களிட மிருந்து புகழ்ந்து கடிதங்கள் வருகின்றன. அவற்றில் ஒன்றை மட்டும் இங்கு பிரசுரிக்கிறோம்.

''ஒவ்வொரு 'திங்களி'லும் காணப்படும் கட்டுரைகள் கற்றோரிடத்தே மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. எங்கள் ஸ்தாபனத்தினர் தங்கள் மாஸிகையைத் தவறாது படித்து வருகின்றனர். ஆங்கிலத்தில் 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' என்றால் தமிழில் 'திங்கள்' அதற்கு ஈடு என்று சொல்லலாம். 'ரீடர்ஸ் டைஜஸ்டு'க்கு 'திங்கள்' சிறிதேனும் தாழ்ந்ததல்ல. ஆகவே பத்திரிகை உலகில் 'திங்கள்' ஒரு திலகமாகவே திகழ்ந்து வருகிறது.

அஜீஸ் அஹமது,

இக்பால் படிப்பகத்தார், மதுரை.

இந்த இதழில் ஏராளமான கட்டுரைகள்; அவ்வளவும் எவ்வளவோ அரிய தகவல்களை வெளியிடுபவையாக அமைந்திருக்கின்றன. மரீனா பற்றிய படக்கட்டுரை சென்னை நகரின் சிறப்பை கண்முன் எடுத்துக் காட்டும். திருச்சி மலைக்கோட்டை, திருக்குற்றாலம் ஆகிய படக் கட்டுரைகளும் இந்த இதழின் விசேஷ அம்சங்களாகும்.

'இந்தியாவும் சீனாவும்' என்ற கட்டுரையில் இரு பெரிய ஆசிய நாடுகள் சுதந்திரம் பெற்று தலை தூக்கி யிருப்பதை மேற்குநாடுகள் உணரவில்லையே என்று ஸ்ரீ பணிக்கர் விளக்கி யிருக்கிறார். ஆடி மாதம் காவற் கடவுளுக்கு பூஜைபோடும் மாதம். அதை உத்தேசித்தே கட்டுரையும் ''அட்டைப் படமும்'' இவ்விதழில் விசேஷமாக அமைந்திருக்கின்றன.

இன்னும் புதுப்புது அம்சங்கள் பலவும் 'திங்களி'ன் வரும் இதழ்களில் இடம்பெறும் என்பதை வாசகர்கள் எதிர்பார்க்கலாம்.

திங்களுக்குத் திங்கள்

சமீபத்தில் சென்னை மந்திரிகள் வெளியிட்ட கருத்துகளைப் படித்தவர்கள் நிச்சயமாக மந்திரி சபையில் பிளவு ஏற்பட்டு விட்டதென்றே நினைப்பார்கள். எல்லாம் இந்த தட்சிணப் பிரதேச பிரச்னை விஷயமாகத் தான். சென்னை மந்திரிகளில் யார் யார் இந்த தட்சிணப் பிரதேச பிரச்னையை ஆதரிக்கிறார்கள், யார் யார் எதிர்க்கிறார்கள் என்பதே புரியாமலிருக்கிறது. தட்சிணப் பிரதேச அமைப்பு என்பது ஒரு புது யோசனை. இதை எல்லா மந்திரிகளுமே ஒன்று சேர்ந்து தீர ஆலோசித்துமுடிவுசெய்யலாம். பலவித அபிப்ராயங்களை வெளியிட்டு மக்களைக் குழப்பவேண்டிய தில்லை.

* * *

போர்மோஸா தீவை தன்வசம் வைத்துக் கொண்டு ''அதுவே சீனதேசம்'', ''நானே சீன சர்க்கார்'' என்று அமெரிக்க உதவி தெம்பில் சொல்லிவரும் சியாங்கே ஷேக்குடன் சமாதானப் பேச்சு நடத்த தான் தயார் என்று சூஎன்லாய் தெரிவித்தார். போர்மோஸாவை தாக்கி வசப்படுத்தி, உலக சமாதானத்தைக் கெடுக்க சூஎன்லாய் விரும்பவில்லை.

தான் சமரஸப் பேச்சுக்குத் தயாராக இல்லை என்பதுடன் சீனா முழுவதையுமே மீண்டும் கைப்பற்றி அதற்கு விடுதலையளிக்கப் போவதாக பதில் தெரிவித் திருக்கிறார். கம்யூனிஸ்ட் சீனா நினைத்தால் போர்மோஸாவை ஒரு நொடியில் கைப்பற்ற முடியும்.

சென்ற திங்களில் கலாசாலைகள், பள்ளிக் கூடங்கள் எல்லாம் திறந்துவிட்டன. இதன் விளைவாக எங்கும் ''இடமில்லை'' என்கிற ஒலிதான் எழுந்தது. கலாசாலைகள், உயர்தரப்பள்ளிக் கூடங்களில் இடமில்லை என்றாலும் ஒருவாறு ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஒன்றாம் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் கூட இடமில்லை என்றால் இந்த வயிற்றெரிச்சல் நிலைக்கு என்னசெய்வது? இதற்குதான் ராஜாஜி ஒருசில மணி நேரம் வகுப்புகள் நடத்தினால் போதும், மற்ற நேரத்தில் குலத் தொழிலை கற்றுக் கொள்ள வசதி ஏற்படும் என்றார். வினோபாஜி இன்னும் ஒருபடி தாண்டி சென்றுவிட்டார். குழந்தைகளுக்கு காலையில் ஒருமணி எழுதப்படிக்க கற்றுக் கொடுக்கவும், மாலையில் கேள்வி மூலம் ஒருமணி போதனை அளிக்கவும் ஏற்பாடு செய்யலாம் என்று யோசனை கூறியிருக்கிறார். இதனால் செலவும் மிகக் குறையும். எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்புவசதி ஏற்படும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

* * *

இலங்கையில் சிங்களம் மட்டுமே அரசாங்கமொழி என்று நிர்ணயிக்கப்பட்டு விட்டது. இது இங்குள்ள தமிழர்களுக்கும், தமிழ் மொழிக்கும் செய்யப்பட்ட பெரும் அநீதி. ஒரு நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் அரசாங்க மொழியாக இருப்பதில் தவறொன்றுமில்லை. ஸ்விட்ஸர்லாந்தில் ஒன்

றுக்கு மேற்பட்ட அரசாங்க மொழிகள் இருந்துவருகின்றன. இலங்கைத் தீவில் மூன்றில் ஒரு பகுதியினர் பேசும் பாஷையாக இருக்கும் தமிழை, ராஜாங்க மொழியாக்காதிருப்பதற்கு நியாயம் எதுவும் இருக்க முடியாது. அரசாங்கமொழிபோன்ற பிரச்னைகள் மெஜாரிட்டி பலத்தினால் நிர்ப்பந்தமாக தீர்க்கப்படுவது விரும்பத் தக்கதல்ல.

* * *

சென்னை ராஜ்ய என். ஜி. ஓக்கள் நீண்ட காலமாக பொறுமையுடன் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி வந்தனர். அவர்கள் பொறுமை எல்லை மீறிவிட்டது. டில்லி சென்றார்கள், நேரு இவர்களுக்கு பேட்டியளிக்காவிட்டாலும், இவர்கள் குறைகளைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு ராஜ்ய சர்க்காருடையதுதான் என்றுசொல்லி விட்டார். நேரடி நடவடிக்கை என ஆரம்பித்து, முதல் மந்திரியின் "கவனிக்கப்படும்" என்ற வாக்குறுதியின் பேரில் தங்கள்நடவடிக்கைகளைவாபஸ் பெற்றிருக்கிறார்கள். இனி பொறுப்பு சென்னை சர்க்கார் வசம்தான் இருக்கிறது. "சர்க்காரின் நிதிநிலைமை இடம்தராத காரணத்தினால் எந்தக் காரியம் நின்று விடுகிறது?" என்று என். ஜி. ஓக்கள் கேட்டால் அவர்கள்மீது யாரும் குறை சொல்ல முடியாது.

சீனக் குடியரசுப் பிரதமர் சூஎன்லாய்

* * *

காமன்வெல்த் மகாநாட்டையொட்டி பண்டித நேரு லண்டன் சென்றிருப்பதை சமாதான திக்விஜயம் என்று கூறலாம். பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளுக்குச் சென்று அந்நாட்டின் தலைவர்களை சந்திக்கப்போகிறார். திரும்புகையில் யூகோவில் ஒரே இடத்தில் டிட்டோவையும் நாஸிரையும் சந்தித்துப் பேசப் போகிறார்.

முன்பு நேருஜி வெளி நாடுகளுக்குப் போவதிலும் இப்போது போவதிலும் ஒரு வித்தியாசம் உண்டு. இப்போது ரஷ்யாவின் போக்கில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இம்மாறுதல் எப்படி உலக சமாதானத்திற்கு அனுசரணையாக இருக்கின்றது என்பதை அயல்நாட்டு ராஜ தந்திரிகளுக்கு எடுத்துச் சொல்ல இந்த விஜயம் ஒரு அரியசந்தர்ப்பத்தை அளிக்கிறது.

இம்மகாநாட்டு அறிக்கையில் ரஷ்யாவுடன் நல்லுறவு ஏற்படுவது அவசியம். யுத்தபயம் நீங்கவும் சமாதானம் நிலவவும் இது உதவிசெய்யும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

* * *

மொத்தம் ரூ.150 கோடிகடன் தேவைப் படுவதால் 3 புதிய கடன் பத்திரங்களை ஏககாலத்தில் வெளியிட இந்தியசர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தை முன்னிட்டு மொத்தம் ரூ. 1,200 கோடிக்கு பொதுக் கடன் வாங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்தியாவும் சீனுவும்

கே. எம். பணிக்கர்

ஸ்ரீ கே. எம். பணிக்கர் ராஜ்ய புனரமைப்புக் கமிஷனில் மெம்பராக சேவை செய்யுமுன் சீனுவில் இந்திய ஸ்தானிகர் பதவியை வகித்தவர். சீனுவை இன்று பல வல்லரசுகள் இன்னும் அங்கீகரிக்க மறுத்து வருகின்றன. ஐநாவில் சியாங் சீனுவுக்கு இடம் இருக்கிறதேயொழிய, சீனக்குடியரசுக்கு இடமில்லை. இப்பிரச்னை குறித்து அவர் எழுதியுள்ள கட்டுரை இது.

இன்றுள்ள சர்வதேச நிலைமையில் நிச்சயமற்ற தன்மை இருப்பதற்கான ஒரு முக்கிய காரணம், ஆசியாவில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை மேற்கு நாடுகள் உணராததேதான்.

1947-ம் வருஷம் வரையில் ஜப்பானைத்தவிர இதர ஆசிய சுதந்திர நாடுகளை மேற்கு நாடுகளும் அமெரிக்காவும் முக்கியமாக மதிக்கவே இல்லை. ஆசியாவிலுள்ள இதர 120 கோடி மக்கள் சோவியத் யூனியன், மத்ய கிழக்கு இஸ்லாமிய நாடுகள் நீங்கலாக—அரசியல் துறையில் முக்கிய மற்றவர்களாகக் கருதப்பட்டனர். இவர்கள் சம்பந்தமான முடிவுகளை மேற்கு நாடுகளே செய்து வந்தன.

இரண்டுவருஷ காலத்திற்குள் நிலைமை அடியோடு மாறிவிட்டது. உலகசக்தி ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு மாறியுள்ளதை அநேகர் தெரிந்து கொள்ள முடியாமல் அவ்வளவு சீக்கிரமாக மாறுதல் ஏற்பட்டது.

ஆசிய நாடுகள் தலைதூக்கின

ஆசியாவின் முக்யத்துவத்தை உணரச் செய்வதற்கு காரணம் இரு புரட்சிகள் ஏககாலத்தில் ஏற்பட்டதாகும். ஒன்று இந்தியாவிலும் மற்றொன்று சீனுவிலும் ஏற்பட்டது. 1947-ல் இந்தியா சர்வதேச அரங்கில் சுதந்திரநாடாக தலைதூக்கியது. 1949 அக்டோபரில் சீனுவை குடியரசாகப் பிரகடனப் படுத்தினர். இதற்கிடையே 8 கோடி மக்கள் கொண்ட இந்தோனேஷ்யாவும் 2 கோடி ஜனத்தொகை கொண்ட பர்மாவும் சுதந்திர நாடுகளாகத் தலை தூக்கின.

இந்தியாவில் மிக அமைதியான முறையில் ஏற்பட்ட அதிகார மாற்றமும் திட்டமான அரசியல் நிலைமையும் இந்தியாவில் ஏற்பட்ட மாறுதலை புரட்சிகரமாக எடுத்துக் காட்டவில்லை

கே. எம். பணிக்கர்



ஸ்ரீ பணிக்கர் சீனாவில் இந்திய ஸ்தானிகராக இருந்தபோது எடுக்கப்பட்ட படம். அவர் அருகிலிருப்பவர் சீனக் குடியரசுத் தலைவர் மாசேதுங்.

சீனாவில் வெகு நீண்ட காலமாக அரசியல் துறையில் லாயக்கற்றவர்களாக வைக்கப்பட்டிருந்த 60 கோடி மக்கள் ஒரே நிர்வாகத்தின் கீழ் ஐக்கியப்பட்டு மக்கள் குடியரசாக பிரகடனப் படுத்தப்பட்டது உலகசரித்திரத்திலேயே முக்கிய இடம் பெறத்தக்கதாகும். இவ்விரண்டு நாடுகளின் மாறுதல்களும் ஒரு புது நிலைமையை உண்டாக்கியது. இதை ராஜதந்திரிகள் பலர் எதிர்பார்க்கவுமில்லை. நினைத்துப் பார்க்கவுமில்லை.

1947-ல் அரசியல் நிலைமை பற்றி அலசி எழுதிய பிரபல விமர்சகர் ஒருவர் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் வாபஸானால் தென் ஆசியாவிலேயே அரசியல் சூன்யம் ஏற்பட்டு விடும் என்றும் இந்திய சர்க்கார் நிர்வாகத் திறமையின்றி முறிந்து விடும் என்றும் எழுதினர். ஐரோப்பாவிலுள்ள மக்கள் அநேகர் பிட்டிஷார் வெளியேறியபின் என்னவாகும் என்ற பெரிய கேள்விக் குறியையே போட்டவண்ணமிருந்தனர். பிரிட்டனின் உதவியின்றி தென் ஆசியா கலகலத்து விடும் என்றே அவர்கள் எதிர்பார்த்தனர். இந்தியா 'குட்டிச்சுவராகப் போய்விட்டது' என்று சர்ச்சில் சொன்னதைத் தவிர, இந்தியா திறமையாக தலைதூக்கும் என்ற நம்பிக்கை காணவில்லை. சர்வதேச அரங்கில் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளப் போகும் நாடு தலைதூக்கியுள்ளது என்கிற எண்ணமும் காணவில்லை.

சீனாவைப் பற்றி ஜோஸ்யம் சொன்னவர்கள் இன்னும் மோசமாக வர்ணித்தனர். சீனாவில் பலமான மத்திய சர்க்கார் ஒன்று ஏற்படும் என்பதையே 1947-ல் நினைத்துப் பார்க்கக்கூட

யாரும் தயாராகஇல்லை. மக்கள் குடியரசு பீகிங்கில் பிரகடனப் படுத்தப்பட்ட பின்னரும் கூட அநேக ஐரோப்பிய நாடுகள் சீனாவில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை என்றே கருதின. கம்யூனிஸ்டு நிர்வாகம் குலைந்து விடவில்லை என்றாலும் சர்வ தேச விவகாரங்களில் சீனா முக்கிய பங்கெடுத்துக் கொள்ள இன்னும் அநேக வருஷங்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆறு வருஷங்களுக்கு முன்பு இருந்த நிலைமை இது.

இன்று இந்தியா சீனாவுக்கு வேண்டாதவர்கள் கூட இந்தியாவிலும் சீனாவிலும் நிர்வாகம் குலைந்துவிடும் என்று நம்பத் தயாராக இல்லை. சர்வ தேச அரங்கில் இந்தியாவின் நிலைமை மிகவும் பலப்பட்டுள்ளது. சில வல்லரசுகள் சீனா புத்துயிர் பெற்றிருப்பதை உணர மறுத்ததால், சீனா இன்று மிக முக்கியம் வாய்ந்த நாடாக ஆசியாவில் தலை தூக்கியுள்ளது. ஆசியா சம்பந்தப் பட்ட எப்பிரச்னையும் திருப்திகரமாகத்தீர்க்க பீகிங் சர்க்கார் ஒத்துழைப்பு இல்லாமல் சாத்தியமில்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேல் நாடுகளின் கண்மூடித்தனம்

மேல் நாடுகள் தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்ற தவறான மனப்பான்மையைக் கொண்டிருப்பது காரணமாகவே இம் மாறுதல்களை அவைகளால் உணர முடியவில்லை.

யுவான் ஷிகயப் ஆட்சியில் சீனர்கள் ஆசியாவில் தலை தூக்க முடியாமல் அமிழ்த்தப் பட்டிருந்ததன் காரணம் சீனாவுக்குப் பொருளாதார சுதந்திரமும் பலத்த சைன்யமும் கிடைத்தால் வல்லரசாக தலைதூக்கி விடும் என்ற பயம் இருந்துவந்ததால்தான். இந்த நிலை 1949-ல் உண்மையாகவே ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்த உண்மை மேற்கு நாடுகளுக்குப் புலப்பட கொரியாவில் 18 மாதங்கள் போர் நடைபெற வேண்டியிருந்தது.

சீனாவில் ஏற்பட்டுள்ள இம் மாறுதல்களை ஆரம்பம் முதற் கொண்டே இந்தியா உணர்ந்து வந்திருக்கிறது. இந்தியாவும் சீனாவும் ஒத்து வாழ்வது மூலம் தான் ஆசியாவில் அமைதியை நிலவச் செய்ய முடியும் என்பதை இந்தியா உணர்ந்துள்ளது.

பரஸ்பரம் ஒத்துப் போவது சாத்தியமா?

ஒரு கம்யூனிஸ்டு நாடும் கம்யூனிஸ்டு அல்லாத மற்றொரு நாடும் பரஸ்பரம்ஒத்துபோவது சாத்தியமா? ஒத்துப் போவது சாத்தியமேஇல்லை என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். இரு கொள்கைகளுக்கிடையே மகத்தான முரண்பாடுகள் உள்ளன என்பதை லெனின் கூறியிருக்கிறார். ஆனால் லெனின் என்ன சொல்லியிருந்தாலும் அது அணுகுண்டு சகாப்தத்திற்கு முன்புள்ள காலத்தைப் பற்றியது. இன்று அணுகுண்டு வெடித்தால் கம்யூனிஸ்டுநாடு, கம்யூனிஸ்டு அல்லாத நாடு எல்லாம் அழிய வேண்டியதுதான். ஆகவே ஒத்துப்போவது சாத்தியமே என்று இந்தியா நினைக்கிறது.

இந்தியாவின் இக் கருத்து மிகவும்சரியே என்பது இந்தியப் பிரதமரும், சீனப் பிரதமரும் கூட்டாக வெளியிட்ட 5 அம்ச அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. ★

தமிழ் உயர

ம. பொ. சிவஞானம்

தமிழ் நாட்டினர் ஸ்ரீ ம. பொ. சியின் பொன் விழாக் கொண்டாட்டத்தை சென்ற திங்களில் மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். அதையொட்டி ஸ்ரீ ம. பொ. சி. விடுத்த செய்தி இங்கு கட்டுரையாகப் பிரசுரிக்கப்படுகிறது.

தலைவர் ம. பொ சிவஞானம் அவர்கள் பொன் விழாவையொட்டி விடுத்த செய்தியில் ''தமிழால் வாழுங்கள், தமிழையும் வாழவையுங்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார். அவர் இதை விளக்கி எழுதியிருப்பதாவது: ''தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழமுடியும். இதை மறந்தால் தமிழகம் தாழ்ந்து விடும்.

''வரப்புயர'' என்று ஒரு வார்த்தைக்கு ஒளவைப் பாட்டி சொன்ன வியாக்யானம் தமிழர் அறிந்ததே. அது போல தமிழ் உயர எல்லாம் உயரும்; தமிழ் தாழ்ந்தால் எல்லாம் தாழ்ந்து விடும். அதனால்தான் நான் தமிழ்ப்பணியை முதற்பணியாகக் கொள்ளுமாறு தமிழ்மக்களை வேண்டுகிறேன். தமிழ் வளர்ச்சி என்றால் புலவர்களைப் பேச வைத்து, பொழுது போக்காக ரசிப்பதல்ல. பாட்டாளியின் வாழ்வு முதல் பல்கலைக்கழகம்வரை எல்லாத் துறைகளிலும் தமிழுக்கே முதலிடம் இருக்க வேண்டும்.

ம. பொ. சி. தம்பதிகள்

ம. பொ. சி. கௌரவிக்கப்படுகிறார்

தமிழ்வளர்ச்சி என்பதற்கு என் வியாக்யானம் இதுதான்.

"ஆனால் தமிழ் வளர்ச்சி காரணமாக பண்பு கெட்ட வகையில் தமிழரிடையே பூசலும் போராட்டமும் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அது 'குளிக்கப்போனவன் சேற்றைப் பூசிக்கொண்ட' செயலை ஒக்கும். நிச்சயமாக தமிழன் பெயரால் சாதிவழிசண்டைக்கு இடம்தருவது தமிழ் இனத்தையே சீர்குலைப்பதாகும். இந்தத்தவறை தமிழரில் யாரும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் செய்யக்கூடாதென்பது எனது இடைவிடாத வேண்டுகோள்

"நாம் யாராயிருப்பினும் எந்தக் கட்சியிலிருப்பினும் தமிழகம் வாழ வேண்டும். தமிழர் நலன்வளர வேண்டும். சிதைந்துகிடக்கிற தமிழகம் ஒன்று சேரவேண்டு தமிழர் நெறிகள் எல்லாம் ஓங்கிவளர வேண்டும் என்று எண்ணுவதில் நமக்குள் கருத்து வேற்றுமை கூடாது.

"அறிவும் பணமும் சேர்ந்த ஒன்றுக்குப் பெயர்—தமிழ்.

"அந்த தமிழ் வழங்கும் நிலத்திற்குப் பெயர்தான் தமிழ்நாடு.

"அந்த தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பாடுபடும் தொண்டனுக்குப் பெயர்தான்-ம.பொ. சிவஞானம்."

பணமுடிப்பு அளிக்கப்படும் காட்சி

காமன்வெல்த்தில் இருப்பது நல்லதா? கெட்டதா?

காமன் வெல்த் நாடுகளின் பிரதமர்கள் மகாநாடு இப்போது லண்டனில் நடைபெற்று வருகிறது. இந்தியா காமன்வெல்த்தில் இருப்பதால் பாரதப் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு அம்மகாநாட்டில் கலந்து கொள்ள லண்டன் சென்றிருக்கிருர். அங்கு இலங்கை இந்தியர் பிரச்னை விஷயமாக இலங்கைப் பிரதமர் ஸ்ரீ பண்டார நாயகாவுடன் அவர் கலந்து பேசியிருக்கிருர். நிறத்திமிர் பிரச்னை கொண்ட தென்னப்பிரிக்கப் பிரச்னை விஷயமாகவும் அவர் அந்நாட்டுப் பிரதமருடன் கலந்துபேசி யிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே பல நாடுகளின் தலைவர்களுடன் உள்ள பிரச்னைகள் விஷயமாகப் பேசி, பிரச்னை தீர வழிகாண சந்தர்ப்பங்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. எதுவுமே நேரில் பேசி தீர்ப்பதைப்போல இரா என்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு, காமன்வெல்த்தில் இந்தியா இருக்குமா அல்லது விலகுமா என்ற பிரச்னையில் பலரும் சிரத்தை காட்டினர். 150 வருஷ காலமாக அடக்கி ஆண்டு, அடக்கு முறைகளால் ஆட்சி நடத்தியவர்களுடன் இந்தியா என்றும் குலவாது என்றே பலரும் நினைத்தனர். ஆனல் நேரு சர்வ தேசியவாதி. அவர் காமன் வெல்த்தில் இந்தியா இருந்து வருவதினுல் இந்தியாவிற்கு நன்மையே ஏற்படும் என்பதைக் கண்டார். சுதந்திர இந்தியா காமன் வெல்த்தில் இருப்பதற்காக காமன் வெல்த் அமைப்பும் மாற்றி அமைக்கப்பட்டது. முன்பெல்லாம் காமன் வெல்த் நாட்டின் அங்கத்தினராக இருக்கவேண்டும் என்ருல் பிரிட்டிஷ் ஆட்சியை நடத்தும் ராணி அல்லது ராஜாவிடம் விஸ்வாசம் தெரிவித்து பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த ஏற்பாடு ரத்துசெய்யப்பட்டதால்தான் சுதந்திர இந்தியா காமன் வெல்த்தில் மெம்பராகச் சேர முடிந்தது.

இந்தியாவின் கருத்துகளுக்கு இப்போது உலக நாடுகள் எல்லாமே மதிப்பு கொடுத்து வருகின்றன. காமன் வெல்த்

காமன்வெல்த் நாடுகளின் பிரதமர்கள்

மகாநாடுகளில் நேரு என்ன கருத்தை வெளியிடப்போகிறார் என்பதை இதர காமன் வெல்த் நாடுகள் உன்னிப்பாகக் கவனிக்கின்றன. நேருஜியின் அயல் நாட்டு கொள்கை காரணமாகவே சர்வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பு இவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறது.

இனி காமன் வெல்த்தில் இந்தியா இருக்கக் கூடாது என்று சொல்பவர்களின் வாதத்தைக் கவனிப்போம்.

காமன் வெல்த்தில் நம்முடன் உள்ள பிரிட்டன், கோவா போராட்டத்தில் நம்மை ஆதரித்ததா? நமக்கு பிரயோசனமில்லாத காமன் வெல்த்தில் நாம் யிருக்க வேண்டுமா என்பதையும் ஆலோசிக்க வேண்டும். காமன் வெல்த்தில் 'காமனு' க(பொதுப்படையாக) எதுவும் இல்லை. பங்குபோட்டுக் கொள்ள 'வெல்த்' (செல்வம்) இல்லை. நம்நாட்டைச் சுரண்டி கொள்ளை யடித்து, தாங்கள் பணக்காரர்களாகி நம்மை வறுமையில் வீழ்த்திய பிரிட்டிஷார் தான் இப்போது நம் பொருளாதாரம் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். எனவே இக்காமன் வெல்த்திடம் காதல் ஏன்? இக்கருத்தை மனதில் கொண்டு தானோ என்னவோ பர்மா சுதந்திர மடைந்தபின் காமன் வெல்த்தில் சேரவில்லை.

குடியரசாகப்போகும் இலங்கை காமன் வெல்த்தில் மெம்பராக இருக்கப்போவதாக அதன் பிரதமர் ஸ்ரீ பண்டார நாயகா அறிவித்திருக்கிறார்.

இன்றுள்ள நிலையில் எந்த நாடும் தனித்துவாழ இயலாது. பழைய குரோதங்களையும் துவேஷங்களையும் மனதில் கொள்ளாது சமாதானம் நிலவ வழிபார்க்க வேண்டும். நமது இந்தியாவின் கொள்கை இது தான். இந்தியாவின் பிரதமர் நேரு சரியான பாதையில்தான் நாட்டைக்கொண்டுசெல்கிறார்.

பொது அம்சங்கள்

பிரிட்டிஷ் ராணியை காமன் வெல்த்தின் தலைவி என்று குடியரசுநாடுகள் ஏற்பது உணர்ச்சி பூர்வமான இணைப்பு. உலக வர்த்தகத்தில் கால் பாகம் காமன்வெல்த் நாடுகளிடையே நடைபெற்று வருகிறது.

அவற்றை சலுகைகளுடன் வாங்கிக் கொள்ள சலுகைகள் உள்ளன. எல்லா காமன்வெல்த் நாடுகளிலும் ஜனநாயக ஆட்சி முறை பிரிட்டிஷ் ஏற்பாட்டை அனுசரித்ததாக இருக்கிறது. உலக விவகாரங்களைப் பொதுக் கண்ணோட்டத்துடன் ஆராய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று சொல்லலாம். எந்த மெம்பரேனும் ஆட்சேபிக்கும் விஷயத்தை மகாநாடு விவாதிப்பதில்லை என்பது சம்பிரதாயம்.

ராணுவ உடன்பாடுகள்

இந்தியா இலங்கை இவ்விரண்டு நாடுகளும் எவ்வித ராணுவ உடன்பாட்டிலும் சேராதவை. ராணுவ உடன்பாடுகள் அபாயகரமானவை. கூட்டுப் பாதுகாப்புக்கு உகந்ததாக ஐநாவை உருவாக்குவதே சாலச் சிறந்தது என்பது இந்தியாவின் அபிப்ராயம். இலங்கையும் இதே அபிப்ராயத்தைக் கொண்டதாக இருக்கிறது. முந்திய கூட்டம் போலவே ராணுவப் பேச்சில் இந்தியா கலந்து கொள்ளவில்லை.

காமன்வெல்த் நாடுகள் நிகழ்ச்சி நிரலை வைத்துக் கொண்டு பேசுவதில்லை. வோட் எடுத்து முடிவு செய்வதுமில்லை. கருத்துகளை பரிமாறிக் கொள்வதுதான் இதன் நோக்கம். ★

இந்தியாவின் நிலப்பிரிவுகள்

டாக்டர் ஆர். ஆர். அகர்வால்

"பூமி உள்ளளவும் விதைப்புக் காலமும் அறுவடைக் காலமும் இருந்துகொண்டே இருக்கும்" என்று பைபிளில் கூறப்பட்டிருக்கிறது. நமது விவசாயிகளும் அந்த நம்பிக்கையோடுதான் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். நிலத்தைச் சரியானபடி கவனித்து வேலை செய்கிற விவசாயிகளுக்கு நிலத்தின் தன்மையையும் சூழ்நிலையையும் அனுசரித்த நிச்சயமாய் ஓரளவுக்குப் பலன் கிடைத்துத்தான் வருகிறது.

இந்தியாவில் ஐந்து பிரதான நிலப் பிரிவுகள் இருக்கின்றன. பயிர் போஷணையை நிர்ணயிக்கக் கூடியவையும் இறுதியில் உணவுற்பத்தியை நிர்ணயிக்கக் கூடியவையுமான மண்ராசியைப் பற்றிச் சிறிது ஆராயலாம்.

பயிர் போஷணையை ஊட்டுகிற ஆதார அம்சங்கள் நைட்ரஜன், பாஸ்பரஸ் பொட்டாஷ், சுண்ணும்புச்சத்து, சொற்ப அளவில் இதர சில பொருள்கள் ஆகியவைதான்.

மித உஷ்ண மலைப் பகுதிகள்

ஹிமயமலைப் பகுதிகளில் உள்ள மித உஷ்ணப் பிரதேசங்களில் குளிர்ச்சியும் ஈரமும் இருப்பதால் ஊசிமுனை மரங்கள் செழித்து வளருகின்றன. அந்த மரவகைகள் இயற்கையாக அழுகிப் போவதாலும் ஏராளமான மழை அல்லது பனி விழுவதாலும் பூமியில் திராவக நீர் இறங்கிவிடுகிறது. அந்த நிலையில் உருவாகிற மண்ணில் அதிக திராவகக் கலப்பு இருக்கும்; அதைப் பரீட்சித்தால் திராவகச் சேர்க்கை புலப்படும்; அதில் பெருமளவுக்கு "ஆர்கானிக்" பொருள் இருக்கும். அந்த ஆர்கானிக் பொருள் அழுகும்போது தாவரங்களுக்கு ஏராளமான நைட்ரஜன் கிடைக்கும்.

திராவகம் அதிகமாய் பூமியை அரிப்பதால், சுண்ணும்புச் சத்தும் பாஸ்பரஸ் சத்தும் குறைந்து விடுகின்றன. திடமான பயிர் விளைவதற்கும் போதிய அளவில் அந்த போஷணைப் பொருள்கள் கிடைப்பதில்லை. ஆனால், செயற்கை முறையில் சுண்ணும்புச் சத்தையும் பாஸ்பரஸ் ரக ரசாயன உரங்களையும் போட்டு அந்த பூமிகளில் நாம் தாவரங்களை வளர்க்கக் கற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த பூமிகள் இம்மாதிரியான பக்குவ முறைகளுக்கு நல்ல பலன் தருகின்றன.

சிந்து-கங்கை வண்டல் பிரதேசம்

சிந்து-கங்கை சமவெளிப் பிரதேசத்தில் உள்ள பூமியில் "ஆர்கானிக்" பொருள்கள் குறைவு; நைட்ரஜன் பற்றுக் குறையாக இருக்கும்; பாஸ்பேட்டுகள் மத்திய அளவிலிருந்து குறைந்த மட்டம் வரையில் பல தரப்பட்டிருக்கும். ஆனால் பொட்டாஷியம், சுண்ணும்புச் சத்து, இதர தாவர போஷணைப் பொருள்கள் முதலியவை கணிசமாக இருக்கும்.

இந்த பூமிகளில் மிக மிகக் களிமண்ணாக இருக்கும் இடங்கள் தவிர, பெரும் பகுதிப் பிரதேசத்திலும் பரல் பரலாக மண் இருக்கும். அந்த பூமிகளில் பக்குவ முறை செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பாசன வசதி இருந்தால் அந்த பூமிகள் சுலபமாய் பலன் தரும். இந்தியாவிலேயே நீர்ப்பாசன வசதியுள்ள விஸ்தாரமான பூமி அந்த மண்டலத்தில்தான் இருக்கிறது.

இதர போஷணைச் சத்துக்கள் இருந்தபோதிலும் நைட்ரஜன் சத்துக் குறைவாக இருப்பதால், வண்டல் பூமியின் உற்பத்தி சக்தி மட்டுப்படுகிறது. எனவே, அந்த

பூமிகளில் பயிர்களின் போஷணைப் பிரச்னை, ஆர்கானிக் பொருள், நைட்ரஜன் சத்து ஆகியவை சம்பந்தமான பிரச்னைதான். ஏராளமான பாசன வசதி உள்ள பிரதேசம் ஆனபடியால் பூமியிலுள்ள நைட்ரஜன் சத்து சீக்கிரமாகக் குறைந்து விடுகிறது. அதனால், மூதிரைப் பயிர் வகைகளைத் தழை உரமாகப் பயிரிடும் முறை சிறந்த முறையாக அங்கே கையாளப் படுகிறது.

சுண்ணம்பு அதிகமாக இருப்பதால் பாஸ்பேட்டுகளை ஏராளமாகச் சேர்த்துப் பயன் பெற வழியில்லை. பாஸ்பேட்டு ரக ரசாயன உரங்களை வளரும் பயிர்களின் வேர் அருகில் நைட்ரஜன் உரத்தின் மீது வரிசை வரிசையாகக் கொட்டினால், அபார விளைச்சல் காணுகிறது என்று பரிசோதனை மூலம் தெரிய வந்திருக்கிறது.

பாலைவன பூமி

பாலைவன பூமிகளில் தாவரங்களுக்கு வேண்டிய கனிப்பொருள் ஏராளமாக இருக்கின்றன; ஆனால், ஆர்கானிக் பொருள்களும் நைட்ரஜன் சத்தும் மிகக் குறைவு.

பாலைவனப் பகுதிகளில் பாசன வசதி ஏற்படுத்துவது தான் முதன்மையான பிரச்னை. பாசன வசதி இல்லாவிட்டால், பயிர் மோசமாகத்தான் இருக்கும்; தானியம் மட்டமாயிருப்பதுடன், மாசூலும் நிச்சயமாயிராது. எனவே, அங்கே ஈரம் எவ்வளவு என்பதுதான் பிரச்னையே தவிர, மண் ராசி அல்ல.

பாசன வசதி இருந்தால், பிறகு பயிர் போஷணை கவனிக்கத்தக்க அம்சமாகிவிடும். பொட்டாஷியம் ஏராளமாக இருந்தாலும், பாஸ்பரஸ் அதிகம் கிடைக்காது; சுண்ணம்பு அதிகமாயிருப்பதால் பாஸ்பரஸ் அதிகமாய் வெளிப்படாது. பாசனத் தண்ணீர் கிடைத்தால், நைட்ரஜன், பாஸ்பரஸ் ரக உரங்கள் போடுவது அவசியமாகும்.

செம்மண் பூமி

இந்தியாவில் ஏராளமான செம்மண் பூமியும் "லாட்டரைட்" பூமியும் இருக்கின்றன; முக்கியமாகத் தென்னிந்தியாவிலும் கிழக்கிந்தியாவிலும் அவை உள்ளன. சாதாரணமாக "லாட்டரைட்" பூமி பூமத்தியரேகை மண்டலத்தில் காணப்படும். இந்த பூமிகளைப் பருவக் கோளாறுகள் அதிகமாய்ப் பாதிக்கும்; அவைகளில் திராவக அரிப்பும் அதிகமாக இருக்கும். இரும்பு அதிகமாயிருப்பதால்தான் சிவப்பு நிறம் இருக்கிறது. ஆனால் இந்த பூமியில் தாவரங்களுக்குத் தருந்த போஷணைச் சத்துக்கள் இல்லை. பாஸ்பேட்டுகளைச் செடிகளுக்குக் கிடைக்காத விதத்தில் கெட்டிப்படுத்தி விடுகிற குணமும் அதற்கு உண்டு.

செம்மண் பூமியிலும், லாட்டரைட் பூமியிலும் லாபகரமாக சாகுபடி-செய்வதற்கு விசேஷ பக்குவ முறை அவசியம். சுண்ணம்பு சேர்ப்பதும், ரசாயன உரம் போடுவதும் அதற்கு ஏற்ற முறை. ஆனால் ஏதாவது ஒரு கனிப் பொருள் அபரிமிதமாக இருந்து விட்டால், சமநிலை சீக்கிரம் குறைந்துவிடும்.

திராவகச் சேர்க்கையை சமனப் படுத்துவதற்குப் போதிய சுண்ணம்பு சேர்த்தால்தான் போதுமான அளவில் பாஸ்பேட் ரக போஷணை கிடைக்கும்.

கரிசல் பூமி

கரிசல் மண் பூமி தக்ஷிணத்தில் ஏராளம். பசால்ட் ரக மண்மீது அது படிந்திருக்கிறது. அது களிச் சத்து அதிகம் உள்ளது. அடிக்கடி விரியவும், குறுகவும் செய்யுமாதலால், வறட்சியின் போது வெடிப்பு ஏராளம் காணும்.

பெரும்பாலான கரிசல் மண் பூமியிலும் பாசன வசதி கிடையாது. மழையும் சொற்பம். அதில் புஞ்சை சாகுபடிதான் சகஜமாக நடக்கிறது. பாசனவசதி கிடைக்கும் இடங்களில் நல்ல பலன் உண்டு.

இந்த பூமிகள் விஷயத்தில் பூசாரப் பிரச்னை அதிகம் இல்லை. பயிர்களை மாற்றி மாற்றி சாகுபடி செய்தாலே மண்வளம் சரிவரப் பாதுகாக்கப் பட்டுவிடும். ஈரத்தைக் காப்பாற்றிவிட்டால் மாசூலை அதிகரித்துவிடலாம். ★

ஆடி அழைக்கிறது

"தனுசு"

'ஆடி பண்கைகளை அழைக்கிறது. பூசம் போகச் சொல்கிறது' என்று சொல்வதுண்டு. ஆடி மாதப் பிறப்பு முதல் தை மாதம் வரையில் ஒரே பண்டிகை மயம்தான். தை மாதம் பிறந்து விட்டால், கலியாண ஸீஸன் ஆரம்பித்து ஆனி 32 தேதி வரை நீடிப்பதால் இந்தப் பண்டிகைகளை எல்லாம் கொண்டாட அவகாசமிருக்காது என்றுதானே என்னவோ இப்படி அமைத்திருக்கிறார்கள். கலியாணமான பின் மாப்பிள்ளையை ஆடிக்கு அழைத்து உபசரிப்பதிலிருந்து தலைதீபாவளி வரை எல்லாம் ஒரே விருந்து மயம்தான்.

காவேரி அம்மன் பிரீதிக்காக ஆடிக்கு தேங்காய் பால் காய்ச்சுவதும், ஆடி 18 உயன்று காவேரி அம்மன் மசக்கை கொண்டிருப்பதற்காக சித்ரான்னங்களை தயார் செய்து நிவேதனம் செய்வதும் வழக்கம். ஆடி பிறந்ததும் தக்ஷிணாயனம் ஆரம்பமாகிறது. ஆடிப் பண்டிகைக்குப்பின் ஆவணி அவிட்டம், வரலக்ஷமி நோன்பு, பிள்ளையார் சதுர்த்தி, கோகுலாஷ்டமி, நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை தீபம், ஆருத்திரா, பொங்கல் இத்யாதி பண்டிகைகள் ஒன்றன்பின் ஒன்ருக வரும்.

பண்டிகை என்பது உற்ருர் உறவினருடன் சந்தோஷமாக இருந்து விருந்துண்ணவே ஏற்பட்டது. ஆனல், இப்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் பண்டிகைகளைக் கண்டாலே பயப்பட வேண்டியிருக்கிறது.

இப்போது பண்டிகை நாட்களைக் கண்டு பயப்படுவதுடன் அல்லாமல், அவைகளை வெறுக்கவும் ஆரம்பித்து விட்டார்கள். இதற்கு தூண்டுதலாக சில அரசியல் கட்சிகளும் 'இதைக் கொண்டாடாதே, அதைக் கொண்டாடாதே' என்று பிரசாரம் செய்து வருகின்றன.

பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட பண்டிகை நாட்களின் கருத்துக்களை ஆராய்வோமானல் சாதாரண குடும்பத்தினர், சொற்ப செலவில் சில நாட்களாவது உழைப்பிலிருந்து ஓய்வு பெற்று உற்ருர் உறவினருடன் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவைகளை எளிய முறையில் கொண்டாடுவதென்று நிச்சயித்தால் அவைகளைக் கண்டு பயப்படவேண்டியது அவசியமில்லை.

காவிரி

தென்னுட்டு ஜீவநதிகளில் ஒன்ருன காவிரிக்கு ஏன் அந்தப் பெயர் வந்தது? கவேரம் என்னும் மலையினின்று இழிந்தது என்றும், கவேரன் என்னும் அரசனுக்கு மகள் என்றும் தமிழ் அறிஞர்கள் கூறுகின்றனர். அகத்தியர் கங்கை நீரைக் கமண்டலத்தில் கொண்டு பொதிய மலைக்குச் செல்லும் போது, கவேர மலைக்கு அருகில் வருகையில் விநாயகர் காக்கையுருக்கொண்டு அதனைக் கவிழ்த்துவிட, அது காவிரியாகப் பெருகிற்று என்பதும் ஆராய்ச்சியாளர்கள் கருத்து.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்

ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் ஏற்பட்டு 11 வருஷங்கள் ஆகின்றன. 1945 ஜூன் 20-ம் தேதி இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் விவரங்களையும் இந்த ஸ்தாபனத்தின் கட்டிடம் பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது. இக் கட்டுரையின் முன் பகுதியை எழுதியவர் கே. துகாராம்.

உலக அமைதியை முற்றிலும் குலைக்கும் வண்ணம் ஏற்பட்ட முதல் உலகப் போருக்குப்பின் உலக அமைதியைக் காக்கும் பொருட்டு ஸ்விட்ஜர்லாந்தில் உள்ள ஜினிவா என்னும் இடத்தில் பல நாடுகள் மகாநாடு கூடி ஆலோசித்து,

ஐ. நா. கட்டிடம் முன்பு மெம்பர் நாடுகளின் கொடிகள் பறக்கின்றன.



1945ல் ஸான்பிரான்ஸிஸ்கோவிலுள்ள இக்கட்டிடத்தில்தான் இந்த ஸ்தாபனம் உதயமாயிற்று

அமெரிக்க குடியரசுத் தலைவரான உட்ரோ வில்ஸனின் முயற்சியால் சர்வதேச சங்கம் தோன்றியது. ஆனால் இது ஏற்பட மிகவும் முயன்ற அமெரிக்காவினாலேயே இதில் சேர முடியாததால், இது வலிமை இழந்தது. மேலும் அச்சங்கத்தின் கொள்கைகளை மீறிய அரசுகளின் மீது சரிவர நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆகையால் ஜப்பான், இதாலி போன்ற நாடுகள் இதிலிருந்துவிலகி மற்ற நாடுகளை ஆக்ரமிக்கத் தொடங்கின. இதனால் இச்சங்கம் அழிந்தது.



ஐ.நா. சாசனத்தில் கையெழுத்து இடப்படுகிறது

இச்சங்கம் அழிந்த பிறகு இதேமாதிரியாக ஐக்கிய நாடுகளின் சங்கம் ஏற்பட்டது. இது ஏற்படக்காரணம், இரண்டாம் உலகப் போர் ஆகும். இது எவ்வாறு தோன்றியது என்பதைப் பார்ப்போம்.

இரண்டாம் உலகப் போர் நடக்கையில் ஐக்கிய தேசத்தின் முக்கிய தலைவர்கள் 1944-ல் அமெரிக்காவில் வாஷிங்டன் அருகில் உள்ள டம்பார்ட்டன்



ஐ.நா. பொதுச் சபையில் ஐஸன்ஹோவர் பேசுகிறார்.

ஓக்ஸ் என்னும் இடத்தில் கூடி, உலக அமைதிக்காக ஒரு சங்கம் நிறுவவேண்டியதின் அவசியம் பற்றிப் பேசினார்கள். பின்னர் 1945-ல் ஸான்பிரான்ஸிஸ்கோவில் ஐம்பது பிரதிநிதிகளைக் கொண்ட ஐக்கிய தேச மகாநாடு ஒன்று கூட்டப்பட்டு, அதன் மூலம் அவ்வாண்டு அக்டோபர் மாதம் 24-ஆம் தேதி ஐக்கிய நாட்டின் அமைப்பு நிறுவப்பட்டது. இதன் தலைமைக் காரியாலயம் நியூயார்க்கைச்

சேர்ந்த மான் ஹாட்டன் என்னும் பெரிய மாளிகையில் உள்ளது.

நியூயார்க்கிலுள்ள ஐ.நா. செகரிடேரியட் கட்டிடம்

ஐக்கிய நாட்டின் முக்கிய கொள்கைகள் என்னவெனில் மற்ருெரு உலகப் போர் வரா வண்ணம் காத்தல். மனிதனின் அடிப்படையான உரிமைகளையும், மதிப்பையும் காத்தல். பெரிய தேசங்களாயினும், சிறிய தேசங்களாயினும் அவற்றின் உரிமைகளை அழியா வண்ணம் காத்தல். உலக மக்களின் சமூகம் உயர்வதற்கும், நல்வாழ்க்கை நடத்துவதற்கும் வசதிகள் அளித்தல். அங்கத்தினர் அனைவரும் தங்கள் பிரச்னைகளை அமைதியாக கூடி பேசி தீர்த்துக் கொள்ளுதல். எந்த அங்கத்தினர் மீதும் மற்ருெரு அங்கத்தினர் பலாத்காரமோ அல்லது அச்சுறுத்தலோ கூடாது. ஐக்கிய நாட்டு அமைப்பின் கொள்கைகளை மீறி நடக்கும் நாட்டின் மீது நடவடிக்கை எடுக்கும் போது அங்கமான ஏனைய நாடுகளும் அமைதிக்கு பல வகையிலும் துணை புரிய வேண்டும். அமைதிக்கு கேடு நேரிட்டால் அன்றி அங்கமான நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் ஐ. நா. தலையிடாது.

ஐ. நா. 6 அங்கங்களைக் கொண்டது. அவை 1. பொதுச் சபை. 2. பந்தோபஸ்து சபை. 3. பொருளாதார சமூக சபை. 4. தர்மகர்த்தா சபை 5. சர்வ தேச நீதி மன்றம் 6. காரியாலயம் என்பனவாகும்.

இவற்றின் வேலைகளை என்னவென்று ஓரளவு பார்ப்போம்.

பொதுச்சபை

ஒவ்வொரு நாட்டின் சார்பிலும் ஒரு பிரதிநிதி இதில் இருப்பார். 1954ல் இச்சபையில் 60 அங்கத்தினர்கள் இருந்தனர். மேலும் சில நாடுகள் விண்ணப்

ஐநாவின் தலைமைப் பதவியை திறம்பட வகித்த விஜயலக்ஷ்மி பண்டிட்

பித்துள்ளன. இதன் முக்கிய அங்கத்தினர்கள் பெரிய வல்லரசுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகியவைகளும், இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா முதலியனவுமாகும். இச்சபை ஆண்டிற்கு ஒரு முறைதான் கூடும். அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டும் பொருட்டு கூட்டுறவிற்கான விஷயங்களைச் சிந்தித்துச் சிபாரிசு செய்வதே அதன் முக்கிய கடமையாகும். அக்கிரம நாட்டைத் தண்டிக்க இதுபடைபலமும்திரட்டலாம்.

2. பந்தோபஸ்து சபை

இது 11 அங்கத்தினரைக் கொண்டது. இதில் 5 அதாவது 5 வல்லரசுகளும் நிரந்திர அங்கத்தினர்கள். மற்றைய 6 அங்கத்தினர் இரண்டு ஆண்டிற்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவர். உலக அமைதியையும், பாதுகாப்பையும், நிலைநிறுத்தல் இரு நாடுகளுக்குமிடையே ஏற்படும் விவாதத்தை ஆராய்தல், அக்கிரமத்தைத் தடுத்தல் முதலியன அதன் முக்ய கடமைகளாகும். இச்சபையில் தீர்மானங்களை நிறைவேற்ற $\frac{2}{3}$ பங்கு ஓட்டுக்கள் தேவை. அதாவது 7 ஓட்டுக்கள் ஆகும். இதில் கொண்டுவரப்படும் தீர்மானத்தை தடைசெய்ய நிரந்திர அங்கத்தினருக்குத் தடையதிகாரம் உண்டு.

3. பொருளாதார சமூகசபை

இது பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 அங்கத்தினரைக் கொண்டது. நாடுகளின் பொருளாதார, சமூக முன்னேற்றத்தைக் கவனிப்பது இதன் கடமையாகும்.



ஐ. நா. காரியதரிசி ஹாமர்ஷீல்ட்

4. தர்மகர்த்தா சபை

பிற்போக்கில்உள்ள நாட்டின் நலனையும் அவற்றின் சமூக பொருளாதார முன்னேற்றத்தையும் கவனித்து அவை சுய ஆட்சி பெறும்படி உதவி செய்யும். உதாரணமாக நியூகினி, ஆப்ரிக்காவில் டாங்கனிக்கா, மார்ஷல் தீவுகள் போன்றவைகள்.

5. சர்வதேச நீதி மன்றம்

இதுதான் ஐக்கிய நாட்டு சங்கத்தின் சட்ட நீதி மன்றம். அங்கத்தினர் நாடுகளுக்கிடையேஏற்பாடு சட்டசம்பந்தமான வீஷயங்களைப்பற்றி இது ஆலோசனை கூறும். 15 நீதிபதிகள் உள்ளனர். இது ஹாலண்ட் தேசத்தின் தலைநகரான தி ஹேக் என்னும் இடத்தில் இருக்கிறது.

6. காரியாலயம்

இது பொதுச் சபையால் நியமிக்கப்பட்ட பொதுச் செயலாளரையும் பலநாட்டைச் சேர்ந்த உத்யோகஸ்தர்களையும் கொண்டுள்ளது. இதில் பல அலுவல் துறைகள் உள்ளன.

ஐநா,வில் மேலும் சில பணிகளை ஆற்ற இதன் கீழ் பல கிளைகள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை எதுவெனில் உலகத் தொழிலாளியின் நலத்தைக் கவனிக்கும் பலநாட்டு தொழில் ஸ்தாபனம், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், போஷாக்கை வளர்க்கவும், உழவர்களின் நிலை உயர்த்தவும் பொருள்களைப் பெருக்கச் செய்யவும் பலநாடுகட்கு உதவி செய்யும் ஸ்தாபனம். மேலும் ஐக்கிய நாட்டு கல்வி, விஞ்ஞான பண்பாடு ஸ்தாபனம், மேலும் புனர் உத்தாரணத்திற்கு உதவி புரியும் பலநாட்டு பாங்கி. அங்கத்தினர் நாட்டுக்குகடன் தரும் பலநாட்டு செல்வ நிதி. உலக நாடுகளின் சுகாதாரத்தை வளர்க்கப் பாடுபடும் உலக சுகாதார ஸ்தாபனம்.

பாலஸ்தீன் விஷயமாகவும், இந்தோனேஷிய விஷயமாகவும் டுனிஷியா விஷயமாகவும், கொரியா விஷயமாகவும் ஐ.நா. ஆற்றிய பணி உலகறிந்தது ஆகும். மேலும் பின் தங்கிய நாடுகளுக்கு உதவி செய்வதும் போற்றுதற்குரியதாகும்.

நியூயார்க் நகரில் கிழக்கு நதிக்கரையோரமாக 39 மாடிகள் கொண்ட ஐக்கியநாட்டுஸ்தாபனத்தின் கட்டிடம் கம்பீரமாக நிற்கிறது. தூரத்திலிருந்து பார்க்க இது அவ்வளவு அழகாகத் தோன்றுதுதான். ஏதோ சிற்ப வேலையே இல்லாது மொட்டையாக வானளாவ ஒரு சுவர் எழுப்பப்பட்டது போல்தான் காட்சி அளிக்கிறது. ஆனால் உள்ளே நுழைந்தால் இந்த உலகத்தில் இருக்கும் கட்டிடமாகவே அது தோன்றவில்லை. நியூயார்க்கிலுள்ள இதர உயரமான கட்டிடங்களை அதற்கு ஒப்பிட்டுப் பார்த்தால் அவை மிக கர்நாடகமாகத் தோன்றுகின்றனவாம்.

இக்கட்டிடம் இருக்கும் பூமியே ஐக்கிய நாடுகளுக்குச் சொந்தமானது. கட்டிடத்திற்கு முன் திறந்த வெளியில் அங்கத்தினராக இருக்கும் அத்தனை நாடுகளின் தேசியக் கொடிகளும் காற்றில் பறந்து கொண்டிருக்கின்றன. இந்த ஐ.நா. செக்ரிடேரியட் கட்டிடத்திற்கு முன் ஒரு நீர்ச்சுனையும் உள்ளது. அமெரிக்கப் பள்ளிக்

குழந்தைகளிடமிருந்து சேகரித்த தருமப் பணத்தைக் கொண்டு இது கட்டப்பட்டது. இந்த நீர் ஊற்றுக்கு அடியிலுள்ள கருப்பு கூழாங் கற்கள் துருக்கி தேசத்திற்கு தென் மேற்கி லிருக்கும் 'ரோட்ஸ்' தீவிலிருந்து கொண்டுவரப் பட்டன.

இக் கட்டிடத்தின் ஒவ்வொரு அம்சமும் ஒரு புதுமை என்றே சொல்ல வேண்டும். எல்லாம் வழ வழ வென்று பள பளப்பாக காட்சி யளிக்கின்றன. அறைகள், ஹால்கள், மண்டபங்கள் எல்லாம்விஸ்தாரமாகக் கட்டப் பட்டிருக்கின்றன. இங்கு காணப்படும் சலவைக் கற்கள், வாசல் படிகள், கதவுகள், நாற்காலி,மேஜை முதலிய பொருள்கள், சிலைகள், ஓவியங்கள், ரத்தின கம்பள விரிப்புகள் எல்லாம் அங்கத்தினர் நாடுகளால் நன் கொடையாகக் கொடுக்கப் பட்டவை. இக் கட்டிடம் உலக சரித்திரத்திலேயே மனிதனின் சமாதான முயற்சிக்கு சிகரம்போல விளங்குகிறது.

இக் கட்டிடத்தில் ஒரே ஜன்னல்கள் மயம்தான். இக் கட்டிடத்தைச் சுற்றிப் பார்க்க டிக்கட் வாங்கியாக வேண்டும். கட்டிடத்தைச் சுற்றிக் காட்ட ஒரு தனி காரியாலயம் வேலை செய்கிறது.

இந்தியா பல அழகான ரத்தினக் கம்பளங்களேயும், ஜமக்காளங்களேயும், தாமரையில் அமர்ந்திருக்கும் புத்தர் சிலையொன்றையும் இக் கட்டிடத்திற்கு அளித்திருக்கிறது.

இக் கட்டிடத்தில் நடக்கும் மகாநாடுகளைப் பற்றிய தகவல்களை வெளி ஊருக்கு தெரிவிக்க செய்திப் படங்கள், பத்திரிகை படங்கள், ரேடியோ, டெலிவிஷன் முதலிய சாதனங்கள் எல்லாம் இங்கே அமைக்கப் பட்டுள்ளன. இக் கட்டிடத்திற்குள்ளேயே ஒருதபாலாபீஸும், சிற்றுண்டி சாலையும், ரேடியோ ஸ்டேஷனும் இருக்கின்றன. ஐ. நா. சபையில் ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யமொழி, சீனப் பாஷை, ஸ்பானிஷ் பாஷை முதலிய ஐந்து மொழிகளும் அரசாங்கபூர்வமாக உபயோகிக் கப்படுகின்றன. அங்கத்தினர் ஒருவர் இந்த ஐந்தில், எந்த பாஷையில் பேசினாலும் அது மற்ற நான்கிலும் மொழி பெயர்க்கப்படுகிறது.

இங்கே யுள்ள தபாலாபீஸ்களில் விற்கப்படும் ஸ்டாம்புகளே! அலாதிதான். இங்கிருக்கும் ரேடியோநிலையத்தி லிருந்து உலக பாஷைகளில் பதினைந்திற்கும் மேலாக ஒலி பரப்பப் படுகிறது. ★

நாடுகள் நகர்கின்றன

பிரிட்டன் வடதுருவ மண்டலத்தை நோக்கி வருஷத்துக்கு இரண்டங்குலம் நகர்ந்து கொண்டிருக்கிறது என்று பிரபல விஞ்ஞானி பி எம் எஸ் பிளாக்கெட் கூறுகிறார். பிரிட்டன் வடதுருவத்தை நோக்கி நகர்வதோடு நிற்கவில்லை. கடந்த 15 கோடி ஆண்டு காலத்தில் ஏறக்குறைய 34 டிகிரி திரும்பியுமிருக்கிறது. நூற்றாண்டுக்கு 3 மீட்டர் அல்லது ஏறக்குறைய 117 அங்குல வேகத்தில் கண்டங்களும் நகர்ந்து கொண்டிருக்கின்றன என்று நிரூபிக்கப் பட்டது. இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற கண்டங்கள் இப்போது பூமத்யரேகை மண்டலத்திலுள்ளன. ஆனால் அவை ஒரு காலத்தில் தென் துருவ மண்டலத்திலிருந்தனவாம்.



திருச்சி மலைக்கோட்டை சரித்திர பிரசித்திபெற்றதுடன் மட்டுமின்றி, புனித க்ஷேத்ரமுமாகும். திருச்சி சென்றவர்கள் இம்மலைக் கோட்டையைக் காணத் தவற மாட்டார்கள். இது தமிழ் நாட்டிலுள்ள கோட்டைகளுள் முக்கியமானது. இது பற்றிய படங்களையும் விவரங்களையும் அடுத்து வரும் பக்கங்களில் காணலாம்.

போட்டோக்கள் : சந்தாமியான்



திருச்சி மலைக்கோட்டை

லலிதா நடராஜ்

தமிழ் நாட்டில் சைவ ஸ்தலங்கள் 274 உள்ளன. அவற்றுள் பள்ளிஎன்ற முடிவை கொண்ட 8 திருப்பதிகளுள் திருச்சிராப்பள்ளி யொன்று. இது திருசிராமலை, திரிசிரபுரம், திரிசிரகிரி எனவும் பெயர்கள் பெறும். பள்ளி என்பதற்கு கோவில் என்ற பெயரும் உண்டு. திருசிரன் என்னும் அரக்கன் அரசாண்டு, இறைவனை வழிபட்டு, பேறு பெற்றதால் இப்பெயர் உண்டாயிற்று என்று சரித்திரம்கூறும், இதில் மூன்று சிகரங்கள் உள்ளமையால், இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். இக்கோயில் பார்ப்பதற்கு ரிஷபம்போல இருப்பதால் ரிஷபாசலம் எனவும் பெயர் பெறும்.

குகைக் கோயில்கள்

இவ்வாலயத்தில் மலையைக் குடைந்து அமைத்த இரண்டு குகைக் கோயில்கள் உள்ளன. ஒன்று மலையின் மேலும், மற்றொன்று அடிவாரத்திலும் உள்ளன. இங்கு வட மொழியிலும், தமிழிலும் கல் வெட்டுகள் உள்ளன. இவைகளிலிருந்து மகேந்திர வர்மன் என்ற பல்லவ அரசனால் இவை கட்டப்பட்டன என்று தெரிகிறது.



மலைக்கோட்டைக்குச் செல்லும் வழியிலுள்ள குகைக்கோயில்.
கோயிலிலுள்ள கண்ணைக் கவரும் சில அபூர்வ சித்திரங்கள்.









உச்சி மலைக்குப் போகும் வழியிலுள்ள மணிமண்டபம் 1919-ல் அமைக்கப்பட்டது. இதிலுள்ள மணி, நாகப்பட்டினம் ரயில்வே தொழிற்சாலையில் செய்யப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டது.

உச்சிப் பிள்ளையார் கோயில்

மாத்ருபூதேஸ்வரர் கோவிலைத் தவிர்த்து, உச்சிப் பிள்ளையார் கோவிலும் மலைமீதே உள்ளது. விபீஷணன் ராமரிடம் விடை பெற்று தெற்கே வந்த போது உடன்கொண்டு வந்த ரங்கனாதர் விக்ரகத்தை பிராம்மண உருவம் கொண்டு நின்ற விநாயகரிடம் கொடுத்துவிட்டு காலைக் கடன் முடிக்கச் சென்றான். விக்ரகத்தை கீழே வைக்கக் கூடாது என்பது நிபந்தனை. விநாயகர் சிறிது நேரம் வைத்திருந்துவிட்டு, விக்ரகத்தை தரையில் வைத்துவிட்டு ஓடிவந்து மலைமேல் அமர்ந்தார். விபீஷணன் விக்ரகத்தை எடுத்துப் பார்க்க முடியாமல் போக பிராம்மணச் சிறுவனை தேடிப் பார்க்கவும், அங்கு கண்ட விநாயகர் தலையில், ஓங்கிக் குட்டியதாகவும், ரங்கநாதர் வைக்கப்பட்ட இடம் தான் ஸ்ரீரங்கம் என்

கோட்டைக்கு செல்லுமுன் உள்ள வாசல். கடைத் தெருவிலிருந்து மலைக் கோட்டைக் காட்சிகள்.

றும் சொல்லப்படுகிறது. இவ்விவரங்களைக் காட்டும் சிலை 16 கால் மண்டபத்தில் ஒரு தூணில் செதுக்கப்பட்டுள்ளது.

உச்சிப் பிள்ளையார் கோயிலிலிருந்து நான்கு பக்கமும் காணும் காட்சி ஆகாய விமானத்திலிருந்து பார்ப்பது போலத் தோன்றும். இம்மலை 237 அடி உயரமுள்ளது. 417 படிகளைக் கொண்டது.

தாயாரான வரலாறு

சிவபெருமானை வழிபட்டு வந்த ரத்தினவதி என்ற வணிககுல மங்கை, திருசிரபுரத்தில் வாழ்ந்து கருவுற்றிருந்தாள். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த இவள் தாய், மகளுக்கு வேண்டிய மருந்து, எண்ணெய் முதலியவைகளுடன் புறப்பட்டு வரும்போது, காவிரியாற்றில் வெள்ளப்பெருக்கு மிகுதியால் மகளிடம் வந்து சேர முடியவில்லை. சிவபெருமான் ரத்னவதியின் தாய் வேடம் கொண்டு, பிரசவ வேதனையால் வருந்திய ரத்தினவதியின் வீட்டிற்குவந்து சேர்ந்தார் அன்பின் உருவான சிவபெருமான். ஆண் குழந்தை பிறந்தது. தாயாராக வந்தவர்



உச்சிப் பிள்ளையார் கோயிலிலிருந்து- திருச்சி நகரின் சில காட்சிகள்.



சில நாள் தங்கி தாயையும் குழந்தையையும் பாதுகாத்து வந்தார். வெள்ளம் வடிந்தவுடன் உண்மைத் தாய் நதியைக் கடந்து ரத்தினவதியின் வீட்டிற்கு வந்தாள். இரு தாய்களில் யார் உண்மைத் தாய் என்று தெரியாமல் திணறினாள் ரத்தினவதி. தாயாக வந்தவர் உடனே மறைந்து ரிஷப வாகனத்தில் காட்சி அளித்தார். இவ்வரலாறு பிரும்ம உத்ஸவத்தில் 5-வது திருவிழா வன்று நடத்தப்பட்டு வருகிறது.

சொக்கநாத நாயக்கர் என்கிற மதுரையை ஆண்ட அரசரால் இக்கோட்டை கட்டப்பட்டதாகும். உறையூர், சோழர் தலை நகரமாக யிருந்த போது திருச்சி சிற்றூராக இருந்தது. பிறகு அரண் அமைந்த நகரமாக ஆனதென்று தெரிகிறது. திருச்சிக் கருகாமையில் பல்லவருக்கும் பாண்டியர்களுக்கும் ஏற்பட்ட சண்டைகள் பல.

பெள்ளாளன் என்ற கர்நாடக அரசன் ஆட்சி நாளில் தான் மகம்மதியர் தென்னாடு புகுந்தனர். அப்போது கொள்ளிடக் கரைக் கடுத்த கண்ணனூர், முகம்மதியர் படை வீடாகயிருந்தது. இம் முகம்மதிய அரசாட்சியை அழித்து, அவர்களை தென்னிந்தியாவி லிருந்து துரத்த முயன்ற பெள்ளாளன் திருச்சினாப்பள்ளியில் இவர்களை அடைத்து வெற்றி பெறும் வேளையில் சிறைப்பட்டு உயிரிழந்தான். இந் நிகழ்ச்சியினால் தான் திருச்சினாப்பள்ளி என்றும் பெயர் நம் சரித்திரத்தில் முற்பட்டுவிளங்குவது மதுரை நாயக்கர்கள் வசமானபின் திருச்சி சிறிதுகாலம் முகம்மதியர் கைப்பட்டு பின்னர் ஆங்கிலேயர் வசமாயிற்று. ★

சூரியனுக்கும் ஒரு முடிவு உண்டு. நாளுக்கு நாள் அது உருவத்தில் குறுகிவருகிறது என்று பலருக்குத் தெரியாது.

சூரியன் வெடித்தால்...?

அ. ராம்கோபால்

நாம் வாழும் பூமி சூரியனின் குழந்தை. உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளும் உயிரும் உணவும், சத்தியும் சூரியனிலிருந்தே பெறுகின்றன. நாமும் அப்படியே. நமக்கு எத்தனையோ வகைகளில் பயன்படும் நிலக்கரி, பெட்ரோல் போன்றவை நமக்குக் கொடுத்துதவும் சக்தியும் சூரியனிடமிருந்து கடனாக அவை பெற்றவையே. ஆழ்ந்து சிந்தித்தால் உலகில் உள்ள சகல சக்தியும், ஜீவனும் சூரியனுள் அடக்கம் என்பது தெளிவாகும். ஆகையால் உலகில் பலர் சூரியனை தெய்வமாக மதித்து, வணங்குவது இயல்பே. ஆனால் உண்மையாக பிறப்பு இறப்பி லிருந்து விடுபட்டு அமரத்வநிலை அடைந்த ஒன்றையே தெய்வமாகப் பாவிப்பது வழக்கம். சூரியன் அமரத்வ நிலை பெற்றதல்ல. அதற்கு நம்மைப் போல் பாலபருவம், வாலிபப் பருவம், வயோதிகப்பருவம் உண்டு. கடைசியில் சாவும் உண்டு. ஆகையால் உண்மையாகச் சொல்லுவதானால் சூரியனை தெய்வ வரிசையில் வைத்து வணங்குவது சரியல்ல என்றே கூறவேண்டும்.

சூரியன் கொடிய வெப்பமுள்ள ஒரு கோளம். இது எவ்வளவு வெப்பமுள்ளது என இன்னும் யாரும் திட்டவட்டமாகக் கண்டறிந்ததில்லை. வீன் என்னும் பிரபல விஞ்ஞானி ஒருவரின் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு, சூரிய ஒளிக்கதிரில் அடங்கியுள்ள வர்ணங்களைச் சோதித்துக் கணக்கிட்டுச் சூரியனின் வெளிப்பகுதியின் வெப்பம் சுமார் 6000°c என மதிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வளவு கொடிய வெப்பத்தில் நம் பூமியில் உள்ள எந்தப் பொருளும் ஆவியாக மாறிவிடும். பூமியின் மேல்பரப்பில் உள்ள மண்ணும் கல்லும் கூட ஆவியாகிவிடும்! சூரியனின் வெளிப்பகுதியே இவ்வளவு கொடிய வெப்பமுள்ள தென்றால் உட்பகுதி? உட்பகுதிக்குச் செல்ல செல்ல வெப்பம் மேலும் மேலும் கூடுமென்றும் சூரியனின் மத்தியப் பகுதியின் வெப்பம் சுமார் 2 கோடி டிகிரி சென்டிகிரேட் எனவும் தற்கால விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சூரியன் அமைப்பில் நம் பூமியைப்போன்றதல்ல. பலவித ஆவிகளால் ஆனது அது. அதன் வெளிப்பகுதியின் அடர்த்தி நம் காற்றின் அடர்த்தி அளவில் சுமார் ஆயிரத்தில் ஒரு பங்குதான். ஆனால் உட்புறத்திலோ பாதரசத்தைப்போல் ஆறு மடங்கு அடர்த்தியுள்ள ஆவிகள் நிறைந்துள்ளன. இவ்வளவு அடர்த்தியுள்ள ஆவி, நம் பூமியில் எங்குமே இல்லை. சூரியன் நம் பூமியைப் போல் தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும் இயல்புடையது. ஆனால் அது ஆவிரூபமானது. மேலும் உட்பகுதியிலுள்ள ஆவி வெளிப்பகுதியிலுள்ள ஆவியைப் போல் பல மடங்கு கனமானது. இதனால் உட்பகுதியும் வெளிப்பகுதியும் ஒரே வேகத்தில் சுற்றுவதில்லை. வெவ்வேறு வேகத்தில் சுற்றுகின்றன. கனக்குறைவான வெளிப்பகுதி 29 நாட்களில் ஒரு சுற்றுச் சுற்றி விடுகிறது. கனமிகுதியான உட்பகுதியோ 34 நாட்களுக்கு ஒரு முறைதான் ஒரு

சுற்றுச் சுற்றுகிறது. இம்மாறுபாட்டின் காரணமாகவே சூரியனின் கலவரமான நிலையும், சூரியப் புள்ளியும், நம் பூமியில் காந்தப் புயல் ரேடியோ ஒலிபரப்பில் தடைகள், அமித மழை, மேருஜோதி முதலியவையும் தோன்றுவதாக விஞ்ஞானிகள் பலர் கருதுகிறார்கள்.

பூமியில் உயிர்கள் தோன்றியதிலிருந்து இன்றுவரை லட்சக்கணக்கான ஆண்டுகளாக சூரியவெப்பம் ஒரே அளவாகவும், சீராகவும் கிடைத்து வருகிறது. இதனாலேயே உலகில் இத்தனை ஜீவராசிகள் இன்று உயிரோடு வாழ்கின்றன. இந்த வெப்ப அளவு கூடினாலோ அல்லது குறைந்தாலோ ஜீவராசிகள் அனைத்துமே கூண்டோடு மடிந்து போகும். வெப்ப நிலை குறைந்தால், பூமி முழுவதும் பனிக்கட்டி மூடி எங்கும் பனிப் பாலைவனமாக மாறிவிடும். வெப்பம் கூடினாலோ சப்த சமுத்திரங்களும் ஆவியாகி, உயிரினங்கள் எல்லாம் எரிந்து சாம்பலாகி, எங்கும் வெப்பப்பாலை வனமாகக் காட்சியளிக்கும்.

சூரியலிருந்து வருடாவருடம் $1{\cdot}2\times10^{41}$ எர்க் வெப்பம் வெளியேறுவதாக விஞ்ஞானிகள் மதிப்பிடுகின்றனர். இவ்வெப்பத்தில் மிக மிகச் சிறிய ஒரு அளவே நம் பூமியை நோக்கிவருகிறது. இப்படிவரும் மிக மிகக் குறைவான வெப்பம் முழுதும் கூட நம்பூமியை அடைவதில்லை. அப்படி அடைந்தால் அதுவே நம் பூமியிலுள்ள உயிர்கள் அனைத்தையும் அழிக்கப் போதுமானது. ஆனால் இவ்வெப்பத்தில் சுமார் 37% வாயு மண்டலத்திலுள்ள மேகக்கூட்டங்கள், பல்வேறு விதமான தூசிகள் முதலியவற்றால் பூமியை அடையாதவாறு தடுக்கப்படுகிறது. சுமார் 6% வாயு மண்டலத்திலுள்ள பல்வேறு வித வாயுக்களால் கவர்ந்து கொள்ளப்படுகிறது. எஞ்சிய சுமார் 57% வெப்பமே பூமியை வந்தடைகிறது. இவ்விதம் பூமியின் மேல் பரப்பில் ஒரு சதுர சென்டிமீடரில் ஒரு நிமிடத்தில் வந்தடையும் சூரிய வெப்பம் 1·94 காலரி எனக் கணித்தறிந்திருக்கிறார்கள். இந்த அளவு கூடினாலோ அல்லது குறைந்தாலோ பூமியில் உள்ள சகல ஜீவராசிகளையும் அது வெகுவாகப் பாதிக்கும். சூரியனிலிருந்து இவ்விதம் 200 கோடி ஆண்டுகளாக வெப்பம் வெளியேறிக் கொண்டே இருக்கிறது. இப்படி இதுவரை வெளியேறிய வெப்பத்தின் அளவு சுமார் $2{\cdot}4\times10^{50}$ எர்க் எனமதிப்பிடப்படுகிறது. இவ்வளவு வெளியேறியிருப்பதால் சூரியன் முன்னைவிடச் சிறிதாவது குளிர்ந்திருக்க வேண்டும்? இவ்வளவு வெப்பத்தைச் சூரியன் எங்கிருந்து எப்படிப்பெறுகிறது? இக்கேள்விகளுக்கு விஞ்ஞானிகள் இன்னும் தக்க வகையில் விளக்கம் கூற இயலாத நிலையிலேயே இருந்து வருகின்றனர். ஆனால் வெகுகாலமாக சூரிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள, ஈடுபட்டிருந்த விஞ்ஞானிகள் இது பற்றி பல யூகங்களை வெளியிட்டுள்ளனர். அவற்றில் சிலவற்றை விஞ்ஞானிகள் பலர் தங்கள் கொள்கைக்கு ஏற்புடையதாகவும் கொள்ளுகின்றனர். இவ்விதம் பல விஞ்ஞானிகளின் ஆதரவு பெற்ற முக்கிய சில யூகங்களை மட்டும் இங்கே கவனிப்போம்.

முதன் முதலாகச் சூரியனைப்பற்றி விரிவான ஆராய்ச்சிகள் நடத்திய பலருள் ஹெம் ஹோல்ட்ஸ் முக்கியமானவர். சூரியன் தன் சிசுப் பருவத்தில் குளிர்ந்த வாயுக்கள் நிறைந்த ஒரு பிரம்மாண்டமான கோளமாக இருந்தது. பிறகு நாளாக ஆக இது படிப்படியாகச் சிறுத்துச் சுருங்கிக் கொண்டே வருகிறது. இப்படிச் சுருங்கச் சுருங்க அதிலிருந்து வெப்பம் உற்பத்தியாகி, வெளியேறிக் கொண்டே இருக்கிறது. வாயு சுருங்கினால் அதில் வெப்பம் உற்பத்தியாகி வெளியேறும். சைக்கிள் ட்யூப்களில் காற்று நிரப்பும் போது இதை நாம் கவனிக்கலாம். சூரியனின் குறுக்களவு வருடாவருடம் சுமார் 100 கெஜம் வீதம் குறுகிக்கொண்டே வருகிறது. இதனால் தான் அதிலிருந்து ஓயாது வெப்பம் உற்பத்தியாகி, வெளியேறிக்,

கொண்டே இருக்கிறது. ஹெம்ஹோல்ட்ஸின் இக்கருத்தை சில விஞ்ஞானிகள் ஆதரிக்கின்றனர்.

சமீபத்தில் அணுகுண்டு, ஜலவாயுகுண்டு முதலியவை கண்டு பிடிக்கப்பட்டிருப்பதை நாமறிவோம். இக்குண்டுகளைத் தயாரிக்க ஆதாரமாகநின்ற பல விஞ்ஞானத் தத்துவங்களில் மகா விஞ்ஞானி ஈன்ஸ்டீனின் தத்துவத்தைக் குறிப்பிட வேண்டும். இக் கொள்கைப்படி நீரகத்தின் நான்கு பரமாணுக்கள் சேர்ந்து ஒரு ஹீலியம் பரமாணுவாக மாறுகிறது. ஆனால் இப்படி மாறிய ஹீலியம் பரமாணுவின் எடை நான்கு நீரகப் பரமாணுவின் எடை அளவு இருக்காது. அதைவிடக் குறைவாகவே இருக்கும். இக் குறைவுக்குக் காரணம் என்ன? நீரகப் பரமாணுக்கள் ஹீலியம் பரமாணுவாக மாறும்போது அதன் ஒரு பகுதி,வெப்ப சக்தியாக மாறுகிறது. இதனாலேயே இக் குறைபாடு. ஆனால் நீரகப் பரமாணுக்கள் ஹீலியம் பாமாணுவாக மாறவேண்டுமானால் அதற்குக் குறைந்தது ஒன்றரைக்கோடி டிகிரி வெப்பமாவது வேண்டும். இவ்வளவு வெப்பம் சூரியனின் உட்பகுதியிலிருக்கிறது. ஆகையால் அவ்விடத்தில் உள்ள நீரக வாயு அணுக்கள் ஹீலிய அணுக்களாக மாறுகின்றன. இம் மாற்றம் இரவு பகல் எப்பொழுதும் ஓயாது நடந்து கொண்டே இருக்கிறது. இதன் காரணமாக அங்கே அளவிட முடியாத வெப்ப சக்தி உற்பத்தியாகிக் கொண்டே இருக்கிறது, இதுவே நமக்கும் வேறு கிரகங்களுக்கும் வெப்பத்தையும் ஒளியையும் சூரியன் கொடுத்து உதவ ஆதாரமாக அமைகிறது. ஆனால் ஒன்று. சூரியனில் உள்ள நீரகம் இவ்விதம் ஹீலியமாக மாறிக்கொண்டே இருந்தால் நாளுக்கு நாள் அங்கு நீரகம் குறைவுபட்டு கடைசியில் நீரகப் பஞ்சம் ஏற்பட்டுவிடாதா? ஏற்படத்தான் செய்யும். ஆனால் சூரியன் உற்பத்தியாகி இப்பொழுது 200 கோடி ஆண்டுகள் தானுகின்றன. இந்த இருநூறு கோடி ஆண்டுகளில் சூரியனின் நீரகத்தில் சுமார் ஒரு சதவிகிதமே ஹீலியமாக மாறி இருக்கிறது. ஆகையால் இன்னும் குறைந்தது 5000 கோடி வருடங்களுக்காவது சூரியனில் நீரகப் பஞ்சமேற்படாது. இது அணுயுக விஞ்ஞானிகள் பலரின் கருத்து.

மேலேகூறிய இரண்டை நீக்கி வேறு விதமான மூன்றாவது யூகம் ஒன்றும் இப்பொழுது பல விஞ்ஞானிகளிடையே நிலவிவருகிறது. தற்சமயம் சூரியனின் வெளிப் பகுதியில் லீதியம், பெரிலியம் போன்ற லேசான தாதுக்களின் ஆவியே மிகுதியாக இருக்கிறது. முன்பெல்லாம் அங்கே இத்தாதுக்களின் ஆவி இன்னும் அதிகமான அளவில் இருந்திருக்க வேண்டும். அக்காலத்தில் சூரியன் இன்னும் பெரிதாக இராட்சச உருவில் இருந்திருக்கும். அக்காலத்தில் அதன் நிறம் செக்கச்சிவந்து உதய சூரியனைப்போல் (Red giant) பிரமாண்டமான உருவில் இருந்திருக்கும். வயதாக ஆக அது உருவில் சிறுத்துக்கொண்டே வருகிறது. இப்படிச் சிறுகச்சிறுக அதன் வெப்ப நிலை உயர்ந்து கொண்டே போகிறது. இதன் காரணமாக செக்கச்சிவந்த சூரியனின் செந்நிறம் படிப்படியாக வெண்மையாக மாறிக் கொண்டு வருகிறது. கடைசியில் கிழப்பருவம் அடையும்போது சூரியனின் உருவம் மிக மிகச் சிறிதாக மாறிவிடும். அப்பொழுது அவ்வாமன சூரியனின் நிறம் பால் போன்று சுத்த வெள்ளையாக மாறிவிடும். வெப்ப நிலையும் உச்ச நிலையிலிருக்கும். கிழப்பருவத்தையும் தாண்டும்போது இவ் வெப்ப நிலை உச்சத்தை தாண்டத் தொடங்கும். இதனால் சூரியனே வெடித்து பல பிண்டங்களாக மாறும். பிறகு இப் பிண்டங்கள் படிப்படியாக குளிர்ந்து ஒளி இழந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். இதோடு சூரியனின் வாழ்வும் அதை நம்பிவாழும் அனைத்தின் வாழ்வும் முடிந்துவிடும். இதுவே விஞ்ஞானிகள் பலரிடையே இன்று நிலைவிவரும் மூன்றாவது கருத்தாகும். ★

ஐன்ஸ்டீன் கொள்கை



பொருளை சிதைத்தால் அந்த இடத்தில் சக்தி ஏற்படுகிறது என்று பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீன் 1905 – ஆம் ஆண்டு எழுதினுர். பலர் அவர் கூறுவதைக் குறித்து நகைத்தார்கள். ஆனுல் ஒரு சில விஞ்ஞானிகள் அவர் கூற்றை நம்பி 35 ஆண்டுகளாக பொருளை சிதைத்து சக்தியை வெளிப்படுத்த முயன்று வந்தனர்.

1938-ல் டாக்டர் அட்டோஹேனும், டாக்டர் பிரிட்ஸ் ஸ்டிராஸ்மனும் யுரேனியத்தின் உட்கருவோடு புரோட்டன்களை சேர்க்க முயற்சி செய்து கொண்டிருந்தனர். அப்போது அந்த மூலப் பொருள்களில் சொல்ல முடியாத மாறுதல் ஏற்பட்டதை அவர்கள் கண்டறிந்தார்கள். நீல்ஸ்போர் என்பவர் யுரேனியம் பிரிக்கப்பட்டது உண்மை போல் அங்ஙனம் அது பிளக்கப்பட்டபோது அப்பொருள் அழிந்து சக்தி வெளிபட்டது என்ற உண்மையை உணர்ந்தார். ஆகவே ஐன்ஸ்டீன் கொள்கை நிரூபிக்கப்பட்டது.

2,400 வருஷங்களுக்கு முன்னுல் கிரேக்க வேதாந்தியான டெமாக்கிரடஸ் என்பவர் எல்லாப்பொருள்களும், பிரிக்க முடியாத மிகச் சிறிய துளிகளால் ஆனவை, எனக்கண்டு பிடித்தார். உதாரணமாக ஓர் இருப்புத்துண்டை எடுத்துக் கொள்வோம். இதை சிறு சிறு துண்டுகளாக ஆக்கிக் கடைசியில் மிக மிகப்பொடிய நிலைக்குக் கொண்டு வரலாம். கடைசியில் மிக மிகப் பொடிய துளியானது பிரிக்கமுடியாத நிலையை அடைந்து விடும். இந்த மிக மிகச்சிறிய துளிக்கு ‘அணு’ என்று பெயர். இந்த ‘Atom’ என்ற சொல்லுக்கு ‘துண்டிக்க முடியாதது’ என்று பொருள்.

★ சைப்ரஸ் ★

சைப்ரஸ் தீவு, கேந்திர ஸ்தானத்தில் அமைந்திருப்பதால் அதை விட பிரிட்டனுக்கு மனமில்லை. சைப்ரஸ் தீவுக்கு முதலில் சுதந்திரமளித்தே யாகவேண்டும் என்று இந்தியா வற்புறுத்தி வருகிறது. இப்பிரச்னை குறித்து ஈடனும் நேருவும் லண்டனில் கலந்து பேசியிருக்கிறார்கள். இத்தீவு குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்வோம்.

மத்தியதரைக் கடலிலுள்ள மூன்றாவது பெரிய தீவு சைப்ரஸ். இது 1878-லிருந்து பிரிட்டிஷ் காலனியாக இருந்து வருகிறது. அந்நாட்டில் வாழும் மக்களில் 80 சத விகிதம் பேர் கிரேக்க பரம்பரையில் உதித்தவர்கள். மற்றவர்கள் துருக்கியர். இத்தீவு துருக்கிக்கு 50 மைல் தூரத்திலும் கிரீஸுக்கு 650 மைல் தூரத்திலும் உள்ளது.

கி. மு. 1500-லேயே கிரேக்கர்கள் இத்தீவில் குடியேற ஆரம்பித்து விட்டனர். சைப்ரஸின் நிர்வாகமும் கிரேக்க முறையிலேயே அமைக்கப்பட்டு, நடத்



தப்பட்டு வந்திருக்கிறது. இத்தனை வருஷ காலமாக சைப்ரஸ் அனேக நாடுகளின் ஆதிக்கத்திற்குள் இருக்க நேர்ந்து விட்டது.

பல நாடுகளின் ஆதிக்கம்

மகா அலெக்சாந்தர் சைப்ரஸை தன் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இணைத்து விட்டார். அவருடைய ஜெனரலாக இருந்த டாலமி, சைப்ரஸை எகிப்தின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினர்.

கி. மு. 58-ல் ரோம், சைப்ரஸைக் கைப்பற்றியது. சுமார் நான்கு நூற்றாண்டுகள் சைப்ரஸ் ரோமாபுரி சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்திருக்கிறது. பைஸான்ஷியன் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்திருக்கிறது. பைஸான்ஷியன் சாம்ராஜ்யம் கி. பி. 395-ல் ஏற்பட்டபோது சைப்ரஸ் மீண்டும் கிரேக்க ஆதிக்கத்தின் கீழ் வந்தது. ஆனால் இதற்குள் சைப்ரஸின் மக்கள் கிருஸ்துவ மதத்தைத் தழுவியிருந்தனர்.

பிரிட்டன் வசமானது

1191-ல் 'குரூசேட்ஸ்' யுத்தம் நடைபெற்றபோது பிரிட்டிஷ் மன்னர் ரிச்சர்ட், சைப்ரஸைக் கைப்பற்றினர். ஆனல் ஒரு வருஷம் கழித்து கய் டி லுஸிக்னன் என்கிற பிரெஞ்சுப் பிரமுகருக்கு விற்று விட்டார். இவருடைய சந்ததியார் மூன்று நூற்றாண்டு காலம் சைப்ரஸை ஆண்டு வந்தனர்.

கிழக்கு மத்யதரைக்கடல் பிரதேசத்தில் தன் ஆதிக்கத்தைப் பரப்பிய துருக்கி 1572-ல் சைப்ரஸைத் தன் வசமாக்கிக் கொண்டது. 1878 வரை துருக்கியின் ஆதிக்கத்தில்

சைப்ரஸ் தீவைச் சேர்ந்த ஒரு யுவதி.

இருந்தபின் அங்கு பிரிட்டிஷ் நிர்வாகம் ஏற்பட்டது.

இவ்வளவு நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் சைப்ரஸ் இருந்து வந்தபோதிலும் மேனாட்டு நாகரிகம் அங்கு பரவவில்லை. வாழ்க்கைத் தரம் மிகக் குறைவாக இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. கிரேக்க ஆதிக்கத்தில் ஒப்படைக்கப்பட்டால், சைப்ரஸ் பொருளாதாரத் துறையில் மேம்படலாம் என்ற கருத்து இருந்து வருகிறது.

பிரிட்டனின் ஆசை வார்த்தை

முதல் உலக யுத்தத்தில் நேச நாடுகளின் பக்கம் சேர்ந்து போரிட்டால், சைப்ரஸ் தீவின் நிர்வாகத்தை கிரீஸிடம் ஒப்ப

டைத்து விடுவதாக பிரிட்டன் கூறியது. ஆனல் இதன்படி நடைபெறவில்லை.

1948-ல் சைப்ரஸிற்கு சுதந்திரமளிப்பதாக பிரிட்டன் கூறியது. ஆனல் சைப்ரஸ் மக்கள் கிரீஸுடன் இணைவதையே தான் விரும்பினர்கள்.

கிரீஸுடன் சேர வேண்டும் என்று கோரும் இயக்கத்தின் தலைவர் ஆர்ச் பிஷப் மகாரியஸ் என்பவர். இவர் சைப்ரஸ் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் விஜயம் செய்தால் கோயில் மணிகள் அடிக்கப்பட்டு இவர் வரவேற்கப்படுகிருர்.

சூயஸ்ஸிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேற நேர்ந்த

கிரீஸுடன் சேருவதை ஆதரிக்கும் இயக்கத்தின் தலைவர் மகாரியாஸ்.

போது தங்கள் ராணுவத் தலைமை ஸ்தாபனத்தை பிரிட்டன் சைப்ரஸிற்கு மாற்றிக் கொண்டது. பிரிட்டன் சைப்ரஸிற்கு சுதந்திரம் அளிக்கத் தயாராக இருந்த போதிலும் காமன்வெல்த்தை விட்டு சைப்ரஸ் பிரிந்து போவதை அனுமதிக்கத் தயாராக இல்லை.

சைப்ரஸ், துருக்கி, கிரீஸ், எகிப்து, இஸ்ரேல் இவ்வளவுக்ும் அருகில் இருப்பதால் அத்தீவை பிரிட்டன் லேசில் இழந்து விடாது.

கேந்திர ஸ்தானம்

ராணுவ ரீதியில் கிரீஸிற்கு சைப்ரஸ் முக்கியமல்ல. ஆனல் ''நாட்டோ'' (வடஅட்லாண்டிக் உடன்படிக்கை நாடுகள் ஸ்தாபனம்)வுக்கு மிக முக்யமானது. துருக்கி ஜலசந்தியை பாதுகாக்கவும், ரஷ்ய சப்மரீன்கள் வெளிவர விடாமல் தடுக்கவும் துருக்கியின் உதவியைத் தான் ''நாட்டோ'' நம்பியிருக்கிறது. எனவே சைப்ரஸ் தீவு ராணுவ காரியாலயமாக பயன்படாமல் செய்யும் எந்த அரசியல் பைசலுக்கும் பிரிட்டன் இணங்காது.

மேலும் துருக்கி பாக்தாத் ஒப்பந்தத்தில் சேர்ந்த நாடுகளுடன் ஒட்டினற் போல் இருப்பதும், ''நாட்டோ''வில் அங்கம் வகிப்பதும் முக்ய அம்சமென்று கருதி, துருக்கியை பிரிட்டன் ஆதரிக்கும். கிரீஸ் நடுநிலைமை நாடாக மாறி ''நாட்டோ''விலிருந்து பிரிந்தாலும் பிரிட்டனுக்கு பாதகமில்லை. ஏனென்ருல் கிரீஸ் கம்யூனிஸ்டு நாடுகளுடன் சேராது என்று நம்புவது காரணமாக இருக்கலாம்.

சைப்ரஸில் விவாகங்களின்போது புராதனச் சடங்குகள் அனுஷ்டிக்கப்படுகின்றன.

சைப்ரஸ் மிகக் கேந்திரமான ஸ்தானத்தில் அமைந்திருக்கிறது. இஸ்ரேலில் போர் மூண்டால் இங்கிருந்து சுலபமாகப் படைகளை அனுப்பி, அடக்கி விடலாம். தீயணைப்பு நிலையம் போல சைப்ரஸ் கருதப்படுகிறது.

சைப்ரஸ் விவகாரம் ஐ. நா. விற்கு கிரீஸ் மூலம் வந்ததால் அது உலகப் பிரச்னையாகி விட்டது. சூயஸ்கால்வாய் தளத்தை பிரிட்டன் இழந்த பின்பு பிரிட்டனுக்கு சைப்ரஸ் விடமுடியாத தளமாகி விட்டது.

கிரீஸ் ''நாட்டோ''வில் சேர்ந்துள்ளது. கிரீஸுடன் சைப்ரஸை இணைத்து விட்டால் ''நாட்டோ'' சகா என்கிற வகையில் ராணுவ தளங்களை அமைத்துக் கொள்ள கிரீஸ் தளங்களை குத்தகை முறையில் வழங்கக் கூடும் என்று சொல்லலாம். ஆனால் குத்தகை ஏற்பாடுகளில் பிரிட்டனுக்கு நம்பிக்கை இல்லை. கிரேக்க சர்க்காரிடமும் பிரிட்டனுக்கு நம்பிக்கை இல்லை. எந்த சமயத்திலும் கிரீஸ் நடுநிலைமையாகலாம் என்ற அச்சம் பிரிட்டனுக்கு இருக்கிறது. அதனல் சைப்ரஸில் தன் ஆதிக்கம் இருக்க வேண்டும் என்கிற அக்கறையுடன் பிரிட்டன் இயங்குகிறது. மேற்கு ஆசிய மண்டலத்தில் பிரிட்டனுக்கு இருந்து வரும் கடைசி கொத்தளம் இதுவேயாகும்.

நாட்டோ பாக்தாத் ஒப்பந்தங்கள், இஸ்ரேல் எல்லைப் பாதுகாப்பு பொறுப்புகள் இவைகளை நிறைவேற்ற வசதியான இடம் சைப்ரஸ்.

சைப்ரஸிலுள்ள குறைகள்

சைப்ரஸ் பயங்கர இயக்கங்களை ஒடுக்கவும் பிரிட்டன் தக்க முன்னேற்பாடுகளைச் செய்திருக்கிறது. போலீஸ் படை இரட்டிக்கப்பட்டது. 20000 துருப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டன் இவ்

'அபாலோ' கடவுளின் கோயில் தூண்கள்.

வளவு பிடிவாதமாக ஆதிக்கம் செலுத்த முனைந்தாலும் அதன் உறுதியைத் தளர்த்தவும் சைப்ரஸில் சில முகாந்திரங்கள் உள்ளன. சைப்ரஸில் நல்ல துறைமுகங்கள் இல்லை. போதிய தண்ணீர் வசதிகள் குறைவு. கைதேர்ந்த தொழிலாளிகள் இல்லை. இவ்வளவு குறைகளைச் சரிக்கட்டினாலும் தொழிற் சங்கங்கள் கட்டுப்பட்டு வருவது சங்கடமாக இருக்கும். தொழிலாளர் மட்டுமின்றி பொதுமக்களும் பிரிட்டிஷ் நண்பர்கள் என்று சொல்வதற்கில்லை.

ஸ்ரீ கிருஷ்ண மேனன் நியூயார்க்கில் சொல்லியிருப்பது போல சைப்ரஸிற்கு முதலில் சுதந்திரம் வழங்குவது தான் தகுந்த பரிகாரம்.

இந்தியாவின் யோசனை

சைப்ரஸ் முதலில் சுதந்திரம் பெற வேண்டும். பிறகு தான் எந்த நாட்டுடனும் இணைப்பைப் பற்றி அந்நாட்டு மக்களே முடிவு செய்ய விட வேண்டும். இதுவே இந்தியாவின் யோசனை. ஸ்ரீ கிருஷ்ண மேனன் இதை விளக்கி கூறியிருப்பதாவது:

''சைப்ரஸ் சுயேச்சை நாடாக வேண்டும் என்பதே எங்கள் கருத்து. மற்றவையனைத்தும் அதிலிருந்து விளைய வேண்டும். ஒரு நாடு சுதந்திரம் பெறுமலிருக்கும் போது அந்நாடு இத்தரப்பிலோ அல்லது மறுதரப்பிலோ சேருவதென்கிற யோசனை அந்நாட்டின் உண்மையான விருப்பமாகாது என்று நாங்கள் எப்போதும் கருதி வந்திருக்கிறோம். சைப்ரஸில் சுதந்திர இயக்கத்தை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

பிரிட்டனின் திட்டம்

சைப்ரஸ் பிரச்னையை தீர்ப்பதற்காக பிரிட்டன் புது திட்டத்தை வகுத்திருப்பதாகவும் இதை பண்டித நேருவுடன் பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் ஆலோசித்ததாகவும் கூறப்படுகிறது. அத்திட்டமாவது:

(1) சைப்ரஸின் 5 லக்ஷம் மக்கள் தங்களை யார் ஆள வேண்டும் என்று தீர்மானிக்க ஒரு தேதியைக் கொண்ட திட்டம்.

10 முதல் 15 வருஷங்களுக்கு பின்பே சுயநிர்ணயம் வழங்கப்படுமென அபிப்பிராயம் நிலவி வருகிறது.

(2) தாராள சுயாட்சி அளிக்கும் புது அரசியல் திட்டத்தை பிரபல பிரிட்டிஷ் சட்ட நிபுணரான ராட்கிளிப் பிரபு தயாரிக்க வேண்டும் என்ற சிபாரிசு புதிய அசெம்பிளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிரேக்க சைப்ரஸ்காரர்கள் பெரும்பாலானவர்களாக இருக்க அரசியல் சட்டம் ஏற்பாடு செய்தால் தான் உண்மையிலேயே தாராளமான அரசியலாக அது இருக்குமென ஒப்புக் கொள்ளப்படுகிறது.

(3) துருக்கிய சைப்ரஸ்காரர்களின் உரிமைகளையும் துருக்கியின் ராணுவ நலன்களையும் பாதுகாக்க ஏற்பாடுகள்.

(4) சட்டத்தில் கண்டுள்ள பிரேரணைகளை அமுல் செய்ய நடவடிக்கை எடுக்குமுன் பலாத்காரம் நின்றாக வேண்டும்.

இவைகளிலிருந்து சைப்ரஸை விட்டுவிடும் நோக்கம் இப்போதைக்கு பிரிட்டனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

தேசியத் தலைவர் மகாரியஸுடன் பிரிட்டிஷ் சர்க்கார் நடத்திய சமரஸ சம்பாஷணைகள் பலிக்கவில்லை. அதன் பேரில் அடக்கு முறையை முழு மூச்சுடன் நடத்தி வைத்து, தேசிய இயக்கத்தை ஒடுக்கிவிட பிரிட்டிஷ் ஆட்சியாளர் முற்பட்டிருக்கிறார்கள். மகாரியஸை சிறை செய்து நாடு கடத்தி விட்டனர். மற்றும் பல பிஷப்கள் கைது செய்யப்பட்டனர். பத்திரிகை செய்தி தணிக்கை ஏற்பாடாகி விட்டது. மைனாரிட்டியாக உள்ள துருக்கியின் உரிமையையும் பீதியையும் சுட்டிக்காட்டி ஜனநாயக முறையில் பைசல் காண முடியாது என்று பிரிட்டிஷ் சர்க்கார் மறுத்து வருகின்றனர். முழு அதிகார மாற்றத்துக்கு பிரிட்டன் தயாராக இல்லை. எனவே சமரஸப் பேச்சு முறிந்தது. முழுமூச்சுடன் அடக்கு முறை நடந்து வருகிறது. பிரிட்டனிலுள்ள தங்கள் ஸ்தானிகரை வாபஸ் பெற்று விட்டு ஐ. நா.வில் பிரிட்டன் மீது கிரீஸ் புகார் தாக்கல் செய்திருக்கிறது. இந்த விவகாரம் விவாதத்திற்கு வரும்போது ஆசிய ஆப்பிரிக்க நாடுகளெல்லாம் சைப்ரஸ் மக்களின் நியாயமான கோரிக்கையை ஆதரிக்கத்தான் செய்யும். இப்பொழுது விழிப்புள்ள உலக அபிப்பிராயம் இருந்து வருவதால் நியாயத்திற்கு இறுதியில் பிரிட்டன் பணிய வேண்டியே இருக்கும். ★



'ஆஸ்பத்திரி' ரயில் வண்டி

ரயில் விபத்துகள் ஏற்படும் போது விபத்து ஸ்தலங்களுக்குச் சென்று வைத்திய உதவி அளிப்பதற்காக, "ஆஸ்பத்திரி வண்டி" ஒன்றை இப்பொழுது மத்திய ரயில்வே தயாரித்திருக்கிறது. பிராட்கேஜ் பாதையில் உபயோகிப்பதற்கான இந்த வண்டி நவீன சாதனங்கள்கொண்ட ஒரு சிறிய ஆஸ்பத்திரியாகவே அமைந்திருக்கிறது.

இத்தகையதொரு "ஆஸ்பத்திரி வண்டி" இந்தியாவில் உபயோகத்துக்குக் கொண்டுவரப்படுவது இதுவே முதல் தடவையாகும். அவசரமாகச் செய்ய வேண்டியிருக்கும் ரண சிகிச்சைகளை மேற்கொள்ளுவதற்கு வசதியாக "ஆபரேஷன் தியேட்டர்" ஒன்றும் இவ்வண்டியில் அமைக்கப்பட்டுள்ளது. வண்டி ஓடும்போது "ஆபரேஷன் தியேட்டர்" ஆடாமல் அசையாமல் இருப்பதற்காக, போர்க்கப்பல்களில் உள்ளதுபோன்ற நவீன அதிர்ச்சி தாங்கி ஏற்பாடுகள் இதில் செய்யப்பட்டுள்ளன.

இந்த வண்டியில் வைத்திய சிப்பந்திகள் தங்கியிருக்க ஒரு தனி அறையும், ஒரு சமையலறையும் உள்ளன. குகைப் பாதையிலும் இதை உபயோகிக்கக்கூடியபடி, வண்டியின் ஒரு கோடியில் ஒரு வழி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆஸ்பத்திரி வண்டியில் வழக்கமான வைத்திய சிப்பந்திகளையும், நர்சுகளையும் தவிர, ரயில்வேயின் செண்ட் ஜான் ஆம்புலன்ஸ் படையைச் சேர்ந்தவர்கள் சிலரும் இருப்பார்கள். இவர்கள் ரத்த தானம் வழங்குபவர்கள். இவர்களுடைய ரத்தம் முன்னதாகவே சோதிக்கப்பட்டு பாகுபாடு செய்யப்பட்டிருக்கும். அவசியமிருக்கும்போது தங்கள் ரத்தத்தைக் கொடுத்து உயிரைக் காப்பாற்ற இவர்கள் தயாராக இருப்பார்கள்.

பதினெட்டு பேருக்கு படுக்கை வசதி

நோயாளிகள் படுத்திருக்க 12 "பெர்த்துகள்" கொண்ட தனி அறையும் இதில் இருக்கிறது. அவசர காலத்தில் கீழ் பெர்த்துகளுக்கு மேல் ஆறு 'ஸ்ட்ரெச்சர்"களைப் பொருத்தி மேலும் ஆறு நோயாளிகளைப் படுக்க வைப்பதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. நோயாளிகள் அறையை அடுத்த ஆபரேஷன் தியேட்டரும், அதையடுத்தாற்போல் டாக்டர்களின் உபயோகத்துக்கான இரண்டே பெர்த்துகள் கொண்ட ஒரு சிறு அறையும் உள்ளன. வேலைக்காரர்கள் உபயோகத்துக்கென ஒரு தனி அறையும் இருக்கிறது.

இத்தகைய வண்டிகளைப் பெருமளவில் தயாரிக்க முற்படுவதற்கு முன்னதாக, மத்திய பிராந்திய ரயில்வே, பிராட்கேட்ஜ் பாதையில் உபயோகிப்பதற்கான மாதிரி வண்டியொன்றைத் தயாரிக்க வேண்டுமென்று ரயில்வே போர்டு முடிவுசெய்தது. அந்த அனுபவத்தைக் கொண்டு, இவைபோன்ற வண்டிகள் தயாரிக்கப்படலாம். ★

லோகமான்ய

பாலகங்காதர திலக்

பி. ஜி. கேர்

> லோகமான்ய திலகர் பாரதப் பூமியில் பிறந்து நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நூற்றாண்டு விழா சென்ற மாத இறுதியில் நாட்டின் பல இடங்களில் கொண்டாடப்பட்டது. திலகர் தேசத்திற்காகச் செய்த சேவையை கணக்கிட்டு கூற இயலாது. அவரைக் குறித்து ஸ்ரீ பி. ஜி. கேர் எழுதியுள்ள இக்கட்டுரை திலகர் நூற்றாண்டு தினத்தை யொட்டி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

பாலகங்காதர திலகர் இவ்வுலகை விட்டு பிரிந்து 35 ஆண்டுகள் ஆகி விட்டன. இந்திய சரித்திரம் முழுவதிலுமே ஒரே ஒரு மகாத்மா இருப்பதுபோலவே மக்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய லோகமான்யர் ஒருவரே இருக்கிறார். ஆனால் 1893-ம் ஆண்டிலோ எண்ணெய் விற்பவர்களுக்கும் வெற்றிலை பாக்கு விற்பவர்களுக்கும் தான் அவர் தலைவர் என்று கிண்டல் செய்தனர் அவருடைய இந்நாட்டு விரோதிகள். பிரிட்டிஷ் எதிரிகளோ இந்தியக் கொந்தளிப்பின் பிதா என்று அவருக்கு பட்டம் கட்டினர். கால் நூற்றாண்டு காலம் வரை பிரிட்டிஷார் லோகமான்யரை தங்கள் முதல் எதிரி என்று கருதி வந்தனர். சுமார் 30 ஆண்டு காலம் பொதுவாக இந்தியா முழுவதிலும் குறிப்பாக மகாராஷ்டிரத்திலும் நடுநாயகமாக விளங்கி வந்தார்.

லோகமான்யரிடத்தில் தேசாபிமானிக்கு வேண்டிய நற்குணங்களெல்லாம் அபரிமிதமாகவே இருந்தன. திலகர் விரும்பியிருந்தால் கொழுத்த சம்பளமுள்ள உத்யோகத்தைப் பெற்றிருக்க முடியும். அல்லது வக்கீல் தொழில் நடத்தி நிறைய சம்பாதித்திருக்க முடியும்.

சுயநலத்தியாகம்

ஆனால் அவரும், அவர் காலத்தவரான பிரசித்தி பெற்ற சமூகசீர்திருத்த வாதி அகர்காரும் சொந்த நலனை நாடாமல் நாட்டு மக்களுக்கு சேவை புரிவதற்கு தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொள்வதாக ஒரு சபதம் செய்து கொண்டிருந்தனர். அவர்களுடைய முதல் வேலை, முதலில் இளைஞர்களுக்கும் பின்னர் பாமர மக்களுக்கும் கல்வி புகட்டுவதாக இருந்தது. பொது மக்களின் அறிவை வளரச்செய்வதற்காக மராத்தியில் 'கேசரி'யும் ஆங்கிலத்தில் 'மராத்தா'வும் ஆரம்பித்தார். நியாயமான விஷயங்களை எடுத்துரைத்தும், பொது ஜனங்களின் குறைபாடுகளை பகிரங்கப்படுத்தியும் பத்திரிகைகளில் எழுதியதற்காக பல தடவை திலகர் மீது வழக்குகள் தொடரப்பட்டன. முதலில் 1882-லும் பின்னர் 1897-லும் அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் 1908-ல் ஆறு வருஷம் தீவாந்திர சிட்சை அளிக்கப்பட்டு பர்மாவில் மாந்தலேயில் சிறை வைக்கப்பட்டார்.

லோகமான்யரின் உற்சாகத்தை ஒடுக்க தங்களால் இயன்றதை எல்லாம் சர்க்கார் செய்தது. இதனால் பொது மக்களிடையே திலகரின் மதிப்பு பன்மடங்கு அதிகமாயிற்று.

மகாராஷ்டிரத்தில் ஆண்டு

தோறும் கணபதி உத்ஸவத்தைக் கொண்டாடும் பழக்கத்தை ஏற்படுத்தியவர் திலகரே. சிவாஜி விழாவை கொண்டாடச் செய்தவரும் திலகர் தான். இவைகளை யொட்டி பஜனைகள் நாடகங்கள் நடத்தி பொது மக்களின் அறிவையும் தீரத்தையும் தட்டி எழுப்பினர் திலகர்.

ஒரு சமயம் பூனாவில் பிளேக் பரவியபோது பாமர மக்களை நிர்க்கதியாக விட்டு அதிகாரிகள். பிரபலஸ்தர்கள், வெளியேறி விட்டனர். லோகமான்ய திலகர்மட்டும் அங்கேயே தங்கியிருந்து தொண்டர்படை யொன்றைத் திரட்டி மக்களுக்குப் பணியாற்றினர்.

1897 ஜூலை 22உ ராண்ட், ஐரிஸ்ட் என்ற பெயர் கொண்ட இரண்டு அதிகாரிகள் சபேகர் சகோதரர்களால் சுட்டுக்கொல்லப் பட்டனர். அப்படு கொலைகள் திலகரின் தூண்டுதலின் பேரிலேயே நடத்தப்பட்டதாகக் கருதி அவர் மீது பழி சுமத்த முயற்சிக்கப்பட்டது. ஆனல், தக்க சாட்சியங்கள் கிடைக்காமல் போனதால், அம் முயற்சி கைவிடப்பட்டது. இருப்பினும் 1897-ல் இவர்மீது வழக்கு தொடரப்பட்டு, 18 மாதம் கடுங்

காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது காங்கிரஸில் திலகருக்கு மகத்தான செல்வாக்கு ஏற்பட்டது திலகர், லாலாலஜபதிராய், விபின சந்திர பாலர் இம்மூவரும் காங்கிரஸ் மகாசபையின் மும்மூர்த்திகளாக விளங்கினர்.

வங்கப் பிரிவினைக்கு எதிர்ப்பு

கர்ஸான் செய்த வங்காளப் பிரிவினையை நாடு முழுவதும் எதிர்த்தது. லோகமான்யர் சுதேசி இயக்கத்தையும் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்கரிப்பு இயக்கத்தையும் மிகப் பெரிய அளவில் நடத்தி, வங்காள பிரிவினையை எதிர்த்தார். 1906-ல் தாதாபாய் நௌரோஜி காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாட்டின் இன்னல்களைப் போக்குவதற்கு ஸ்வராஜ்யம்ஒன்றுதான் சரியான பரிகாரம் என்று அவர் பறைசாற்றினர். அது முதல், சுதேசி, பகிஷ்காரம், தேசீயகல்வி ஸ்வராஜ்யம் ஆகிய நான்கு வார்த்தைகளும் காங்கிரஸின் தாரக மந்திரங்களாக ஆகிவிட்டன. அதையொட்டி பத்திரிகைகளிலும், பொதுக் கூட்டங்களிலும் கிளர்ச்சிகள் ஆரம்பமாயின.

1908 லோகமான்யர், சமீபத்தில் நிகழ்ந்த வெடி குண்டு வீச்சின் காரணங்களை ஆராய்ந்து, 'வெடி குண்டின் மூலகாரணம்' என்ற தலைப்பில் 'கேஸரி'யில் கட்டுரை எழுதியதற்காக, சர்க்கார் அவர் மீது வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கு விசாரணை இந்திய நீதி விசாரணைத் துறையின் சரித்திரத்திலேயே மிகப் பிரசித்தி பெற்றதாக ஆகிவிட்டது. சர்க்கார் தங்கள் சார்பில் வழக்கை நடத்துவதற்காக மிகச் சிறந்த வழக்கறிஞர்களை நியமித்திருந்தனர். திலகரோ தம் கட்சியைத் தாமே எடுத்துரைத்து வாதாடினர். ஆனல் முடிவு எதிர்பார்த்ததுதான்! திலகருக்கு ஆறு வருஷம் தீவாந்தர சிட்சை அளிக்கப்பட்டது. தீர்ப்பளிக்கும்போது நீதிபதி கூறிய கடுஞ் சொற்களையும் இவர் பொருட்படுத்தவில்லை; சிறிதும் மனங்கலங்காமல் 'நான் நிரபராதி இந்த நீதிபதியைவிட உயர்வான விசாரணை மன்றம் ஒன்று இருக்கிறது; ஒருக்கால் நான் மேற்கொண்ட லட்சியம் ஈடேறுவதற்கு நான் இந்த தண்டனையை அனுபவித்துக் கஷ்டப்படுவதும் அவசியமாயிருக்கலாம்' என்று கூறினர்.

பர்மாவில் சிறைவாசம்

திலகர் பர்மாவில் உள்ள மாண்டலேக்கு அனுப்பப்பட்டு ஆறு வருஷ காலம் அங்கு சிறை வைக்கப்பட்டிருந்தார். வீட்டையும் நாட்டையும், உற்ருர் உறவினரையும் பிரிந்து தீவாந்தரம் பயணமான திலகர், ரயிலேறிய பத்து நிமிஷங்களுக்குள்ளாக ஆழ்ந்த தூக்கத்தில் இருந்ததை அவருடன் சென்ற பிரிட்டிஷ் அதிகாரி கண்டபோது அப்படியே பிரமித்துப் போய்விட்டார். எவ்வளவு பொறுமை, எவ்வளவு பற்றற்ற தன்மை! திலகர் தமது உறவினரைப் பார்ப்பதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை. செய்திப் பத்திரிகைகள்கூட அவருக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனல் அந்த ஆறு வருஷ சிறைவாசத்தையும் பயன்படுத்திக் கொண்டு 'கீதா ரஹஸ்யம்' என்ற மகாபாஷ்யத்தை திலகர் உலகுக்கு அளித்தார். 1914 ஜூன் 17-ந் தேதி அவர் விடுதலை செய்யப்பட்டார்.

1907-ல் சூரத்தில் காங்கிரஸ் கூடியபோது பிளவு ஏற்பட்டு தீவிரவாதிகள் அதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். திலகர் காங்கிரஸைக் கைப்பற்றி விட வேண்டுமென்று யோசனை கூறினர். 1916–ல் லக்னேவில் மிதவாதிகள், தீவிரவாதிகள், முஸ்லிம்கள் ஆகிய எல்லோருமே ஒரே கொடியின்கீழ் ஒன்றுகூடி, சுயராஜ்யம் கொடுக்கப்பட வேண்டுமென்று ஏகோபித்து ஒரு கோரிக்கை விடுத்தனர், அப்போது ஜின்னுவின் தலைமையின்கீழ் இருந்த முஸ்லிம்களுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு திலகரே காரணமாக இருந்தார். நாட்டின் நலனைவிட ஹிந்து சமூகத்தினரின் நலன்களையே திலகர் முக்கியமாகக் கவனித்து

வருவதாகக் குற்றஞ்சாட்டி வந்தவர்கள் அதன் பிறகு வாயடைத்துப் போயினர்.

அவர் சிறையிலிருந்து விடுதலையடைத்து திரும்பியதும், 'தாய் மஹாராஜ் சுவீகார வழக்கு' என்று சொல்லப்பட்டுவந்த வழக்கொன்றில் திலகரின் செல்வாக்கையும் நேர்மையையும், நாணயத்தையும் பங்கப்படுத்த ஒரு முயற்சி நடந்தது. 1898-ம் ஆண்டுவரை வழக்கு நடைபெற்றபின். இறுதியில் பிரிவி கௌன்சில் அளித்த தீர்ப்பில் திலகர் களங்கமற்றவர் என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

கர்மயோகி

ஸர் வாலண்டைன் சிரோல் என்பவர் 'இந்திய கொந்தளிப்பு' என்ற தம் புத்தகத்தில், பிரிட்டிஷ் அதிகாரிகள் கொலை செய்யப்பட்டதற்கு திலகர்தான் காரணம் என்று பொருள்படும்படி எழுதியிருந்தார். திலகர் அந்த குற்றச்சாட்டை மறுத்தளித்து லண்டன் உயர்நீதி மன்றத்தில் சிரோல்மீது அவதூறு வழக்கு ஒன்று தொடுந்தார். அந்த வழக்கில் திலகருக்கு வெற்றி கிடைக்கவில்லையென்றாலும், அவருடைய வீர உணர்ச்சியையும் சுயமதிப்பையும், உண்மைக்கு மாறான விஷயங்களை எதிர்த்துப் போராடுவதில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும் அதன் மூலம் உலகம் தெரிந்து கொண்டது. அவர் பகவத்கீதையில் சொல்லப்பட்டிருப்பது போன்ற ஒரு ஸ்திதப்ரக்ஞர்; ஒரு கர்மயோகி. பொய், அநீதி, கோழைத்தனம் ஆகியவற்றை அவர் எவ்வளவு வெறுத்தாரென்பதை 1914, ஆகஸ்ட் 30-ந் தேதி அவர் எழுதிய இந்த வாக்கியங்கள் நன்கு எடுத்துரைக்கின்றன: 'நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுள்ள பலாத்காரச் செயல்களை நான் வெறுக்கிறேன் என்பது மாத்திரமல்லாமல், துரதிருஷ்டவசமாக நம்முடைய அரசியல் முன்னேற்றத்தின் வேகத்தை அவை பெரிதும் தடை செய்து விட்டன என்றே நான் கருதுகிறேன்; தனி நபரைப் பொறுத்தும் சரி, நாட்டு மக்களின் நலனைப் பொறுத்தும் சரி, அந்தச் செய்கைகள் முற்றிலும் கண்டிக்கப்பட வேண்டியவையே என்று நான் பல தடவை கூறியுள்ளேன்' என்று அவர் எழுதியிருந்தார்.

அரசியல் துறையிலும், பத்திரிகைத் துறையிலும், இலக்கியத் துறையிலும் அரிய சேவை செய்திருந்தவரான திலகருக்கு 1919-ல் இந்தியா திரும்பியபோது அமோக வரவேற்பு காத்திருந்தது. சமூக விஷயங்களில் அவர் தீவிரமான கருத்துக்கள் கொண்டிருந்தார். ஆனால், சுதந்திரப் போரை நடத்துவதில் பாமர மக்களின் முழு ஆதரவும் தனக்கு இருக்க வேண்டும் என்ற அவாவுடன் எதிர்ப்பை உண்டு பண்ணாத பாதையை அவர் கடைப்பிடித்ததால் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர் என்ற ஏசலுக்காளானார். ஆனால் அதை எல்லாம் தாங்கிக் கொள்ளும் திறமையும், விரோதிகளையும் தலைதூக்க விடாமல் செய்யும் சக்தியும் வேண்டிய அளவு அவருக்கு இருந்தது. ★

சிவாஜி உற்சவம்

சிவாஜி உற்சவத்தை கொண்டாட வேண்டும் என்று முதன் முதலில் வற்புறுத்தி வழிசெய்தவர் திலகர். அதை பின்பற்றி தமிழ்நாட்டிலும் சிவாஜி உற்சவம் கொண்டாட வேண்டும் என்று சுப்பிரமணிய பாரதியார் வற்புறுத்தி வந்தார். 1906-ல் திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த கூட்டத்தில் பாரதியார் இதை வற்புறுத்தி பேசினார். சிவாஜி தம் வீரர்களுக்கு உபதேசிக்கும் மொழிகளை கவிதையாக்கி, பாடினார். சிவாஜி தினம் ஜூன் மாதம் தான் கொண்டாடப்பட்டு வந்தது.

காவற் கடவுள்

---பிரதீபா---

ஒவ்வொரு கிராமத்திலும் கிராமதேவதையின் கோயில் ஒன்றிருப்பதைக் காணலாம். மாரியம்மன் அல்லது ஐயனர் கோயில்கள், இவ்விரண்டில் ஏதாவதொன்று இல்லாத கிராமமே கிடையாது எனலாம். ஆடி மாதம் பிறந்துவிட்டால் இக்காவற் கடவுளுக்கு விசேஷ பூஜைகள், பொங்கல் இடுதல், பள்ளயம் போடுதல், கரகம் எடுத்தாடுதல் இவைகள் எல்லாம் மிக உத்ஸாகத்துடன் நடத்தப்படும்.

ஐயனர் கோயில் என்பதை பார்த்தவுடனேயே சொல்லிவிடலாம். கோயில் வாசலிலேயே பெரிய யானை, குதிரை மண்ணுல் செய்யப்பட்டு நிற்க வைக்கப்பட்டிருக்கும். கிராம தேவதைகளின் தலைவராக ஐயனரை தமிழர்கள் பல நூற்றுண்டுகளாகவே வழிபட்டு

வந்திருக்கின்றனர். கிராமத்திலுள்ள பயிர் பச்சைகள், கால்நடைகள் இவைகள் யாவும் காவற்கடவுளின் பராமரிப்பினுல் தான் நல்வாழ்வு பெறுகின்றன என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்து வருகிறது,

ஐயனுரை ஹரிஹரபுத்திரன் என்றே அழைக்கிருர்கள். விஷ்ணு, மோகினி ரூபமெடுத்த போது சிவன் அவர்மீது காதல் கொண்டதால், பிறந்தவரே ஐயனுர். பூதபைசாசவேதாளங்கள் எல்லாம் இவருடைய கட்டுபாட்டுக்கு உட்பட்டவைகளாம். ஐயனுருக்கு இரு மனைவியர் இருப்பதை சில கோயில்களில் காணலாம். அவர்கள் பெயர் பூசணை, புஷ்கணை என்பதாம். ஐயனுர் கோவில்களில் சப்த மாதாக்களின் உருவங்களையும் காணலாம். அவர்கள் பெயர் பாலசக்தி, பகவதி, புவனசக்தி, காட்டேரி, முயல்கரசூலி, ரத்தசாமுண்டி, திரிகாசூலி என்பனவாம். மாரியம்மன் கோயில்கள் கிராமங்களில் சர்வசாதாரணமாகக் காணப்படும், "ஆடித்திங்கள் அகவையினுங்கோர் பாடி விதாக்கோள் பன்முறை எடுத்த"தாக கூறப்படுகிறது. இந்நாளிலும் மாரியம்மன் விழா ஆடித் திங்களில் நடைபெறுவது கவனிக்கத்தக்கதாகும். கண்ணகி சீற்றங்கொண்டு மதுரையை எரித்தது வெள்ளிக்கிழமை யன்றுதான். ஆடித் திங்கள் விழா ஞாயிறன்று நடைபெற்ருலும், காப்பு கட்டுவதென்பது வெள்ளிக்கிழமைதான் நடைபெறுகின்றது.

ம. பொ. சி. அவர்கள் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் 'மாரி' என்பது மழையை குறிக்கும் தூயதமிழ்ச் சொல் என்றும், வெற்றிவேற் செழியன் மழை வரம் வேண்டியே கண்ணகிக்கு விழா நடத்திஞன் என்றும் ஆகவே கண்ணகி விழாவே பிற்காலத்தில் மாரியம்மன் விழாவாக மாறியிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிருர். இக்காலத்திலும் பருவ மழைதவறி, பஞ்சமும் பிணியும் தோன்றும் போது, மழைவரம் வேண்டி மாரியம்மனுக்கு விழா நடத்துவது கிராம மக்களிடையே இருந்துவரும் வழக்கமாகும்.

தமிழகத்திலுள்ள சில மாரியம்மன் கோயில்களில் 'கன்னிமார்' என்ற பெயரில் ஏழு கற்சிலைகளும் 'அண்ணன்மார்' என்ற பெயரில் ஏழு கற்சிலைகளும் இருக்கக் காணலாம். இவற்றின் வரலாற்றை சிலப்பதிகாரத்தில் 'வஞ்சின மாலை'யால் ஒருவாறு அறியலாம். ★

அட்டைப்பட விளக்கம்

அட்டைப்படத்தில் காணப்படுவது ஐயனுர் படைகளில் ஒருவரான காவல் கடவுளின் மண்சிலை. மண்ணுல் ஆன காரணம்பற்றி மன்னுர்சாமி என்று அழைக்கப்படுகிறதோ என்னமோ? மண்ணுல் ஆனதாகஇருந்தால் என்ன, கல்லால் ஆனதாக இருந்தால் என்ன? எது எப்படியிருந்தாலும் காத்துப்படைக்கும் கடவுள் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்து வருகிறது. நம்பிக்கை இருக்கும்வரை கடவுளும் கைவிட மாட்டார்.

அட்டைப் படத்தில் காணப்படுவது செங்கற்பட்டிலுள்ள மன்னுர்சாமி என்ற காவற் கடவுளாகும்.

படம் உதவியவர்: **சம்பத்குமார்.**

பதவியிலிருந்து விலகும் பர்மியப் பிரதமர் யூ நூ

பர்மாவின் பிரதமராகவுள்ள யூ நூ பதவியிலிருந்து விலகுவதென்று நிச்சயித்துவிட்டார். இவருக்கு புத்த மதத்தில் ஈடுபாடு மிக அதிகம். கடமையை உத்தேசித்தே அவர் இவ்வளவு காலம் பதவியிலிருந்தார் என்றே சொல்லலாம். பர்மாவின் அரசியலில் பழமும்தின்று, கொட்டையும் போட்டவர் யூ நூ.

பிரிட்டிஷ் ஆட்சியை பர்மாவிலிருந்து அகற்ற வேண்டும் என்று புரட்சி செய்த கோஷ்டியினரில் கடைசியான நபர் யூ நூ. பர்மாவின் பழங்கால அரசியல் தலைவர்கள் மூலம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைக்காது என்பதை உணர்ந்த இந்த இளைஞர் கோஷ்டியினர் (சுமார் 30 பேர்) எப்படி புரட்சி செய்து காரியத்தை சாதித்துக் கொள்வது என்று திட்டமிடலாயினர். இவர்கள் ஜப்பானியர்கள் தங்களுக்கு உதவுவர் என்று நினைத்து ஜப்பானுக்குப் பயிற்சி பெறச் சென்றார்கள்.

ஐரோப்பாவில் நாடாசை பிடித்து அலைந்த ஜெர்மானியர்களைப் போலவே ஆசியாவில் தன் ஆதிக்கத்தை விஸ்தரிக்க ஜப்பான் முயல்கிறது என்பதை அறிந்ததும் ஜப்பானை எதிர்க்க இந்த முப்பது பேர்களும் முனைந்து விட்டார்கள். இது தான் 'பாஸிஸ்ட் எதிர்ப்பு இயக்க ஸ்தாபனம்' தோன்றக்

பாரதப் பிரதமரும் பர்மியப் பிரதமரும்

காரணம், இவர்களின் தலைவர் தான் ஆங்ஸாங்.

ஜப்பானியரிடமிருந்து பர்மாவை மீட்க இவர்கள் பிரிட்டிஷாருக்கு உதவி புரிந்தனர். பின்னர் பர்மாவுக்கு சுதந்திரம் அளிக்கும்படி கோரினர்.

சுதந்திர பர்மாவில் ஏற்பட்ட குழப்பமானநிலையை சீர்படுத்தி நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றிய பெருமை யூ நூவையே சேரும். யூ நூவுக்கு அயல்நாடுகளில் எதிரிகளே கிடையாது. அவருடன் கருத்து வேற்றுமை பட்டவர்கள்கூட அவரைத் தாராளமாக நம்பினர்கள். மேல்நாட்டினருடன் ஒத்துழைப்பதினுல் கெடுதல் எதுவுமில்லை என்பதை பர்மிய மக்கள் நம்பும்படி செய்தவர் யூ நூ. எப்பேர்ப்பட்டவர்களையும் கவரும் அற்புத சக்தி யூ நூவுக்கு உண்டு. பிறர் கருத்துகளுக்கும் மதிப்பு கொடுப்பவர் அவர். தென்கிழக்கு ஆசிய நாடுகள் நடுநிலைமை வகிக்க முடியும் என்பதை அவர் நம்புகிருர். அவர் நேருவின் அத்யந்த நண்பர். பதவியிலிருந்து விலக முடிவு செய்ததை அவர் நேருவுக்கு தெரிவித்திருந்தார். இதற்கு நேரு பதிலளிக்கையில் இம்முடிவு குறித்து தான் மிகவும் வருந்துவதாகவும், பதவியை விட்டொழிக்க வேண்டும் என்ற எண்ணம் தனக்கும் பல தடவை ஏற்பட்டதாகவும் கூறியிருக்கிருர்.

பர்மா சுதந்திர நாடாகத் தலை தூக்கிச் ஒழுங்கான முறையில் நிர்வாகம் நடத்த, செய்த பெருமை யூ நூவையே சேர்ந்தது. ★

ராஜதந்திரத்தின் முடிவில்

பொதுமக்கள் அடிப்படையிலேயே தவருன ஒரு கருத்தைக் கொண்டிருக்கிருர்கள். பயனில் வெற்றி பெறுவதோ, சாதனைகளைப் பெறுவதோ அல்லது மாற்ருருடன் தந்திரமாக நடந்து கொள்வதோ ஆகியவைதான் பேச்சு வார்த்தைகள் நடத்துவதன் நோக்கம் என அவர்கள் நம்புகிருர்கள். இது உண்மை அல்ல. தமக்கு மோசம் செய்யப்பட்டுள்ளது என ஒரு கட்சி நினைத்தால் சுதந்திர நாடுகளுக்கிடையே ஒரு தீர்வும் பயனளிப்பதாகாது. இந்தத் தூது கோஷ்டிக்குத் தோல்வி, அந்தத் தூதுகோஷ்டிக்கு வெற்றி என்ற பேச்சு எனக்கு எப்பொழுதும் எரிச்சல் உண்டாக்குகிறது. வெற்றியோ தோல்வியோ அதனை அதிக நுட்பமான முறையில் நிச்சயிக்க வேண்டும். நீங்கள் எதிர்பார்த்தது உங்களுக்குக் கிடைத்ததா என்பதன்று வெற்றி. இருக்கும் நிலைமையின் உண்மையான நிகழ்ச்சிகளை பெற்றனரா என்பதுதான் வெற்றியின் அளவு. எந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் பொழுதும், எல்லாக் கட்சிகளும் தொடர்ந்து ஒன்ருக வாழ வேண்டுமென்பதை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்''

—ஐ. நா. பொதுக் காரியதரிசி டாக். ஹாமர்ஷீல்டு

மரீனா—உலகிலே அழகான கடற்கரை

சென்னைக்கு பெருமை அளிக்கும் ஒரு முக்ய இடம் கடற்கரையை ஒட்டிய மரீனாவாக ஆகும். உலகிலேயே மிக அழகானகடற்கரை யொட்டிய சாலைகளில் மரீனா இரண்டாவது ஸ்தானத்தைபெறுகிற தென்று சொல்லப்படுகிறது.

இக்கடல் மணப்பரப்பில் திலகர் கட்டம், காந்தி கட்டம் இரண்டும் இருக்கின்றன. பாரதியார், சத்யமூர்த்தி, காந்திஜி மற்றும் பல தலைவர்களின் பேச்சுகளும் பிரசங்கங்களும் திலகர் கட்டத்தில் நடைபெற்று வந்திருக்கின்றன.

மகாத்மா காந்தியின் அஸ்தி ஐ. ஜி. ஆபீஸுக்கு எதிரிலுள்ள கடலில்தான் கரைக்கப்பட்டது. ஏழைகள், பணக்காரர்கள், நடுத்தர வகுப்பினர்கள் இவர்கள் எல்லாருக்கும் ஒருங்கே மகிழ்ச்சியை அளிக்கிறது மரீனா.

சரித்திரப் பிரசித்தி பெற்ற செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, பிரஸிடென்ஸி கல்லூரி, ஆற்காடு நவாப் அரண்மனை (சேப்பாக்கம்) சர்வகலாசாலை கட்டிடம், பரீக்ஷை எழுதும் மண்டபம், ஆல் இந்தியா ரேடியோ கட்டிடம் எல்லாம் இந்த மரீனாவில் உள்ளன.

கோபாலகிருஷ்ண கோகலே, வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஐந்தாம் ஜார்ஜ், டாக்டர் லக்ஷ்மணஸ்வாமி முதலியார், உ.வே. சாமிநாதய்யர், டாக்டர் அன்னிபெஸண்ட் இவர்களின் சிலைகள் கடலை நோக்கி மரினாவில் காற்று வாங்கிக் கொண்டிருக்கின்றன. கார் உள்ள செல்வந்தர்களுக்கு மரீனாவில் ஒரு தடவை காரில் சென்று திரும்பாவிட்டால் அவர்களுக்கு இரவில் தூக்கம் கூட பிடிக்காது. ஆபீஸிலிருந்து திரும்பும் எவ்வளவோ பேர்கள் காற்று வாங்கிக் கொண்டு, காசையும் மிச்சப்படுத்திக் கொண்டு வீட்டிற்கு நடந்தே வந்து விடுகிறார்கள்.

டிட்டோ முதலிய அரசியல் தலைவர்கள் முதற்கொண்டு பிற நாடுகளின் கலாசார தூது கோஷ்டியினர் வரை சென்னை வரும் யாவரும் இந்த மரீனாவில் ஒருதடவை காரில் சுற்றிவிட்டு போகாமல் இருந்ததில்லை.

மாலை நேரத்தில் ஏற்படும் மகிழ்ச்சியைவிட அதிகாலையில் இங்கு வருபவர்கள் சூரியோதயத்தின் அற்புத காட்சியையும், மீன்பிடிக்கச் செல்பவர்கள் தோணிகளிலேறிச் செல்வதையும் கண்டு மகிழலாம்.

முன்பெல்லாம் கடலை, பட்டாணி மட்டும்தான் விற்கப்படுவதுண்டு. இப்போது சுண்டல், ஐஸ்கீரீம் எல்லாமே மணலில் உட்கார்ந்திருப்பவர்கள் அருகிற்கு வந்து விற்கப்படுகிறது. சிற்றுண்டி அருந்தி காப்பி சாப்பிட பிரியப்படுபவர்களுக்கு 'மொபைல் கான்டீன்' இருக்கவே இருக்கிறது. நல்ல சூடாக காப்பி சாப்பிட்டுவிட்டு காற்று வாங்குவதில் ஒரு தனிசுகம் இருக்கத்தானே செய்கிறது!

கவலையை மறக்க ஒரு வழி வேண்டுமென்றால், மரீனாவில் சிறிது நேரம் காலத்தை கழித்தால் போதும். இந்த மரீனாவை சென்னையிலுள்ள எவ்வளவோ பேர் பயன்படுத்திக் கொள்வதில்லை என்பதை கேட்க ஆச்சரியமாக இல்லையா!

மரீனா கடற்கரை

சென்னைக்கு பெருமையளிப்பது மரீனா கடற்கரை. செல்வமும் ஏழ்மையும் பக்கத்திலேயே உறவாடுவதை அங்கு காணலாம். தார் ரஸ்தாவில் ஓடும் கார்களும் மணற் பரப்பிலுள்ள குடிசைகளும் இதை நிரூபிக்கும் இப்படக் கட்டுரையில் மரீனாவிலுள்ள கட்டிடங்கள், கடற்கரை காட்சிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

போட்டோக்கள் : சந்திரமியான்.



சென்னை சர்வ கலாசாலை
கட்டிடம்செனெட்மண்டபம்
இவ் விரண்டுக்கு மிடையே
யுள்ள ரஸ்தா மூடப்பட்டு
எல்லாம் ஒரே காம்பவுண்
டிற்குள் இருக்க திட்டமிடப்
பட்டிருக்கிறது.

ஆல் இந்தியா ரேடியோ; ஸாந்தோமிலுள்ள ரேடியோ; சரித்திரப்புகழ் பெற்ற ஜார்ஜ் கோட்டை.





கடற்கரையில் காற்று வாங்கிக்கொண்டே வயிற்றுப் பாட்டையும் கவனிக்கலாம். ஹோட்டலே கடற்கரைக்கு வந்துவிட்டது. (மொபைல் காண்டீன்).



பொழுது போக்கிற்கு மட்டும் கடற்கரை உதவுவதில்லை. கடலை நம்பியே ஜீவனம் செய்பவர் களுமிருக்கிறார்கள்.

கடலிலிருந்து ஜீவனம். செம்படவர்களின் குடிசைகள். கட்டுமரம் கரைக்கு வருகிறது. மீன் பிடிக்க உதவும் கட்டுமரங்கள்.





பரீக்ஷை மண்டபம்

★

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் காரியாலயம்.

★

போர் நிறுத்த ஞாபகச் சின்ன ஸ்தூபி.



மேல்: ஐஸ் ஹவுஸ்.

இடது: குவீன் மேரீஸ் கல்லூரி.

வலது: லேடி வில்லிங்டன் கல்லூரி ஹாஸ்டல்.

கீழ்: பிரஸிடென்ஸி கல்லூரி.



மேல்படங்கள்: உ. வே. சாமி நாதய்யர் ஸர். எஸ் சுப்பிர மணியஅய்யர், டாக்டர் லக்ஷ் மணசாமி முத லியார்.

நடுப்படம்: அன்னி பெஸ ண்ட்.

கீழே வி. கிருஷ்ண சாமி அய்யர்.

கோகலே

அரசியல், கல்வி துறைத் யில் பாடுபட்டவர்கள் கடற்கரையில் காற்று வாங்குகிருர்கள்.

சென்னையின் பத்திரிகைகள்

எஸ். நடராஜன், பி. ஏ,

சென்னையில் பத்திரிகைத் தொழில் முதன் முதலில் ஆரம்பித்த பெருமை ஒரு சிலரையே சேரும். அவர்களில் முதன்மை ஸ்தானம் பெறவேண்டியவர் ஜி. சுப்பிரமணிய அய்யர்.

இன்று சென்னை ராஜ்யத்தில் எவ்வளவோ பத்திரிகைகளும், வார மாத சஞ்சிகைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளில் பிரசுரிக்கப்படும் விஷயங்களும் தரத்தில் மிக உயர்ந்துள்ளன. ஆனால் 1878-ல் இந்தியர்களின் பத்திரிகை என்று சொல்லக்கூடியது ஒன்றுகூட இல்லை. இதற்கு 80 வருஷ காலமுன்பே ஏதோ ஐந்தாறு ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் மட்டும் இருந்து வந்தன. இவைகளில் சில வெறும் வர்த்தக விஷயங்களை மட்டும் பிரசுரித்து வந்தன.

இந்தியாவில் முதலில் பிரசுரமான பத்திரிகையின் பெயர் 'ஹிக்கீஸ் கெஜட்' என்பதாகும். இதற்கு அடுத்ததாக 'இந்தியா கெஜட்' என்பதாகும் சென்னையில் ஆரம்பித்த முதல் பத்திரிகை 'மதராஸ் கூரியர்' என்பது.

கிழக்கிந்தியா கம்பெனியின் ஆதிக்கத்திலிருந்து பிரிட்டிஷ் சர்க்காருக்கு அதிகாரம் மாற்றப்பட்டபோது சென்னையிலிருந்த சில பிரமுகர்கள் இந்தியருக்கான பத்திரிகை வேண்டும் என்று நினைத்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டனர்.

லக்ஷ்மிநரசு செட்டியார் தலைமையில் இவர்கள் 'நேடிவ் அஸோஸியேஷன்' (சுதேசிகள் சங்கம்) என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.

முதல் இந்தியர் பத்திரிகை

'நேடிவ் சர்க்குலர்' என்ற பெயரில் முதன் முதலில் ஒரு பத்திரிகை நாராயண ஸ்வாமி நாயுடு என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. அதை லக்ஷ்மிநரசு செட்டியார் விலைக்கு வாங்கி "கிரெஸண்ட்" என்ற பெயரில் நடத்தினார். 1844-ம் வருஷம் அக்டோபர் 2உ இப்பத்திரிகை உதயமாயிற்று. அப்போது கிருஸ்துவ மத பிரசாரத்தில் தீவிர ஊக்கங் கொண்ட பாதிரிமார்களால் "ரிக்கார்ட்" என்ற பத்திரிகை நடத்தப்பட்டு வந்தது 'கிரஸெண்ட்' பத்திரிகை போதிய ஆதரவில்லாமல் மூடப்பட்டு விட்டது.

பத்திரிகைத் தொழிலின் பிதா
ஜி. சுப்பிரமணிய அய்யர்.

பிரபல தமிழ் சஞ்சிகை 'விவேக சிந்தாமணி' ஆசிரியர் ஸி. வி. ஸ்வாமிநாதய்யர்

"பத்திரிகா அரிஷ்டம்"

ராஜா ஸர். டி. மாதவராவ் பேராசிரியர் ஸ்ரீ ரங்கனாத முதலியார், திவான்பகதூர் ரகுநாதராவ் இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து 'நேடிவ் பப்ளிக் ஒபினியன்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். இப்பத்திரிகை சில காலம் மிகச் சிறப்பாக நடைபெற்ற தென்றாலும் "கிரஸெண்டு"க்கு ஏற்பட்ட கதியே இதற்கும் ஏற்பட்டது. இதன் வாரிசு "மதறாஸி" ஏ.ராமச்சந்திரய்யர் என்பவர் இதை ஆரம்பித்து நடத்தி வந்தார். இவர் பிறகு மைசூர் சீப் கோர்ட்டின் பிரதம நீதிபதியாக இருந்தவர். இதுவும் நீடித்து நடக்கவில்லை. 1877-ல் ஸர். தி முத்துஸ்வாமி அய்யர் ஹைக்கோர்ட்டின் நீதிபதியாக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்தது. அதன் பலன் தானோ என்னமோ பத்திரிகை க்ஷீணித்து விட்டது.

தமிழில் வெளியான முதல் சஞ்சிகை 1831-ல் கிருஸ்துவ பாதிரிமார்களால் பிரசார நோக்கந்துடன் பிரசுரிக்கப்பட்டது. சர்க்கார் ஆநரவு இருந்தும் இப்பத்திரிகை இரண்டு மூன்று வருஷங்களுக்கு மேல் நடைபெறவில்லை. அடுத்தபடியாக 1855-ல் ராஜவிருத்தி போதினி என்ற சஞ்சிகை நடத்தப்பட்டது இதன் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. 100 பிரதிகள்மட்டும் அச்சிடப்பட்டனவாம். ஆங்கில பத்திரிகைகளிலிருந்து மொழிபெயர்ப்புகள் மட்டுமே இதில் வெளியிடப்பட்டது பூஜ்யர் பெர்ஸீவல் என்பவர் தினவர்த்தமானி என்ற வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். இதுவும் மதப்பிரசார பத்திரிகையாகவே விளங்கியது.

'ஹிந்து' தோற்றம்

இச்சமயத்தில் தான் (1878) ஸ்ரீ. ஜிசுப்பிரமணிய அய்யர் பள்ளிக்கூட உபாத்யாயர் பதவியை உதறி விட்டு பத்திரிகைத் தொழிலில் சிரத்தை காட்ட முன் வந்தார். ஸ்ரீ. மு. வீரராகவாச்சாரியார், ஸ்ரீ நியாயபள்ளி சுப்பராவ் மற்றுமிருவர் கூட்டுறவுபேரில் "ஹிந்து" பத்திரிகையை சுப்பிரமணிய அய்யர் ஆரம்பித்தார். இம்மாதிரி பத்திரிகை ஏற்பட அது ஏற்ற சமயமாகவும் இருந்தது.

லார்ட் லிட்டன் அப்போது வைஸ்ராயாக இருந்தார். அவர் ஆப்கானிய யுத்தத்தை நடத்தியதும், அதன் விளைவாக வரி பன்மடங்கு அதிகரிக்கப் பட்டதும், அவர் மீதுள்ள வெறுப்பு எல்லாமாகச் சேர்ந்து தேசத்தில் ஒரு கொந்தளிப்பு உணர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. மக்களின் மனதிலுள்ளதை வெளிப்படுத்த பத்திரிகை ஏற்பட்டது எங்கும் வரவேற்கப்பட்டது. ஜி. சுப்பிரமணிய ஐயரே அப்பத்திரிகையின் ஆசிரியரானார். ஹிந்துவின் முதல் இதழ் 1878-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 20-ந் தேதி வெள்ளிக்கிழமை வெளி வந்தது. 1884-ல் ஹிந்து வாரம் ஒரு முறையிலிருந்து

வாரம் மும்முறை வரும் பத்திரிகை யாயிற்று.

1887-ல் மூன்றாவது இந்திய காங்கிரஸ் சென்னையில் நடை பெற்றது. ஜி. சுப்பிரமணிய அய்யர் அப்போது அரசியலில் ஈடு பட்டிருந்ததால் 'ஹிந்து'வின் செல்வாக்கு இன்னும் உயர ஆரம் பித்தது. 1889-ல் ஏப்ரல் 1-ம் தேதி ஹிந்தி தினசரியாக மாற்றப் பட்டு முதல் இதழ் வெளி வந்தது.

1898-ல் ஜி. சுப்பிரமணிய அய் யர் பத்திரிகையின் நிதி நிலை சுவீணிப்பு காரணமாக அதிலி லிருந்து விலகிக்கொண்டார். 'இந் தியன் பேட்ரியட்' என்ற பத்திரி கையின் ஆசிரியரான கருணாகர மேனனிடம் ஆசிரியர் பதவியை அவர் ஒப்படைத்தார்.

தாய் மொழியில் பத்திரிகை

ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யர் பத்திரிகை தொழிலிலிருந்து முற்றி லும் விலகிவிடவில்லை. தாய்மொழி யில் பத்திரிகை நடத்த வேண்டும் என்கிற எண்ணம் அவருக்கு வெகு நாட்களாகவே இருந்து வந்தது.

ஆங்கில பத்திரிகைகளை விட தமிழ் பத்திரிகைகள் அக்காலத் தில் மிக அவசியமாக இருந்தன. ஆகவே சுதேசமித்திரனை அவர் ஆரம்பித்தார். வாரப்பத்திரிகை யாக ஆரம்பிக்கப்பட்ட இது 1899-ல் தினசரி பத்திரிகையாக மாற்றப்பட்டது 1902-ல் மதராஸ் ஸ்டாண்டர்ட் என்ற பத்திரிகைக் கும், பொருளாதார வாரப்பத்திரிகை யான 'யுனைடெட் இந்தியா'விற் கும் ஜி. சுப்பிரமணிய அய்யர் ஆசிரியராக இருந்திருக்கிறார்.

சுதேசமித்திரன் பத்திரிகை நடந்து வந்த போதிலும் ஜனங் களிடையே பத்திரிகை படிக்க வேண்டும் என்கிற அவா இப் போதுள்ளது போல அப்போது கிடையாது.

அறிவைப்பரவச செய்யும் இயக்கம்

இச்சமயத்தில் அறிவைப்பரவச் செய்ய வேண்டும். மக்களுக்கு

'நியூ இந்தியா'வின் ஆசிரியை ஸ்ரீமதி அன்னிபெஸண்ட்.

பத்திரிகைகள் படிக்க வேண்டும் என்கிற ஆவலை ஏற்படுத்த வேண் டும் என்கிற எண்ணம், ஜி. சுப்பிர மணிய அய்யரிடம் உதவி ஆசிரி யராக இருந்த ஸ்ரீ ஸி. வி. ஸ்வாமி நாதய்யருக்கு ஏற்பட்டது 1883ம் வருஷம் முதல் 1892-ம் வருஷம் வரை சுதேசமித்திரனில் துணை ஆசிரியராக இருந்த பின் இவர் அப்பத்திரிகையிலிருந்து விலகி அறிவை பரவச் செய்யும் வேலை யில் ஈடுபட்டார்.

ஜி சுப்பிரமணிய அய்யரும் மு. வீரராகவாச்சாரியாரும் உப யோகமான அறிவை பரவச் செய் வதற்கான சபை என்ற சபையை ஏற்படுத்தி 'ஸ்தானீக சுயாட்சி' என்ற புஸ்தகத்தையும் பிரசுரித் திருந்தனர். அப்போது வைஸ்ரா யாக இருந்த லார்ட் ரிப்பன் சுதேச பத்திரிகைகளின் வாய்ப்பூட்டை தெறித்துவிட்டு 'ஸ்தானீக சுயாட்சி' சுதந்திரத்தை அளித் திருந்தார். லார்ட் ப்ரூஹம் இங்கி லாந்தில் நடத்திவந்த உபயோக மான அறிவைப் பரவச் செய்யும் சபையை உதாரணமாக வைத்துக்

கொண்டு இவர்கள் மேற்படி சபையை அமைத்தார்கள் ஆனுல் துரதிருஷ்டவசமாக இச்சபை வர வர ஊக்கம் குறைந்து மறைந்து விட்டது ஆகவே அறிவை பரவச் செய்யும் நோக்கத்தையுடைய ஒரு ஸ்தாபனத்தின் அவசியம் ஏற்பட்டது.

ஊக்கமளித்த பிரமுகர்கள்

ஸி. வி. ஸ்வாமிநாதய்யர் இந்த ஸ்தாபனம் ஏற்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். பெரிய மனிதர்களை எல்லாம் நேரில் சந்தித்து அவர்களுடைய ஆதரவைப் பெற்ருர். இவருக்கு தூண்டு கோலாக இருந்து இவருடைய நோக்கம் வெற்றிபெறச் செய்தவர்கள் ஸர். தி. முத்துஸ்வாமி அய்யர், ஜி. சுப்பிரமணிய அய்யர், ஸர். சுப்பிரமணிய அய்யர். பூண்டி அரங்கனுத முதலியார் முதலியவர்களே. ஸர். தி. முத்துஸ்லாமி அய்யர் அளித்த பேராதரவை இவ்வளவு அவ்வளவென்று கணக்கிட்டுகூற முடியாது. ஸ்வாமிநாதய்யர் முயற்சியை முதலில் அநேகம் பேர் ஏளனம் செய்தனர். ஆனுல் பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைத்துவிடவே அவர்களும் ஆதரிக்கத் தலைப்பட்டார்கள்.

மக்கள் உணர்ச்சியை தட்டி எழுப்ப பத்திரிகை நடத்திய பாரதியார்

"விவேக சிந்தாமணி"

அறிவை பரவுவதற்கான சங்கம் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பத்திரிகையாக 1892ல் 'விவேக சிந்தாமணி' என்ற பத்திரிகை வெளிவந்தது. தமிழில் சஞ்சிகையாக தோன்றிய முதல் பத்திரிகை இதுவே எனலாம். அக்காலத்தில் நடந்த பத்திரிகைகளில் 'மனேன்மணீயம்' 'ஜனவிநோதினி' குறிப்பிடத்தக்கவை.

விவேக சிந்தாமணி பெயரும் புகழும் பெற்றதற்கு காரணம் அதில் மிக உபயோககரமான கட்டுரைகளும் கதைகளும் வெளியானதே. ஸ்ரீமான்கள் பி. ஆர் ராஜமையர், அ. மாதவையா, வெங்கடரமணய்யர் ('திங்கள்' நிர்வாக ஆசிரியர் ஸ்ரீ ராமனுத் அவர்களின் தந்தை) வி.கோ சூரிய நாராயண சாஸ்திரியார், ஜி. சுப்பிரமணிய அய்யர், சாது சேஷய்யர், பூண்டி அரங்கனுத முதலியார் முதலியவர்கள் இந்த சஞ்சிகையில் வேண்டிய அளவுக்கு விஷய தானம் செய்திருக்கிருர்கள்.

விவேக சிந்தாமணி ஆரம்பித்த 10 வருஷங்கள் கழித்து அதைப் போன்றே அளவு, தரங்களில் ஒன்ருக விளங்கும்படி 'பிழைக்கு வழி' 'விவேகபோதினி' ஆகிய மாத சஞ்சிகைகள் தோன்றலாயின. ஜி. ஏ. நடேசனின் சகோதர் ஜி. ஏ. வைத்யராமய்யர் தான் "பிழைக்கும் வழி"யை நடத்தியவர். விவேக போதினியை அல்லயன்ஸ் குப்பு ஸ்வாமி அய்யர் நடத்தினர்.

அப்போது தமிழில் புஸ்தகங்கள் மிக மிகக் குறைவு. ஸ்ரீ ஸ்வாமிநா

தய்யர் விவேக சிந்தாமணியில் வெளியானகதைகளையும் கட்டுரைகளையும் சிறு புஸ்தகங்களாக பிரசுரித்து குறைந்த விலையில் கிடைக்கச்செய்தார். தமிழில் ஏராளமாக புஸ்தகங்கள் இன்று கண்ணைக் கவரும் முறையில் வெளிவருகின்றன. இதற்கு பிள்ளையார் சுழி போட்டவர் ஸ்வாமிநாதய்யர்தான் அவர் விட்ட புஸ்தகப்பிரசுரத் தொழிலை அல்லயன்ஸ் குப்புஸ்வாமி அய்யர் மிக வெற்றிகரமாக நடத்தினர்.

இப்பத்திரிகைகளில் மிதவாதமே தலை தூக்கிநின்றது. பிரிட்டிஷாருடன் சமரஸமாக நடந்தே தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்ளலாம் என்பது இவைகளின்கருத்து. விக்டோரியா ராணியின் சரித்திரம், வைஸ்ராய்களின் படங்கள் இவைகளே பெரும்பாலும் இடம் பெற்றன. தலைப்பு கொடுக்கும் போது முதலில் ஆங்கிலத்தில் பிரசுரிப்பது பின்னர் தமிழில் பிரசுரிப்பது என்ற வழக்கம் இருந்து வந்திருக்கிறது.



தேச பக்தனையும் நவசக்தியையும் நடத்திய திரு. வி. க.

தேசீய உணர்ச்சி தூண்டிய பத்திரிகைகள்

சுப்பிரமணிய பாரதியார், சுப்பிரமணிய சிவா முதலியவர்கள் பத்திரிகை நடத்த முற்பட்ட பின்னர்தான் தேசீய உணர்ச்சி மக்களிடையே ஏற்பட வழி ஏற்பட்டது. பாரதியார் சுதேசமித்திரனில் உதவியாசிரியராக இருந்த பின் 'இந்தியா,' 'பாலபாரதா' 'கர்மயோகி' 'சக்கிரவர்த்தினி' 'விஜயா' முதலான பத்திரிகைகளை நடத்தினர். 'இந்தியா' நடத்த முதல் போட்டவர் மண்டயம் ஸ்ரீநிவாஸச்சாரியார் என்பவர். இப்பத்திரிகைகளில் 'சக்கிரவர்த்தினி' என்பது மாத சஞ்சிகை, 'இந்தியா' வாரப் பத்திரிகை, 'விஜயா' தினசரி, 'கர்மயோகி' மாத சஞ்சிகை' 'சித்ராவளி' கேலிசித்திரப் பத்திரிகை, 'பாலபாரதா' ஆங்கில வாரப் பத்திரிகை. சூரத் காங்கிரஸுக்கு பின் 'இந்தியா' மிகத் தீவிரமாக எழுத ஆரம்பித்தது. இந்தியா சிவப்பு தாளில் அச்சிடப்பட்டது. கேலி செய்யும் கார்ட்டூன் படங்களை வெளியிட்ட முதல் தமிழ் பத்திரிகை இந்தியாதான். இந்தியாவில் ''என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்று பாரதியார் எழுதிய கவிதை அப்பத்திரிகையை சென்னையில் நடக்க முடியாமல் செய்து விட்டது. 'இந்தியா'வை பாரதியார் புதுச்சேரியிலிருந்து நடத்தினர். பின்னர் மூடும்படியாக நிர்ப்பந்த மேற்பட்டு விட்டது.

நீலகண்ட பிரும்மாச்சாரி என்பவர் ''சூரியோதயம்'' என்ற சஞ்சிகையை நடத்தினர், அதில் பாரதியார் நிறைய எழுதியிருக்கிறார். சுப்பிரமணிய சிவா நடத்திவந்த ''ஞான பானு''வில் பாரதியார் 'சின்னச் சங்கரன் கதை' என்று எழுதி வந்தார், அது அவருடைய சுயசரிதை என்று கூறப்படுகிறது.

"நியூ இந்தியா"

சென்னையில் 'ஸ்டாண்டர்ட்' என்ற ஆங்கில தினசரி ராம சேஷய்யர் என்பவரால் நடத்தப் பட்டு வந்தது. இப்பத்திரிகையே தான் 'நியூ இந்தியா' என்ற பெய ரில் டாக்டர் பெஸண்ட் நடத்தி வந்தார். 'ஸ்டாண்டர்ட்' என்ற பெயரில் இருந்த போது பாரதி யார் வேதாந்தக் கட்டுரைகளை இதில் எழுதியிருக்கிருர். ஹோம் ரூல் இயக்கம் பரவுவதற்கு உதவி யாக இருந்த 'நியூ இந்தியா' வை ஒடுக்க சர்க்கார் ஜாமீன் கேட்டு பறிமுதல் செய்தனர். டாக் டர் பெஸண்ட் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்து அவரே வாதித் தார், பெஸண்ட் கைது செய்யப் பட்டபோது ஹார்ளிமனும், தெலாங்கும் "நியூ இந்தியா"வை நடத்தி வந்தனர். அதுவரை அ. ரங்கசாமி அய்யங்கார் அதை நிற்காது நடத்தினர்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை 21 பாஷைகளில் பத்திரிகைகள் வெளியிட வேண்டும் என்று சொல்வதுண்டு. உலக முழுவதும் இந்தியாவைப் பற்றி பறை சாற்ற அவ்வளவு மொழிகளில் பத்திரி கைகள் வெளிவர வேண்டும் என்பது அவர் கணக்கு.

தேசீய தினசரிகள்

அநேக பத்திரிகைகள் தோன்றி மறைந்திருக்கின்றன இவைகளில் முக்யமாக குறிப்பிடவேண்டியவை ஸ்ரீ டி, பிரகாசத்தின் 'ஸ்வராஜ்யா' தமிழில் நடத்தப்பட்ட 'ஜெய பாரதி' இன்றுள்ள பத்திரிகாசிரியர் களில் பெரும்பாலோர் இப்பத்திரி கைகளில் சேவை செய்தவர்களே தமிழிலும் ஸ்வராஜ்யா வெளி வந்தது. அதற்கு எம். எஸ். சுப் பிரமணிய அய்யர் ஆசிரியராக இருந்தார். ஸ்ரீ வி. என். ரங்கசாமி அய்யங்காரின் 'சுதேசமித்திரன்' திரு வி. க.வின் தேச பக்தன். நவசக்தி, நெல்லையப்பரின் லோகோபகாரி இவைகளும் அக் காலத்தில் சேவை செய்தது குறிப்பி டத் தக்கது. இவை களில் சில அரசி யல் சம்பந்தம் கொண்டவை இல்லை என்ருலும் இலக்கியத் துறை யில் மிகச் சிறந்த சேவையை செய் திருக்கின்றன.

காலணு பத்திரிகைகள்

காலணுவுக்கு சிறிய அளவில் பத்திரிகைகள் வெளிவர ஆரம் பித்தன. காந்தி (டி. எஸ். சொக்க லிங்கம் வெளி யிட்டது) சுதந் திரசங்கு முதலிய வைகளை இதில்



நிற்பவர்கள்: இந்தியன் ரிவ்யூ ஆசிரியர் ஜி.ஏ. நடேச னும் 'பிழைக்கும் வழி' நடத்திய ஜி. ஏ. வைத்ய ராமனும், உட்கார்ந்திருப்பவர் மகாகனம் சாஸ்திரியார்.



சென்னையில் பல தினசரிகளை நடத்திய ஸதானந்த்

சேர்க்கலாம். இவைகள் வெளியானதிலிருந்து பத்திகையில் பிரசுரிக்கும் விஷயங்களின் முறை

பண்டிதர்களும், புரியும் தமிழில் பத்திரிகைகளில் எழுதலாம் என்பதை செய்து காட்டிய தமிழ் தாத்தா.

களிலேயே மாறுதல் காணப்பட்டன. 'மாட்சிமை தங்கிய' 'மேன்மை பொருந்திய' 'கனம்,' ராவ் சாகேப், திவான் பகதூர் முதலிய பட்டங்களை சேர்த்து பிரசுரிப்பது நிற்க ஆரம்பித்தது. ஜனங்களுக்கு எளிதில் புரியும் வகையில் எப்படி செய்திகளைத் தரமுடியுமோ அவ்வளவு அழகாக இக்காலணா பத்திரிகைகள் தர ஆரம்பித்தன. பத்திரிகைகளில் கார்ட்டூன்கள் முக்யத்துவம் பெற ஆரம்பித்தது காலணா பத்திரிகைகளால் தான்.

விகடனின் சேவை அபாரமானது. அதன் ஆசிரியர் ஸ்ரீவாஸன்.

விகடனின் சேவை

தமிழ் நாட்டில் எவ்வளவோ பத்திரிகைகள் எத்தனையோ சேவை செய்திருந்த போதிலும் தமிழ் நாட்டினருக்கு விகடன் செய்துள்ள சேவையை மகத்தானது என்பதை யாரும் மறுக்க முடியாது, படிக்க வேண்டும் என்ற ஆவலை கிளப்பி கதையுடனும் ஹாஸ்யத்துடனும் அறிவை புகட்டி வந்திருக்கிறது விகடன். கல்கி, குமுதம் மற்ற பத்திரிகைகள் விகடன் அமைத்த அஸ்திவார பலத்தில் நன்கு சேவை



'விமோசனம்' ஆசிரியர் ராஜாஜி.

செய்து வருகின்றன. இலக்கிய வளர்ச்சியில் கலைமகள் மாஸிகையை குறிப்பிட வேண்டியதவசியம். பண்டிதர்கள் எழுதும் தமிழ் பாமரர்கள் எளிதில் படிக்கக் கூடியதே என்பதை உ. வே. சாமிநாதய்யரும் அவரைத் தொடர்ந்து கி. வா. ஜகந்நாதனும் ஸ்தாபித்து வந்திருக்கிறார்கள். காலஞ்சென்ற கா. சி. வெங்கட்ரமணி 'பாரத மணி'யின் மூலம் சிறந்த இலக்கியத் தொண்டை செய்திருக்கிறார். 'விமோசனம்' மூலம் ராஜாஜி செய்த பத்திரிகை தொண்டையும் நாம் மறக்க முடியாது. டைஜஸ்ட் முறையில் மஞ்சரி நடத்தப் பட்டு பல அரிய விஷயங்களை அறிய உதவுகிறது.

தினசரிகள்

சென்னையில் ஹிந்து சுதேசமித்திரன் மெயில் இவை தவிர வேறு தினசரிகளே இல்லாமலிருந்தது. 1932-ல் தினமணியும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளும் 1940-ல் ப்ரீபிரஸ், பாரததேவியும் பின்னர் தினசரியும் தினசரியின் ஜாபிதாக்களில் இடம் பெற்றன. விவேகசிந்தாமணியின் ஆசிரியர் ஸி.வி.ஸ்வாமிநாதய்யரின் குமாரர் ஸ்ரீ எஸ். ஸதானந்த் மேற்படி பத்திரிகைகள் சில ஏற்படுவதற்கு காரணமாக இருந்தவர். அரையணாவுக்கு பெரிய அளவில் தினசரி பத்திரிகைகளை கிடைக்க வழி செய்தவரும் ஸ்ரீ ஸதானந்த் தான். டாக்டர் வரதராஜுலு நாயுடு நடத்திய 'தமிழ் நாடு' தினமணி ஏற்பட்டபின் மூடப்பட்டு விட்டது இப்போது அதே பெயரில் தமிழ் தினசரி மதுரையில் நடத்தப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக ஆங்கிலோ இந்தியர் நிர்வாகத்தின் கீழ் இருந்த 'மெயில்' இப்போது இந்தியர் நிர்வாகத்தின் கீழ் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். சென்னையின் பிரபல முஸ்லிம் வாரப்பத்திரிகைகள் சில இப்போது உருதுலிபியில் பிரசுரிக்கப் பட்டு வருகின்றன. ஸைபுல் இஸ்லாம் தாருல் இஸ்லாம் பத்திரிகைகள் சில காலம் தினசரிகளாக இருந்தன,

பத்திரிகை உலகிற்கே புது பாணி ஏற்படுத்தி தந்த 'கல்கி'

சினிமா பத்திரிகைகள் எவ்வளவோ தோன்றி மறைந்து விட்டன. 'பேசும் படம்' என்ற மாஸிகை தமிழ்நாட்டிலும் கடல் கடந்து தமிழர் வாழும் பிரதேசங்களிலும் மிகப் பிரபலமாக இருந்து வருகிறது. எல்லா விஷயங்களிலும் ஜனங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே 'திங்கள்' சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டு பொதுஜன ஆதரவைப் பெற்று வருகிறது.

குழந்தைகளுக்காகவென்றே சில சஞ்சிகைகள் நடைபெற்று வருகின்றன. இவைகளில் அம்புலி மாமா 'கண்ணன்' இவைகளை முக்யமாக குறிப்பிட வேண்டும். 1924-ல் தேசத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டபோது பத்திரிகைகள் மீது சர்க்கார் விசேஷ 'கவனம்' செலுத்தினர். அடிமை நாட்டில் பத்திரிகை நடத்துவது முடியாது என்று காந்திஜி கூறியதை யொட்டி சில தேசீயப் பத்திரிகைகள் மூடப்பட்டன. யுத்த காலத்தில் தேசத்தின் பாதுகாப்பை உத்தேசித்து எவ்வளவோ கட்டுப்பாடுகளுக்கு பத்திரிகைகள் உட்பட வேண்டியதாயிற்று. இப்போது இவை எல்லாம் நீங்கிவிட்டன. பத்திரிகை படிப்பவர்களின் எண்ணிக்கை இன்னும் கணிசமாக உயரவில்லை. ஜனநாயக வளர்ச்சிக்கு பத்திரிகைகள் சேவை அவசியம். அவைகளை மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அழகு

புதுமை வாணன்

வீட்டுக் கழகு மெல்லியர்! ஆண்டகை
வீருக் கழகு வெற்றிகளாம்!
நாட்டுக் கழகு நல்லவர்! நாட்டினில்
நல்லவர்க் கழகு நாகரீகம்!

ஊருக் கழகு உயர்கலைக் கூடமாம்!
ஊருணிக் கழகு நீர் நிறைவாம்!
பேருக் கழகு பெறும் புகழ்! பேரவைப்
பேச்சுக் கழகு மேற்கோளாம்!

அறிவுக் கழகு நன்மை யமைப்பது!
அரசுக் கழகு நல்லமைச்சாம்!
உறவுக் கழகு ஒற்றுமை! உலகினில்
உடைமைக் கழகு பொதுமை யப்பா

கண்ணுக் கழகு கண்ணோட்டம்! நல்ல
காதற் கழகு கற்புடைமை!
பெண்ணுக் கழகு இனிமை செயல்! அவள்
பெண்மைக் கழகு பேரன்பாம்!

பாட்டுக் கழகு பக்கமே எங்களாம்!
பாவுக் கழகு அணிநலமாம்!
ஏட்டுக் கழகு நல்ல இலட்சியம்!
எழுது வோர்க் கழகு நடுநிலையாம்!

மாலே நேரம் மகிழ்வூட்டக் கூடியதே. ஆனல் பலருக்கு மனக் கஷ்டத்தையும் தரக்கூடியது......

மாலேக் காட்சிகள்

புதுமைவாணன்

தொடு வானம் சிவந்தொளிரும் மாலேப் பொழுது. பெருமிதத்தோடு முகங்காட்டியிருந்த தாமரை மலர்கள் வெட்கித் தலேகுனிகின்றன. அந்நேரம் வரையிலே மொட்டாக இருந்த அல்லி மலர்கள் புதுப் பருவ மங்கையெனப் பூத்துப் புது முகம் காட்டிப் புன்னகைப் புரிகின்றன.

மாலேப் பொழுது மலர்களே மட்டுமல்ல, மனிதர்களேக் கூட இத்தகைய மாறுபட்ட நிலேமையிலே நிறுத்தி வைத்து வேடிக்கை பார்க்கக் கூடியது. காதலரின் வருகையை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் காதலியர்க்கு இந்த மாலேப் பொழுது போர்க்களத்திலே மாற்ருன் வருவது போல வருமாம். ஆனல் காதலன், பக்கத்தில் இருந்து விட்டாலோ தேனில் ஊறிய பலாச் சுளேயைச் சுவைந்துத் தின்பது போன்ற இன்பந்தான்.

நகரை அடுத்திருக்குமோர் சிதளப் பூஞ்சோலே. மலர் கொய்வதற்காக மங்கை யொருத்தி அந்தப் பூஞ்சோலேயினுள் புகுந்தாள். மலர்களின் எழிலிலே மனதைப் பறிகொடுத்தாள். வேறெதையும் அவள் அப்போது கவனிக்கவில்லே. மாலேப் பொழுது வந்து விட்டதே என்ற நினேவுகூட இல்லே; அவ்வளவு தூரம் சொக்கிப் போயிருந்தாள். அந்தச் எழிலிலே.

மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் மாடுகளே முன் நடத்தி மிக இனிமையாகப் புல்லாங்குழல் ஊதிக் கொண்டு வந்தான். சோலேயின் அருகே வந்து விட்டான் அந்த மாடு மேய்க்கும் சிறுவன். அங்கேயே ஒரு மரத்தின் அடியில் இருந்த ஒரு பாறையின் மீது உட்கார்ந்து மிக இனிமையாகக் குழல் ஊதிக் கொண்டிருந்தான். குழல் ஊதும் ஒலி சோலேயில் மலர்களின் எழிலில் சொக்கிப் போயிருந்த கோதையின் செவியில் பட்டுவிட்டது. அப்பொழுது தான் அவளுக்கு மாலே நேரம் நினேவிற்கு வந்தது. நினேவிற்கு வரும்படி செய்தது அந்த மாடு மேய்க்கும் சிறுவனின் குழல் ஒலி. நினேவு பெற்ற அந்த மங்கை காதலன் வருகிருனு என்று சுற்றுமுற்றும் பார்த்தாள். கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலே தட்டுப்படவில்லே. அவளுக்கு ஆத்திரம் வந்து விட்டது. ஆத்திரப்படும் அவள் உள்ளம் ஏதோ பேச ஆரம்பித்து விட்டது. மன்னன் வரையிலே சென்று விட்டது அவளது ஆத்திரம். ''இந்த நாட்டிலே இருப்பவர்களுக்குத் துன்பம் ஏற்படாமல் மன்னன் பாதுகாத்துக் கொண்டிருக்கிருன் என்கிருர்களே! அது எப்படி உண்மையாகும்? இந்த மாலேப் பொழுதிலே ஆயர் குலச் சிறுவன் ஊதுகின்ற குழலின் ஒலி எனக்குக் கொடுமை செய்வதையே மன்னன் தடுக்கவில்லே, அப்படியிருக்க எல்லோரையும் அவன் துன்பத்தினின்றும் காப்பாற்றி பாதுகாக்கிருன் என்று எப்படி சொல்ல முடியும்?'' என்று மன்னனேக்கூட ஏளனமாகப் பேசி விடுகிருள் அவள்.

தெண்ணீர் நறுமலர்த் தார்ச்
சென்னி இளவளவன்.
மண்ணகம் காவலனே
என்பரால்...மண்ணகம்
காவலனே ஆனக்காற்
காவானே, மாலேக்கண்
கோவலர் வாய் வைத்த குழல்

என்ற முத்தொள்ளாயிரச் செய்

யுள் நமக்கு இந்நிகழ்ச்சியை உருவகப்படுத்திக் காட்டுகிறது.

அடுத்து, மாலைப் பொழுதைப் பற்றித் தோழியிடம் தலைவி கூறுவதாக ஓரிடம் உண்டு சிலப்பதிகாரம் வரிப்படலத்திலே.

கதிரவன் மறைந்து விட்டான். கரிய நிறமுள்ள இருள் பரவிக் கொண்டிருந்தது. தலைவன் வந்தானில்லை! உடனே அவள் தன் தோழியைப் பார்த்து என்ன கேட்டாள் தெரியுமா?

சந்திரனை ஒத்த முகமுடைய தோழி! சந்திரனை ஒளிரச் செய்து மனதைச் சஞ்சலப் படுத்துவதோடல்லாமல் கதிரவனையுமல்லவா விழுங்கி விட்டது இந்த மயக்கந் தருகிற இந்த மாலைப் பொழுது. நம் தலைவர் போயிருக்கிறாரே அந்த ஊரிலும் இருக்குமல்லவா இதைப் போன்ற மாலைப் பொழுது?'' என்று தலைவி கேட்கும் போது அன்பு உள்ளத்தே எழுந்த ஆத்திரத்தில் தோன்றிய சொற்கள் ஒலிப்பதை கேளுங்கள் :

''கதிரவன் மறைந்தனனே !
காரிருள் பரந்ததுவே !
புதுமதி புரை முகத்தாய்
போனார் நாட் டுளதாங் கொல்?
மதியுமிழந்து கதிர் விழுங்க
வந்த இம் மருள் மாலை.''

இனி கலித்தொகையிலே காணப்படும் மாலைப் பொழுதைச் சற்று பார்ப்போம்,

தன் காதலனின் வருகைக்குக் குறித்திருந்த குறியிடத்திற்கு வந்து அவள் வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருந்தாள். கண்ணிமைக்காது வழிமேல் விழிவைத்துத் தன் காதலன் வரும் திசையை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

பரவியிருந்த ஒளி கொஞ்சம் கொஞ்சமாக மங்கிக் கொண்டே வந்தது, வேசியின் மையலிற் சிக்கிய மைனரின் பணம் போல.

சற்றுத் தொலைவிலிருந்த திடலினுள்ள தனித்து நிற்கும் பனைமரம் அவள் கண்ணிற் பட்டது. அதற்குச் சற்று தொலைவில் ஒரு மலை! மேற்கில் அஸ்தமித்துக் கொண்டிருந்த கதிரவனின் கதிர்கள் மாந்தளிரினைப் போல செந்நிறமாகத் தோன்றியது, எங்கும் கொஞ்சம் கொஞ்சமாக இருள் பரவிக் கொண்டு வருவதைக் கண்டு விட்டாள். அவ்வளவுதான் அவள் கற்பனை சிறகடித்துப் பறக்க ஆரம்பித்து விட்டது.

இதுவரையிலே அவர் வரவில்லை. இனி அவர் வந்ததும் நான் அவரைக் கோபித்துக் கொள்வேனோ என்னவோ என்றெண்ணித்தான் இந்த அந்திச் செங்கதிர் மறைந்து கொள்ளப் போகிறது போலும். இருள் பரவி விட்டால் அவர் இங்கு வரமாட்டார் என்ற எண்ணமா? சீச்சீ இதென்ன மிக இழிவான எண்ணமல்லவா? தளிர் நிறத்துச் செங்கதிரே! அன்று மெல்லிய தோள்களை நெகிழ்வுறச் செய்தவர் இன்று இந்நேரம் வரைக் காணவில்லை தான். எனினும் அவரது மேன்மைத் தன்மையை யல்லாமல் அவரிடத்துள்ள குணங்களையும் செயல்களையும் வைத்துக் கொண்டு இது நன்மையானது; இது தீமையானது என்றெல்லாம் நான் எடை போட்டுப் பார்க்கமாட்டேன். பழங்காலந் தொட்டு வாழ்ந்து வருகிற இந்த உலகத்திலே இதனை நீ பார்த்ததுதான் இல்லையென்றால் காதாலே கேட்டுக் கூட அறிந்ததில்லையா?' என்று அவள் பேசுவதைப் பாருங்கள்.

''மன்றப் பனைமேல்
மலை மாந் தளிரே !
தொன்றிவ் வுலகத்துக்
கேட்டும் அறிதியோ?
மென்றோள் நெகிழ்த்தான்
தகையல்லால் யான் காணேன்
நன்று தீதென்று பிற.''

எத்தகைய அழகான சித்திரம் பாருங்கள்.

அடுத்தபடியாக. காதலெனும் வேதனைக் குகையிலே சிக்கிய மற்றொரு கன்னிப் பெண்ணை குறள் தந்த வள்ளுவர் நம்முன் கொணர்ந்து நிறுத்தியிருக்கிறார் பாருங்கள்.

காதலனும் காதலியும் முதல் நாளில் கூடி இன்பந் துய்த்தனர். காலை நேரம், தான் பெற்ற இன்பத்தை எண்ணிப் பார்க்க வாய்ப்பில்லாமல் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து முடித்தாள்: நேரம் போய்க் கொண்டேயிருந்தது. காதலனோடு முதல் நாளிலே பெற்ற இன்பம் அரும்பாகத் துளிர்த்தது. கொஞ்சம் கொஞ்சமாக அவளது இன்ப நினைவு வளர்ந்து கொண்டே இருந்தது. மாலைப் பொழுதாகி விட்டது. இப்பொழுது அரும்பு அரும்பாகவே இல்லை! மலர்ந்து விட்டது. இன்ப நினைவு ஏக்கமாக மாறி விடுகிறது. எனினும் அவள் தனது காதலனை நொந்து கொள்ளவில்லை! அவள் உள்ளத்தை வருத்திய மாலைப் பொழுதைத்தான் நொந்து கொண்டாள். அவளது நொந்த உள்ளத்தின் சொற்கள் சிந்துவதைப் பாருங்கள் :

''காலைக்குச் செய்தநன்றென்கோ!
எவன் கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.''

எத்தகைய பொருள் பொதிந்த சொற்கள். காலைக்கு நான் எத்தகைய நன்மையும் செய்யவில்லை தான் என்றாலும் அது என்னை இத்தனை தூரம் வருத்தவில்லை. இந்த மாலைப் பொழுது என்னை ஏன் இப்படி வாட்டி வதைக்கிறது? இந்த மாலைக்கு நான் ஒன்றும் கெடுதல் செய்துவிடவில்லையே! என்றாளாம்.

இத்தகைய உயிரோவியக் காட்சிகளாக மாலை வர்ணனைகள் பல, பழந்தமிழ் இலக்கியங்களிலே கிடக்கின்றன. காதல் உலகிலே உலவுவோர்க்கு அவை இன்பமாகவும் இருக்கலாம், துன்பமாகவும் இருக்கலாம் என்றாலும் நமக்கு இன்ப ஊற்றுக்களே!

சிருஷ்டி விநோதம்

- ★ காட் என்கிற மீன்கள் லட்சக்கணக்கான முட்டைகள் இடுகின்றன. இவைகளில் பத்தோ பதினைந்தோ தான் பிழைக்கின்றன. பாக்கி எல்லாம் அழிந்து போகின்றன.
- ★ ஸாலமன் மீன்கள் முட்டை யிட்டதும் அதன் பக்கமே போகாது!
- ★ முட்டைகளை பாதுகாக்க கூடுகட்டும் மீன்கள் ஸ்டிகில் என்பவைகள்.
- ★ ஆமைகள் தரையில் குழி பறித்து முட்டைகள் இடுகின்றன. முட்டைகளை மண் போட்டு மூடி வைக்கின்றன.
- ★ ஸ்தன்னிய ஜீவியின் (மாமல்) பிளாடிபஸ் குட்டி போடாமல் முட்டை இடுகின்றன.
- ★ எகின்னு என்கிற பிராணியும் முட்டை இடுகிறது. இதற்கு முலைக்காம்புகள் கிடையாது. இதன் குட்டிகள் மார்பு தோலை நக்கி கசிவு நீரை உட்கொள்கின்றன.
- ★ கங்காருவின் கர்ப்ப வாசம் 30 நாட்களே. பிறந்த பின் நான்கு மாதம் தாயின் வயிற்றுப் பையில் வளரும்.



மின்சார விளக்கு

மாத்தளை அருணேசர்

அக்காலத்தில் அலாவுத்தீன் என்பவன் மாயாவிளக்கை வைத்துக் கொண்டு அதை தனக்கு அடிமையாகச் செய்திருந்தானென்று சொல்லப்பட்டதைக் கட்டுக்கதையாகவே எண்ணி வந்தோம். ஆனால் இக்காலத்தில் உண்மையிலேயே — கண் முன்பாகவே லட்சக் கணக்கான விளக்குகளை ஏற்படுத்தி அவற்றை மனிதன் தன் அடிமைகளாக வைத்துக் கொண்டான். ஓர் பொத்தானைத் தொட்டு அமுக்கிய உடனே ஆச்சரியமாய் வெளிச்சம் உண்டாகக் கூடியதான அவ்வளவு விசித்திரங்களை மனிதன் செய்திருக்கிறான்! அவ்வித விளக்குகளைத்தான் மின்சார சக்தியால் பிரகாசிக்கும் மின்சார விளக்குகள் (எலக்ட்ரிக் லைட்ஸ்) என்று கூறுகிறோம்.

ஆதிகாலத்தில்

இம் மின்சார தீபங்கள் உண்டாவதற்கு முன்னமே ஆதி மனிதர்கள் பற்பல வித உபாயங்களால் வெளிச்சம் உண்டாக்கிக்கொள்ளத் தெரிந்திருந்தனர். முதலாவது தோன்றிய மனிதர்கள் காடுகளில் திரிந்தலைந்த போது, கற்கள் ஒன்றோடொன்று இடிபட்டும், மூங்கில்



ஒன்றோடொன்று உராய்ந்துக் கொண்டும் நெருப்புப் பிடித்தெரிந்து வெளிச்சம் உண்டாகி பதைக் கண்டு, அதிலிருந்து காய்ந்த சருகுகள் சுள்ளிகள் ஆகியவற்றைக் கொளுத்தி அதனுலேற்பட்ட ஒளியைப் பயன்படுத்தும் வழியைத் தெரிந்துக்கொண்டிருந்தனர். சிலவகையான மரக்கட்டைகள் நின்று எரிவதைக் கண்டு அவற்றைப் பந்தங்களாக உபயோகப்படுத்தவும் கற்றனர், சில காலஞ் செல்ல, கைப்பந்தங்களை உண்டாக்க அறிந்தனர்.

அகல் விளக்குகள்

இந்தியாவில் மிகப் பழைய காலத்திலிருந்து எண்ணெய் விளக்குகள் உபயோகத்திலிருந்து வந்தன. ஆமணக்கு, எள், தேங்காய் முதலான பல விதமான வித்துக்களிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய்களை உபயோசப்படுத்தி வந்துள்ளனர். ஆமணக்கு எண்ணெய்க்கு ''விளக்கெண்ணெய்'' என்ற பெயர் மிகப் பழைய காலத்திலிருந்தே வழங்கி வந்துள்ளதை அறியலாம்.

மேல் நாடுகளில் ஆங்கிலோ சாக்ஸானியர் காலத்தில் கொம்பு போன்ற குழாய்களில் எண்ணெய் விட்டு எரிக்கக்கூடியதான குழாய் விளக்குகள் கண்டு பிடிக்கப்பட்டன. பின்னர், கொழுப்பு எண்ணெய்களால் எரியும் தீவர்த்திகள் கண்டு பிடிக்கப்பட்டன. அதன் பின் (சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே பொனிஷியரால் கண்டு பிடிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்ற) மெழுகுவர்த்தி செய்யும் முறைகளை ரோமர்கள் கண்டு பிடித்து உபயோகத்துக்குக் கொண்டு வந்தனர். இதுவே பிற்காலத்தில் பல நூற்றாண்டுகளாக வெளிச்சம் தரும் சாதனமாக உபயோகத்திலிருந்து வந்ததாகத் தெரிகிறது. 1681-ல் தான் லண்டன் தெரு விளக்குகள் எண்ணெயால் எரியவிடப் பட்டன.

வாயு தீபம்

வெகு காலத்திற்குப் பின்பு, நிலக்கரி வாயுவினுல் எரிகின்ற ''வாயு தீபம்'' என்னும் விளக்கு கண்டு பிடிக்கப்பட்டது. இந்த வாயு தீபம் அல்லது ஆவிவிளக்கு கண்டு பிடிப்பதற்கு மூலகாரணஸ்தராயிருந்தவர் ''வில்லியம் மர்டாக்'' 1754—1839 என்ற பொறியியல் நிபுணர் என்பதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இவர் 1792-ம் ஆண்டில் செய்த ஆராய்ச்சியால் நிலக்கரியினிடமிருந்து உண்டாகும் வாயுவானது மெழுகுவர்த்தியை விடப் பன்மடங்கு ஒளிதரக் கூடியதெனக் கண்டு பிடித்தார் நுண்ணியதும் எரிபடாததுமான 'மாண்டில்' என்னும் ''சுடர்க்கவி'' மூலமாய் இவ்வாயுவைப் பிரகாசிக்கச் செய்து வெளிச்ச முண்டாக்கப் பட்டது. இந்த மாண்டில் என்ற சுடர்க்கவியை 'வெல்பேக்' என்பவர் கண்டு பிடித்தார்.

இதற்கிடையில், 1787-ல் ''ஆர்கண்டு லாம்ப்'' என்னும் ஓர்வித விளக்கை டாக்டர் 'ஆய்மி ஆர்கண்டு'' என்னும் ஸ்விஸ் நாட்டு வைத்தியர் ஒருவர் கண்டு பிடித்தார். இந்த விளக்கு வட்டவடிவமான காயும் - திரியும் கூடியதாயும், புகையைத் தடுக்கவும் பிரகாசம் அதிகப் படவும் தக்கதாக கண்ணுடி 'சிமினி'யை உடையதாயும் அமைக்கப்பட்டிருந்தது. இதில் உள்ள காயில் காற்றோட்டத்தால் சுடர் அதிகப்படத் தக்க தாய்த் துவாரங்கள் இடப்பட்டிருந்தன. இதுதான் தற்கால நவீன (லாம்ப்) விளக்குகளுக்கு அடிப்படையாயமைந்தது.

1814-ம் ஆண்டில் ஆவி விளக்குகளை லண்டன் தெருக்களில் உபயோகிக்கும் முயற்சி தொடங்கப் பட்டது. இதனுல் பலன் ஏற்பட்டதைக் கண்டு எல்லா நகரங்களும் இதனைப் பின்பற்றின. 1860-க்கும் 1880-க்கும் இடையில் இது எல்லா நகரங்களிலும் இம்முறை பரவத் தொடங்கியது.

மண்ணெண்ணெய் உபயோகம்

பிற்காலத்தில் ஏற்பட்ட விளக்குகளில் 'பாரபின்', 'ஸ்பிரிட்', 'கெரோஸின்'' (மண் எண்ணெய்) இவைகளால் எரியவிடப்படும்

தீபங்கள் முக்கியமானவை எனலாம். மண்ணெண்ணெயை விளக்குகளுக்கு முதல் முதல் உபயோகிக்கத் தொடங்கியது 1826-ம் ஆண்டில்தான்.

இத்தனைவகை வெளிச்சந்தரும் சாதனங்கள் ஏற்பட்டிருந்தன வென்றாலும், பிற்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மின்சார சக்தியாலெரியும் மின்சார விளக்கே உலகினருக்கு மிகவும் உபயோகமும் வசதியும் உடையதாக அமைந்தது.

இம் மின்சார விளக்கைக் கண்டு பிடிக்க முதலில் மூலகாரணமாயிருந்தவர் ''சர் ஹம்ப்ரி டேவி'' என்பவராவர். இவர் 1815-ம் ஆண்டில் வாயுதீபத்தை ஆபத்தற்ற முறையில் செய்து முடித்து அதன் பின் மின்சாரத்தைப் பற்றிச் சோதனை நடத்தி வந்தார். அப்போதுதான் இவருக்கு மின்சாரம் வெளிச்சம் தரும் என்பதை அறியச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. மின்சாரக் கருவி யொன்றுக்கு இரு கம்பிகளைத் தொடுத்து, இரு நுனிகளையும் பிணைத்துப் பார்த்தார். அதனால் யாதும் பயன் தோன்றாவிடினும், அந்நுனிகளை நீக்கியவுடன் ஒளி உண்டாகியது. அப்போது கரித்துண்டுகளை நுனியில் வைக்க அது சூடடைந்து பெரும் பிரகாசமடைந்தது. இதிலிருந்து தான் மின்சாரம் ஒளி தருமென்பதை அவர் கண்டு பிடித்தது. ஆனால், இவரின் ஒளியுண்டு பண்ணுங் கருவியானது ஆராய்ச்சி சாலைகளில் சோதனை நடத்துவதற்கு மாத்திரமே தகுதியாயிருந்தது. வெகுகாலம் வரை இவரோ மற்ற எவருமோ அநுபவ சாத்தியமாக மின்சாரத்தால் ஒளியுண்டு பண்ணக் கூடிய கருவியை உற்பத்தி செய்யமுடியவில்லை. 1858-ம் ஆண்டில் சர் டேவிக்கு மகாராணியாரால் 'ஹாம்ட்டன்' என்னுமிடத்தில் அளிக்கப்பட்ட அழகிய வீடொன்றில் இவர் தம் வாழ்நாட்களைக் கழித்த போது தாம் கண்டு பிடித்த மின்சார காந்த ஒளியினால் விளக்குக் கூண்டுகளை வெளிச்சமடையச் செய்ய இயலுமா என அறியப் பல சோதனைகள் செய்து சித்திபெற்றார். இவர் செய்த மின்சார விளக்கை 'டங்கனெஸ்' என்னுமிடத்தில் நாட்டினர். அது பிரிட்டிஷ் கால்வாயைக் கடந்து கடும் ஒளி பரப்பியதை அவர் கண்டு களித்தார். இவர் மின்சார விளக்கு உண்டாக்குவதற்கு 'மைக்கேல் பாரடே'யின் மின்சார ஆராய்ச்சிகளும் வழி காட்டியா யிருந்தன.

ஆனால், ரஷ்யர்கள் தான் முதன் முதல் மின்சார விளக்கைக் கண்டு பிடித்தன ரென்றும், 1873-ம் ஆண்டிலேயே செயின்ட் பீட்டர்ஸ் பர்க் சதுக்கத்தில் மின்சரார விளக்குகள் உபயோகிக்கப்பட்டன என்றும் உரிமை கொண்டாடப்படுகிறது.

பல ஆராய்ச்சிகள்

1874-ம் ஆண்டில் ''லோடிக்வின்', ''கோஸ்லாப்'' என்னுமிருவர்கள் சேர்ந்து ஒருவித மின்சார விளக்கை லண்டனில் கண்டுபிடித்தனர். இதை பின்னர் 1878-ல் எடிஸன் விஞ்ஞானி புதிய முறையில் அபிவிருத்தி செய்தார். இவர், விளக்குகளுக்கு மின்சாரத்தைச் சாதாரணமாகவே பிரயோகிக்கும் விதத்தை உண்டாக்கினார். இதே ஆண்டில்தான் முதன் முதலாக மின்சார விளக்கு இங்கிலாந்திலுள்ள லிவர்பூல் ரயில்வே நிலையத்தில் போடப்பட்டது.

இவருடையது போலவே 1879ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ந் தேதி ஜோஸப் வில்சன் ஸ்வான் என்பவரும் நவீனமான மின்சார விளக்கைத் தம் சொந்த யூகத்தினாலேயே கண்டு பிடித்தார். அவர் 700 பேர்களடங்கிய சபையில் நியூகாஸிலில் என்னுமிடத்தில் தமது புதிய மின்சார விளக்கைப் பற்றி முதல் முதல் பிரசித்தப்படுத்தினார். அதன் பின் தான் அதனை விடத் திருந்தியதான ஓர் மின்சார விளக்கை 1912-ல் அமெரிக்கர் கண்டு பிடித்தனர்.

மின்சார சக்தியால் எப்படி வெளிச்சம்?

இனி மின்சார சக்தியால் எப்படி விளக்குகள் மூலம் வெளிச்சம்

உண்டாக்கப்படுகிறது என்பதைப் பார்ப்போம் :

கண்ணாடிகளால் அழகிய குமிழ்கள் (பல்புகள்) செய்து அவற்றினின்று காற்றை வெளிப்படுத்தி, அதாவது ரிக்தம் செய்து அதனுள் 'பிலமெண்ட்' என்ப்படும் நுண்ணிய உலோகக் கம்பிகளைப் பொருத்தி அவற்றின் வழியாக மின்சார சக்தியைச் செலுத்துவர். இந்தக் கம்பியானது மயிரிழை போல மெல்லியதா யிருக்கும். இக் கம்பி இப்படி இருப்பதனல் மின் சாரத்தைத் தடை செய்கிறது. தடை செய்யப்படுவதினல் மின் சார சக்தி உஷ்ண சக்தியாக மாறிப் பின் உஷ்ணம் அதிகரிப்பதினல் வெண்மை நிறத்தைப் பெற்றுத் தகதகவென்று ஒளி வீசுகிறது. அந்த ஒளிதான் தெளிச்சம் தருகிறது.

இது முதலில் கண்டு பிடிக்கப் பட்ட சமயம், இதன் பல்புகளினுள் 'கார்பன் பிலமெண்ட்' என்னும் மெல்லிய கம்பியினூடே மின்னோட்டம் செலுத்தப்பட்டு வெளிச்சம் உண்டாக்கப்பட்டு வந்தது. அக்கம்பிகள் உயர்ந்த வெப்பநிலையடைந்தால் தான் வெளிச்சம் நன்ருகப் பிரகாசிக்கும். அவ்வித வெப்பம் காற்றுப்பட்டு அதனுடன் கலந்து தணிவடைந்து வீணுக்கப் படாமலிருப்பதற்காகவே கண்ணாடிப் பல்பு (குமிழ்)களிலுள்ள காற்று அகற்றப்பட்டது. இதனல் கம்பியின் வெப்பநிலை அதிகரித்து நிற்க வசதியேற்பட்டது. ஆனல் அக்கரிக் கம்பிகள் நீடித்த காலத்திற்கு உபயோகிக்கப்பட முடியாமல், சொற்ப காலத்திலேயே எரிந்து உதிர்ந்து அழிந்தன. இதைத் தடுப்பதற்கேற்ற வழி வகைகளை ஆராய்ச்சி செய்த தன் பயனாய், ''டங்ஸ்டன்'' என்னும் ஓர் வகை கடினமான உலோகத்தாலாகிய கம்பிகள் நீடித்து நிற்குந் தன்மை பொருந்தியன என்பது கண்டு பிடிக்கப்பட்டது. அவை தான் இப்பொழுது உபயோகத்திலிருக்கும் மின்சார விளக்குகளில் பொருத்தப் பட்டுள்ளன. அக் கம்பியைச் சுருளாக வைக்கப்படுவதே சிறந்ததென்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 'டங்ஸ்டன்' கம்பி அதிகம் சூடு தாங்கக் கூடியது. 3400 பாகை (சென்டிகிரேட்) சூடு அடையும் வரையில் உருகாது.

இங்ஙனம், மின்சார விளக்கானது பல மேதாவிகளின் ஆராய்ச்சி உழைப்பால் சீர்திருத்தம் பெற்றதோடு, அதனைக் குறைந்த செலவில் உற்பத்தியாக்கி உலக மெங்கிலும் மலியச் செய்து விட்டதால் இப்போது உலகினராய நமக்கு இருந்த இடத்தை விட்டு அகலாமலே இருளை அகற்றும் ஜோதிச் சுடர் வெளிச்சம் பிரகாசிக்கவும் அணையவும் செய்துக் கொள்ளக் கூடிய வசதி கிடைத்துள்ளது.

மரங்களின் ஆயுட்காலம்

தென்னை, பனை	120	வருஷங்கள்
பாக்கு	100	,,
மா மரம்	80	,,
பலா மரம்	75	,,
எலுமிச்சை, நாரத்தை	20	,,
மூங்கில்	30	,,
அரசு, ஆலமரம்	பல நூறு வருஷங்கள்	

மறக்க முடியாத சம்பவம்

மறக்க முடியாத சம்பவங்கள் சிலவேனும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 200 வார்த்தைகளுக்குள் எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 10 சன்மானம் தரப்படும். பிரசுரம் செய்யப்பட்ட இதர சம்பவங்களுக்கும் ரூ. 3 வீதம் கொடுக்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்'. 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு. சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

'சோதிடம் பொய்யல்ல'

அன்று ஞாயிற்றுக்கிழமை. என் சகோதரியின் குமாரர் ஒரு சோதிடரை எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து, "இந்த சோதிடர் மலையாளத்திலிருந்து வந்திருக்கிறார். இவர் பெயர் ஸ்ரீனிவாசன் போத்தி சோதிட சாஸ்திரத்தில் மிகவும் கெட்டிக்காரர். இவர் கூறுகிற பலன்கள் ஒவ்வொன்றும் வீண் போகாது. அப்படி அப்படியே நடந்து வருகிறது" என்று ரொம்பவும் சிலாகித்துப் பேசினர்.

என் கணவருக்கு சோதிடத்தில் அவ்வளவு நம்பிக்கை கிடையாது. ஏதோ மைத்துனி குமாரன் அழைத்து வந்திருக்கிறானே, பார்ப்போம். பொழுது போக்காக என்றெண்ணி இரண்டு ஜாதகங்களை-ஒன்று ஆண் ஜாதகம், மற்றென்று பெண் ஜாதகத்தைக் கொடுத்து பார்க்கச் சொன்னார்.

சோதிடர் பார்த்தார்! ஜாதகங்களை நன்றாகப் பார்த்தார்! ஹூம்! "இந்தஜாதகத்தை யார்பொருத்தம் பார்த்து சேர்த்தார்கள்? விரைவில் கட்டாயம் வைதவ்யம் சம்பவிக்குமே" என்றார். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. உடல் வியர்த்தது. என் கணவரோ கொல்லென்று நகைத்து, "ஐயோ! சோசியரே! இப்படிப்பாரும்! இதோ நானும் இருக்கிறேன். அவளும் இருக்கிறள். குழந்தைகளும் இருக்கின்றன. நாங்கள் அன்யோன்ய தம்பதிகள். உங்கள் சோசியம் சுத்ததவறு. வெறும் பொய்..." என்று கூறினர்.

சோசியர் புள்ளிவிவரக் கணக்குகள் போட்டுப் பார்த்தார் பிறகு எங்களைப்பார்த்து, "ஜாதகங்களில் கிஞ்சித்தும் பிசகு இல்லை. நீங்கள் நான் கேட்கிற கேள்விக்கு கோபப்படாமல், வருத்தப்படாமல் நிதானமாக நன்றாக யோசித்து பதில் சொல்ல வேண்டும். 'வைதவ்யம்' இந்த ஸ்திரீக்கு நடந்திருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் இந்தத் தொழிலை நான் விட்டு விடுகிறேன் சத்தியம்" என்றார்.

அப்போதுதான் குருவாயூர் சம்பவம் எனக்கு பளீரென்று நினைவுக்கு வந்தது. விவாகமான புதிதில் பிரார்த்தனைக்கென்று குருவாயூருக்கு கிருஷ்ணனைத் தொழ நானும், என் கணவரும் போனோம். ஒரு விடுதியில் இரவில் தங்கினோம். விடியற்காலை எழுந்திருந்த போது காதிலிட்டிருந்த தோடு, மூக்கு பேசரி, முத்து மூக்குத்தி, கழுத்து செயின், தாலி உள்பட களவு போனது தெரிந்தது. போலீஸில் வழக்கைக் கூறி எழுதி வைத்துவிட்டு, திருச்சூருக்கு பஸ்ஸில் வந்து, நகைக்கடையிலிருந்து ஒரு தாலியை வாங்கிவந்து ஹோட்டல் ரூமிலேயே மறுபடியும் மாங்கல்யதாரணம் செய்தார்.

சுமார் 12 மணி நேரம் நான் தாலியை இழந்திருந்தது என்றுமே என் வாழ்க்கையில் மறக்க முடியாததாகும்.

டி. எஸ். பங்கஜவல்லி,
திருவடமருதூர்.

சைகிள் காவடி

1949-ல் ஓர் நாள். நான் மாணவனாக இருந்த சமயம். தற்செயலாகக் காரைக்குடி சென்றிருந்தேன். குன்றக்குடியில் அன்று என்னவோ ஒரு விசேஷம் என்று கேள்விப்பட்டு, சைகிள் எடுத்துக் கொண்டு குன்றக்குடி சென்றேன்.

இரண்டுமைல் சென்றிருப்பேன். கொஞ்சம் தொலைவில் இரண்டு பையன்கள் நடந்து கொண்டிருந்தனர்.

''யாராவது ஒருவர் சைகிளில் வருகிறீர்களா தம்பி?'' என்று கேட்டேன். அந்தப் பையன்களில் ஒருவன் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டான்.

சைகிளில் 'கேரியர்' இல்லை எனவே, முன் பக்கமாக 'பாரி'ல் அவனை உட்கார வைத்தேன். சைகிள் நகர்ந்தது. ஒரு பர்லாங் சென்றிருப்பேன். 'கரகர' வென்று என்னவோ ஒரு ஒலி. அது என்ன வென்று அறியு முன்பே, சைகிளோடு பையனும், பையனோடு நானும் கீழே விழுந்தோம்.

முன்னால் உட்கார்ந்திருந்த பையன் தவறிப்போய், காலை சக்கரத்துள் விட்டு விட்டிருக்கிறான்! பையனுக்குக் காயம். சைகிளிலும் ஆறு கம்பிகள் ஒடிந்து விட்டன.

குன்றக்குடிக்குச்செல்வதானாலும் காரைக்குடிக்குத் திரும்புவதானாலும் சைகிளை என்னவோ சுமந்தே ஆக வேண்டும்! காரைக்குடி திரும்புவதை விடக் குன்றக் குடிக்கே சுமந்து விட்டால் என்ன?

அவ்வளவு நேரமும் என்னைச் சுமந்த சைகிளை, அப்போது நான் சுமந்தேன்.

குன்றக்குடிக்கு யார் யாரோ என்னென்னவோ காவடி எடுப்பார்கள். யாரும் சைகிள் காவடி மட்டும் எடுத்திருக்க மாட்டார்கள். அந்தப்பாக்கியம் எனக்குக்கிடைத்தது!

மு. சின்னையா,
மல்லாங்கிணர்.

கடமையும் கண்ணீரும்

இரண்டாண்டுக்கு முன்ஓர் நாள். ஏதோ தொல்லை காரணமாக வேலையை ராஜினமா செய்து விட்டேன். கையிலோ கொஞ்சம்தான் பணம் இருந்தது. வேறு வேலை தேடித் தேடி அலைந்தேன். கையில் இருந்து வந்த பணமும் செலவழிந்து, மேலும் கடன் அதிகரித்து விட்டது. வேலை கிடைக்கவில்லை. இந்த நிலையில் என் மாஜி அலுவலகத்தில் என்னுடன் வேலை செய்து வந்த என் நண்பர் என்னைப் பார்க்க வந்து, என் நிலையை தானே தெரிந்து கொண்டு, என்னையும் தன்னுடன் விட்டிற்கு அழைத்து வந்து ''நீ வேலை கிடைத்து, வேலைக்கு போகும் வரையில் இங்கேயே சாப்பிட்டுக் கொண்டிரு'' என்று கூறி அன்றிரவே என்னை தன் வீட்டில் சாப்பிட வைத்து விட்டார். அவர்கள் (நண்பரும், அவர் மனைவியும்) வீட்டிலோ அவர்கள் வாழ்க்கை நடத்துவதே மிகவும் கஷ்டம். அப்படியிருக்கும் பொழுதும் எனக்கு கூடுமான வரையில் குறைவு வைக்கவில்லை. இந்த நிலையில் ஆறு மாதங்களுக்கு பிறகு ஒரு ஆபீஸில் வேலைகிடைத்து விட்டது. நானும் வேலையில் சேர்ந்து விட்டேன். ஒரு மாதம் முடிந்தது. சம்பளம் முழுவதும் வாங்கினேன். அந்த பணத்தில் காலணு கூட செலவு செய்யாமல் விட்டிற்கு கொண்டு வந்து என் நண்பர் கையில் பெருமையுடன் கொடுத்தேன். அவர் கையில் பணத்தை வைத்துக்கொண்டு பேச முடியாமல் பிரமை பிடித்தது மாதிரி நின்று கொண்டிருந்தார். கண்களிலிருந்து அருவியென கண்ணீர் கொட்டிற்று. அதைக்கண்டவுடன் என்னுலும் பேச முடியவில்லை.

கெ. சுந்தரம்,
சென்னை - 14.

புல்லாங்குழல் வாசிப்பதை கேட்க இனிமையாகவே இருக்கிறது. ஆனால் அதை தயாரிப்பது எளிதல்ல.

புல்லாங்குழல்

நா. பார்த்தசாரதி

இக்காலத்தில் 'புல்லாங்குழல்' எனவழங்கும் இசைக் கருவியைப் பழந்தமிழர் 'வங்கியம்'—என்ற பெயராற் கூறிவந்தனர். இந்த புல்லாங்குழல் பற்றிய விவரங்களைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். மாதவியின் 'நடன அரங்கேற்றுகாதை' என்னும் பகுதியில் இளங்கோவடிகள் இசைக் கருவிகளையும் இசையாசிரியர்களையும் பற்றித் தெளிவாகக் கூறியுள்ளார். இசைக் கருவிகளைப்பற்றி இக்கால்த்தில் தெரிந்து கொள்ள முடியாத பல அரிய செய்திகளை இப்பகுதியால் நன்கு அறிந்து கொள்ளவும் ஆராய்ச்சி செய்யவும் வசதியாக இருக்கிறது.

புல்லாங்குழலை நான்கு மரங்களாலும் ஓர் உலோகத்தாலும் செய்யலாம். மூங்கில், சந்தனம், செங்காலி, கருங்காலி, என்ற நான்கு மரங்களாலும் வெண்கலம், என்ற ஒரு உலோகத்தாலும் செய்ய முடியும்.

''ஓங்கிய மூங்கில் உயர்சந்து
—வெண்கலமே
பாங்குறு செங்காலி கருங்காலி
—பூங்குழலாய்
கண்ணன் உவந்த கழைக்
கிவைக ளாமென்றார்
பண்ணமைந்த நூல்வல்லோர்
—பார்த்து''

[சந்து-சந்தனம்,கழை-புல்லாங்குழல்]

என்று முன்னோர் வரையறை செய்திருக்கின்றனர். இந்த ஐந்து மூலப்பொருள்களிலும் தராதரம் உண்டு.

''மூங்கிலாற் செய்வது உத்தமம். வெண்கலம் மத்திமம். மற்றவைகளாற் செய்வது அதமம்'' என்று சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் கூறுகிறார். மூங்கிலாற் செய்த புல்லாங்குழல் அதிகப் பொழுது நிறுத்தி வாசிப்பதற்கு ஏற்றது. வெண்கலப் புல்லாங்குழலோ மூங்கிலைப் போல காற்று நுழைந்து வெளியேறும் மென்மை இல்லாதது. வலிமை வாய்ந்தது. மற்ற மரங்களாற் செய்யப்படுபவை மென்மைக்கும் வன்மைக்கும் இடைப்பட்டனவாய் ஒத்து நிற்கும்.

மூங்கிலாற் செய்யும் குழல்தான் உத்தமம் என்று அடியார்க்கு நல்லார் கூறினுலும், அவர் காலத்திலேயே, ''சந்தனம், செங்காலி. கருங்காலி'' என்ற இம்மூன்று மரங்களையுமே இசையாசிரியர்கள் பயன்படுத்தினர் என்பதையும் அவரே பின்பு கூறுகிருர். இம்மூன்றிலும் கூடக் கருங்காலியில்தான் பெருவாரியான புல்லாங்குழலைச் செய்தார்களாம்.

மேற்கூறிய மரங்களில் உயர்ந்த சமநிலத்தில் பெரிதாக வளர்ந்த மரமாக இருக்கவேண்டும், நான்கு திசைக் காற்றும் வீச ஆடி அலைக் கழிக்கப்பட்ட மரத்தில் புல்லாங் குழல் செய்தால், நல்ல நாதம் உண்டாகாது. அதனுல் அத்தகைய மரங்களை விலக்குதல் வேண்டும். மிக இளைய மரத்தையோ, மிக முதிய மரத்தையோ வெட்டாமல் நடுத்தரத்தினதாக ஒரு மனித ஆயுளின் சராசரி வயதளவு ஆகிய மரத்தையே புல்லாங்குழலுக்காக வெட்ட வேண்டும்.

வெட்டிய பிறகு கம்பீரமாக வளர்ந்த ஒரு ஆடவனின் தோற்றத்தின் அளவுள்ள மொத்தக் கட்டையாகத் தரித்து, ஓர் ஆண்டுக் காலம் தூய நிழலில் இட்டு ஆற வைக்க வேண்டும்.

ஓர் ஆண்டுக் காலம் கழித்து பின் அந்த மரத்தைப் பிளந்து குழலுக்கேற்ற வடிவங்கள் செய்து இலட்சணம் பிறழாமல் துளைகளைத் திருகி, இலக்கண வகையால் புல்லாங்குழலாக உருவாக்க வேண்டும்.

புல்லாங்குழல் இருபது விரற் கடை நீளமும், நாலரை விரற் கடைச் சுற்றளவும் உள்ளதாக அமைய வேண்டும். புல்லாங்குழலுக்குத் துளை இடுகின்ற போது ஒரு முழு நெல்லைப் பாதியளவு துண்டு செய்து, மரத்தின் மேல் நிறுத்திக் கொண்டு அந்த அளவிற்கு ஏற்பத் துளை கடைந்து, கடைந்த துளையில் வெண்கலப் பொடியினுல் பற்ருசு வைத்து (கொறு வாய்களைச் சரி செய்து) துளையின் இடது பக்கத் துவாரத்தை அடைத்து, வலது பக்கத்தை மட்டும் திறந்து வெளியாக விடவேண்டும்.

இருபது விரற்கடை நீளமுள்ள புல்லாங்குழலில் முதல் நுனியிலும் இறுதி நுனியிலும் இரண்டு இரண்டு விரற்கடைகள் விட்டு விடவேண்டும். ஏற்கெனவே விட்ட இரண்டு விரற்கடை போக முதல் நுனியில் இன்னும் ஓர் ஏழு விரற்கடை விட்டுவிட்டால் நடுவில் மொத்தம் ஒன்பது விரற்கடை அளவு நீளம் மட்டுமே மீதமிருக்கும். இந்த ஒன்பது விரற்கடை நீளத்தில் எட்டுத் துளைகளை இட்டு விடவேண்டும்.

இவ்வெட்டுத் துளைகளில் முதல் துளையை விரல் வைத்து ஊதாமல் 'முத்திரை' என்ற பெயரால் ஒதுக்கி வெறுமனே விட்டுவிட வேண்டும். ஒவ்வொரு துளைக்கும் நடுவிலே ஒரு விரற்கடை இடை வெளித் தூரம் இருக்க வேண்டும். இறுதித் துளையை முத்திரை யென்று நீக்கி விட்டாலும் பொருந்தும்.

முத்திரை போக எஞ்சியுள்ள ஏழு துளைகளிலும் ச. ரி, க, ம, ப, த, நி என்ற ஏழிசையும் பிறக்கும். புல்லாங்குழல் ஊதும்போது இடது கையிலுள்ள கட்டை விரலையும் சுண்டு விரலையும் வலக் கையிலுள்ள கட்டை விரலையும் தவிர்த்து மற்ற ஏழு விரல்களாலேயே ஊத வேண்டும் என்பது முறை.

'சரிகமபதநி' என்ற ஏழிசையும் அவற்றினுல் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னும் பயனும் முறையே புல்லாங்குழலில் தோன்றி நுகர்வோர்க்குப் பேரின்பத்தைப் பயக்கும்.

இக்காலத்தில் புல்லாங்குழல் எப்படிச் செய்கிருர்களோ? எப்படி வாசிக்கிருர்களோ? முற்காலத்தில் செய்த முறை, வாசித்த முறையே மேற்கண்ட கட்டுரை. ★

பப்பாளியை பயன்படுத்துங்கள்

பி. ஜி. கிரிஜா

நோயற்று வாழ்வதற்கு தினசரி உணவுத் திட்டத்தில் பழங்களுக்கு முக்கிய இடம் கொடுக்குமாறு டாக்டர்கள் கூறுகின்றனர். பழங்களில் வைட்டமின்கள் [உயிர் சத்துக்கள்] இருக்கின்றன என்றும், அவற்றிலுள்ள வைட்டமின் 'சி' நோயற்ற வாழ்விற்கு மிகவும் அவசியமென்றும் குறிப்பிடுகிறார்கள். வைட்டமின் 'சி' கொடுக்ககூடிய பழங்களில் 'ஆரஞ்சு' மட்டும் அபரிமிதமாக உபயோகித்து வருகிறோம். வைட்டமின் 'சி' அதிகமாக இருப்பதும், வருடம் முழுவதும், குறைந்த விலையில் கிடைக்கக் கூடியதும் பப்பாளிப் பழம் தான்? இதில் வைட்டமின் 'சி'யுடன் 'ஏ'யும் இருப்பதாக இப்பொழுது கண்டு பிடித்திருக்கிறார்கள்.

சத்துப்பொருள்கள்

பப்பாளிப் பழத்திலுள்ள அரிய சத்துப்பொருள்கள்:

தண்ணீர்	89·60	சதவீதம்
புரோடீன்	0·55	,,
கொழுப்பு	0·12	,,
தாதுப்பொருள்	0·45	,,
நார்	1·10	,,
சர்க்கரைப் பொருள்	9·60	,,
கால்சியம்	0·01	,,
பாஸ்பரஸ்	0·01	,,

பப்பாளிப் பழம் வளருகிற குழந்தைகளுக்கு அவசியம் தேவை இனிமேலாவது பப்பாளிப் பழத்தை குழந்தைகளுக்கு வேண்டிய மட்டும் கொடுங்கள். சாப்பிடுவதற்கு தேவாமிர்தம் போல இருப்பதுமின்றி ஜீரண சக்தியையும் அது தருகிறது.

பப்பாளியைக் கொண்டு 'பாக்' செய்யலாம். பப்பாளிக் காயை கறியாக சமைத்து சாப்பிடலாம். பப்பாளி வற்றல்... பப்பாளி சட்னி பப்பாளிரசம்...... ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான ருசியாக இருக்கும். இங்கே அவற்றை செய்யும் முறைகளைத் தருகிறேன். செய்து பாருங்கள், ஆரோக்யம் பெறுங்கள்.

பப்பாளி பாக்

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிச் சாப்பிடும் பட்சண வகைகளில் இந்த 'பப்பாளி பாக்'கும் ஒன்று. இது செய்வதற்கு பப்பாளிக்காய் ஒன்று. சர்க்கரை பத்து பலம், சாரைப் பருப்பு, பாதம் பருப்பு, பிஸ்தா, முந்திரி பருப்பு வகைக்கு ஒவ்வொரு பலம். நெய் இரண்டரைப் பலம். ஏலப்பொடி குங்குமப்பூ கொஞ்சம் போதுமானது.

பப்பாளிக்காயை கொப்பரைத் துருவியில் துருவி வைத்துக் கொள்ளவும். அதை கொதிக்கும் ஜலத்தில் போட்டு இரண்டு கொதி வந்ததும், இறக்கி வடி கட்டிக் கொள்ள வேண்டும். அடுப்பில் சர்க்கரையைப் பாகு செய்து அது கம்பிப் பதத்திலிருக்கும் பொழுது பப்பாளித் துருவலை நன்ருகப்பலங் கொண்ட மட்டும் பிழிந்து பாகுடன் சேர்த்துக் கிளற வேண்டும். இறுகி வருகிற போது நெய் விட்டுக்கிளற வேண்டும். நன்ருக சுருண்டு வரும். அப்போது ஏலப் பொடி, குங்குமப்பூ கலக்க வேண்டும். நெய் தடவிய தட்டின் மேல் மைசூர் பாகு கொட்டுவது போல கொட்டி பிஸ்தா, முந்திரி, பாதம், சாரைப்பருப்புவகைகளை மெல்லியதாக பொடிப் பொடியாகச் சீவி பப்பாளி பாக் மீது தூவ வேண்டும் பத்து நிமிடம் கழித்ததும், சூடு கொஞ்சம் ஆறும். உடனே விருப்பப்படி பில்லைகள் போடலாம். ஒரு மாதம் வைத்துக் கொண்டாலும் கெட்டுப் போகாது. வட இந்தியாவில் இதில் வாசனைக்காக

ரோஸ், வானிலா, பாதம் முதலிய எசென்சுகளைச் சேர்க்கிறார்கள்.

பப்பாளிச் சட்னி

'பப்பாளிச் சட்னி' செய்து ஒரு முறை உபயோகித்தவர்கள் பிறகு இதை விடவே மாட்டார்கள். தினசரி சாப்பாட்டில் அது நிரந்தர இடம் பெறும். செய்வதும் சுலபமே.

பப்பாளிக்காய் ஒன்று, மிளகாய் வற்றல் சுமார் 12, உளுத்தம் பருப்பு அரைக்கால்படி. புளி ஒன்றரை பலம், உப்பும், பெருங்காயமும் தேவை.

பப்பாளிக் காயை பொடிப் பொடியாக நன்றாக நறுக்கி வேக வைத்துக் கொள்ள வேண்டும் சூடு ஆறினதும் நன்றாகப் பிழிந்து வைத்துக் கொள்ளவும். மிளகாய் வற்றல், பெருங்காயம், உளுத்தம் பருப்பு, முதலியவைகளை வறுத்து, உப்பு, புளி, வேக வைத்த பப்பாளித் துண்டுகளையும் சேர்த்து கல்லுரலில் சட்னியாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். மணமிகு இந்த சட்னி ருசியில் மற்ற சட்னிகளை விட முதலிடமே பெறும்! பிழிந்த ஜலத்தை ரசத்தில் விட்டு விடுங்கள்! பாருங்கள் அந்த ரசத்தின் நறுமணத்தை. 'கம கம' வென்று இருக்கும் சாப்பிடுவதற்கு மிகவும் உற்சாகமாக இருக்கும்.

பப்பாளி வற்றல்

வருடம் முழுவதற்கும் பப்பாளியை வற்றலாகச் செய்து பயன் படுத்துக் கொள்ளலாம். பப்பாளிக் காயைக் கொத்த வரங்காய் நீளத்திற்கு மிக மெல்லியதாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். ஒரு பெரிய பாத்திரத்தில் காய்த் துண்டுகள் வேக வேண்டிய அளவு தண்ணீர் விட்டு நன்றாகக் கொதி வந்தவுடனே உப்பு, மஞ்சள்பொடி போட்டு நறுக்கி வைத்திருக்கும் பப்பாளித் துண்டுகளைப் போட்டு விட வேண்டும். இரண்டு கொதி வந்ததும் இறக்கி மூடி வைக்கவும் கால்மணி நேரத்திற் கெல்லாம் வடிக்கட்டி உலர்த்திவிடவேண்டும் இரண்டு மணி நேரத்திலே வற்றலாகக் காய்ந்து விடும். நன்றாகக் காய்ந்ததும் டப்பாவிலே பத்திரப் படுத்தி வைத்துக் கொண்டு தேவையான போது எண்ணெயிலே பொரித்துச் சாப்பிடவேண்டியது.

வற்றலில் காரம் வேண்டும் என்ற பிரியமுள்ளவர்கள் உப்புப் போடும் போது கொஞ்சம் பச்சை மிளகாயை அரைத்துப் போடலாம்!

மருத்துவப் பயன்கள்

பப்பாளி பிஞ்சுக் காயை கீறினால் பால் வடியும். இந்தப் பாலுடன் சிறிது படிகாரம் சேர்த்துக் கரப்பானுக்கு போட, ஆச்சரியப் படும்படி குணமாகும்.

பப்பாளிப் பாலை நாக்குப் புண், தொண்டைப் புண் முதலிய வற்றுக்கு தடவ உடனே குணமாகும்.

பப்பாளிப் பாலுடன் வெங்காரமும், நீரும், சேர்த்துக் குழப்பி மைக்குரு, வேர்க்குரு, முதலிய சருமத்தில் தோன்றும் புண்களுக்குத் தடவ, அவை மாயமாய் மறைந்து விடும்.

பப்பாளிப்பால் ஒரு தேக்கரண்டி, சுத்தமான தேன் ஒரு கரண்டி, வெந்நீர் இரண்டு அவுன்சு இவைகளை ஒன்றாய்க் கலந்து நன்றாய் குளிர்ந்தவுடன் பருகி, இரண்டு மணி நேரம் கழிந்து ஆமணக் கெண்ணெய், பப்பாளிப் பழரசம் இரண்டு அவுன்சு கலந்து சாப்பிட வயிற்றிலுள்ள கிருமிகள் மடிந்து விடும். மூன்று வயது முதல் ஏழு வயதுக் குழந்தைக்கு ஒரு சிறு கரண்டி போதுமானது. மிகவும் சுலபமாக கிருமிகள்யாவும்மடிந்து விடும்.

நரம்புத் தளர்ச்சி, நரம்பு வலி முதலியவைகளுக்கு பப்பாளி இலையை வெந்நீரில் போட்டெடுத்து ஒற்றடமிட உடனே குணமாகும். வீக்கமுள்ள இடத்தில் இலையை நெருப்பில் வாட்டி வைத்து கட்ட உடனே வீக்கம் வடிந்து சுகமாகும். ★

திருக்குற்ருலம்

தமிழ்நாட்டில் இயற்கை அன்னையின் பூரணப் பொலிவு பெற்றுள்ள இடங்கள் பல உண்டு. அவைகளில் ஒன்று திருக்குற்ருலம். மிகவும் சிலாக்யமான சுக வாசஸ்தலங்களில் இது முக்யமானது. இதுபற்றிய கட்டுரையையும் படங்களையும் அடுத்துவரும் பக்கங்களில் காணலாம்.



திருக்குற்றாலம்

கு. இராமச்சந்திரன்

உயரமான மலையிலிருந்து அழகிய பாறைகளுக்கிடையில் 'சோ'வென்று விழும் அருவி. அருவியை அடுத்து அழகாக அமைந்திருக்கும் ஆலயம். அதை அடுத்து இயற்கை யெழிலோடு அமைந்த சிற்றூர். இவ்வூர்தான் திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசியை அடுத்திருக்கும் திருக்குற்றாலம்.

தென்மேற்குப் பருவமழை பெய்யும் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் இங்கு எப்பொழுதும் குளிர்ந்த காற்றும் இலேசான சாரலும் அடித்துக்கொண்டேயிருக்கும். அருவிகளிலும் அந்தக் காலங்களில் அதிகமாகத் தண்ணீர் வரும்: அருவியின் நீர் மலையின் உச்சியிலிருந்து காடுகளின் வழியாக பல மூலிகைகளின் மேல் பட்டு வருவதால் இதற்கு பல மூலிகைகளின் குணம் இருப்பதாகக் கருதப்படுகிறது. பருவமழை ஆரம்பித்தவுடன் உடலுக்குப் புத்துணர்ச்சியை அளிக்கக் கூடிய இந்த அருவியில் நீராடி சிறிது காலத்தை இனிமையாகக் கழிக்க விரும்பும் மக்கள் நம் நாட்டில் பல இடங்களிலிருந்தும் இங்கு வருவார்கள். ஆடி அமாவாசையன்று அருவியில் புனித நீராடி ஆலயத்தில் குற்றாலநாதரையும் குழல்வாய் மொழியம்மையையும் தரிசித்துப் போக அக்கம் பக்கத்திலிருந்து இங்கு வந்து கூடும் மக்கள் எண்ணிக்கையும் மிக அதிகமாகும்.

பல நீர்வீழ்ச்சிகள்

திருக்குற்றாலத்தின் தனிச் சிறப்பிற்கு முக்கிய காரணமாயிருப்பன இங்கு விழும் அருவிகளே. மலை அடிவாரத்தில் கோவிலை அடுத்து "பெரிய அருவி" இருக்கிறது. இந்த அருவி விழும் இடத்தின் அழகிய அமைப்பும், இதில் ஆண்களும் பெண்களும் தனித்தனியே குளிப்பதற்காகச் செய்யப்பட்டுள்ள வசதியும் மற்றைய அருவிகளைவிட இங்கு தண்ணீர் அதிகமாக விழுவதாலும் எந்நேரமும் இங்கு ஆட்கள் கூட்டம் கூட்டமாகக் குளித்துக்கொண்டே இருப்பார்கள். இதிலிருந்து சுமார் 3 மைல் தூரத்தில் "ஐந்தருவி" இருக்கிறது. நான்கு பகுதிக



செண்பகாதேவி அருவியின் ஒரு தோற்றம்.

★

புலியருவியில் மக்கள் ஸ்நானம் செய்கின்றனர்.



ளாகப் பிரிந்து, தண்ணீர் மிகுந்த வேகத்துடன் விழும் இந்த அருவி பெரிய அருவிக்கு அடுத்த முக்கியத்துவம் வாய்ந்தது. பெரும்பாலும் கார் வண்டிகளில் சென்று மக்கள் இங்கு நீராடுவார்கள்.

மலையின் மற்றொரு பகுதியிலிருக்கும் 'புலி அருவி'யில் தண்ணீர் விழும் கிடங்கும் நீரோடைகளும் மிகவும் அழகாக கட்டப்பட்டுள்ளன. இந்த அருவியின் அருகாமையிலேயே ஒரு சிறிய அழகிய ஆலயம் நல்ல சிற்ப வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளது. இந்த அழகிய அமைப்புகள் எல்லாம் சேர்ந்து இந்த இடத்தை வெறும் குளிக்கும் இடமாக மட்டும் இல்லாது, உல்லாஸமாகப் பொழுது போக்குமிடமாகவும் ஆக்கிவிட்டன.

மூல அருவி

இந்த அருவிகளுக்கெல்லாம் மூல காரணமாயிருக்கும் ''தேனருவி'' மலையின் உச்சியில் வெகு உயரத்தில் இருக்கிறது. இந்த அருவியிலிருந்துதான் எல்லா அருவிகளுக்கும் தண்ணீர் வருகிறது. அடர்த்தியாக நெருங்கி வளர்ந்திருக்கும் காடுகள் புதர்கள் தோப்புகளின் வழியாகச் செல்லும் சிறிய ஒற்றையடிப் பாதையின் வழியாக தேனருவியின் தெள்ளிய நீர் ஓடிவரும் வாய்க்கால்களைப் பல இடங்களில் கடந்து மலை

யின்மேல் ஏறிச்செல்வதே தனி ஆனந்தமாயிருக்கும். மலையின் மேல் கொஞ்ச தூரம் ஏறிய உடனேயே ஒரு சிறிய அருவியின் இனிய ஓசை காதில் விழும். இந்த அருவிக்கு ''சிற்றருவி'' யென்றே பெயர். இங்கிருந்து கொஞ்ச தூரம் மேலே ஏறிச் சென்றால் ''செண்பகா தேவி'' என்ற மற்றொரு அருவியைக் காண்போம். சுமார் 25-30 அடி உயரத்திலிருந்து இதில் தண்ணீர் விழுகிறது. தண்ணீர் விழும் இடத்தில் ஒரு குளம் இருக்கிறது. இங்கு செல்பவர்கள் பெரும்பாலும் இக்குளத்திலேயே குளிப்பார்கள். இந்த அருவியின் அருகில் ஒரு கோவிலும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த இடம் வரை மக்கள் கொஞ்சம் சுலபமாய் வந்து போவார்கள்.

இந்த அருவியைக் கடந்து அதிக தூரம் மலையின்மீது ஏறிச் சென்றால்தான் ''தேனருவி'யைக் காண முடியும். மலையின் உச்சியில் அருவியின் தண்ணீர் விழும் இடத்திற்கு அருகாமையில் கட்டப்பட்டுள்ள தேன் கூடுகளை வைத்தே இதற்குத் ''தேனருவி'' யெனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இந்த





தேனருவி

★

புலியருவியின்
ஒரு தோற்றம்.

இடத்திற்குச் செல்லும் பாதை சரியாக இராது. பல இடங்களில் ஆபத்தான குறுகிய பாதையாகவும் இருக்கும். வழியில் காடுகளும் புதர்களும் மிகவும் நெருக்கமாக இருக்கும். இவற்றின் வழியே மலையின் மேலேறி இந்த அருவியைக் காணச் செல்வது மிகவும் கடினமானாலும்கூட சில சமயங்களில் இதைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மிகுந்த பெண்கள் கூட சிரமத்தைப் பொருட்படுத்தாது மலைமீதேறி இங்கு வந்து விடுகிறார்கள். திருக்குற்றால நகரமைப்புக் கமிட்டியார் இந்த அருவிக்குச் செல்லும் பாதையை ஆபத்தின்றி செல்லும் வகையில் சீராகச் செப்பனிட்டு வைத்தால் இன்னும் அதிகமான மக்கள் இங்கு செல்லுவது சாத்தியமாகும்.

மிக ஒடுக்கமாகவும் செங்குத்தாகவும் உயர்ந்து நிற்கும் இரண்டு பாறைகளுக்கிடையிலிருந்து பேரிரைச்சலோடு இந்த அருவி விழுகிறது. இங்கு தண்ணீர் விழும் இடத்தின் அருகில் செல்வதுகூட ஆபத்தானது. இங்கு



செண்பகாதேவி அருவியின் மற்றொரு தோற்றம்.

★



புலியருவிக்கருகிலுள்ள கோயில்.

ஐந்தருவி

★

பெரிய நீர்வீழ்ச்சியின் சமீப தோற்றம்.



விழும் தண்ணிர் மிகவும் தெளிவாகப் பாறைகளுக்கிடையில் சலசலவென்று ஓடிக்கொண்டிருக்கும். இதில்தான் எல்லோரும் நீராடுவார்கள்.



உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணர்ச்சியை அளிக்கும் அருவிகளைத் தவிர குற்றாலநாதரும் குழல் வாய்மொழி அம்மையும் கோவில் கொண்டுள்ள ஆலயமும் மாலையிலே மக்கள் ஆனந்தமாகப் பொழுது போக்க அமைக்கப்பட்டுள்ள அழகிய தோட்டமும் குறைந்த செலவிலேயே இங்கு தங்குவதற்குள்ள வசதிகளும் திருக்குற்றாலத்தின் மகிமையை இன்னும் அதிகப்படுத்துகின்றன.

இவ்வளவு பெருமையுள்ள இடத்தை இன்னும் அதிக வசதியுள்ளதாக செய்து சிறந்த சுகவாசஸ்தலமாகச் செய்ய சர்க்கார் சிரத்தை காட்ட வேண்டும்.



சித்ரசபை

திருக்குற்றாலத்திலுள்ள சித்ர சபையை கலை பொக்கிஷம் என்றே கூறலாம். நடராஜர் நடனமாடிய இடங்களில் முக்யமானது ஐந்து இடங்கள். திருவாலங்காட்டில் இருப்பது ரத்னசபை என்றும், சிதம்பரத்தில் கனகசபை என்றும், திருநெல்வேலியில் தாமிரசபை என்றும், மதுரையில் வெள்ளியம்பலம் என்றும் திருக்குற்றாலத்திலுள்ளதை சித்ரசபை என்றும் அழைக்கிறார்கள். நடராஜ நடன சித்ரங்கள் இங்கு மிக அழகாக வரையப்பட்டிருக்கிறது திரிபுர தாண்டவத்தை நடராஜர் இங்குதான் ஆடியதாகக் கூறப்படுகிறது.

இக்கோவிலின் மண்டபத்திலுள்ள சித்ரங்களை வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்கலாம் இங்குள்ள நடராஜ விக்ரகம் என்னமோ சிறியதுதான். ஆனால் சித்ரங்களின் காரணமாகவே இதற்கு சித்ரசபை எனப் பெயர் வழங்கலாயிற்று.

கற்புக்கரசிகள்

ஏ. சிவசுந்தரம்

பத்தினிப் பெண்டிரின் சிறப்பிற்கு முக்யத்துவம் வாய்ந்தது நம் பழம் பெரும் பாரத நாடு. சிந்தைக்கும், செவிக்குமினிய அரும் பெருங் காவியங்களிலிருந்தும், பழம் பெரும் நூல்களின் வாயிலாகவும் கற்புக்கரசிகளின் அருமை, பெருமைகளை நாம் அறிதல் கூடும்.

அம்மி மிதித்து, அருந்ததிகண்டு, வேதச்சுடர்த்தீ முன் சூளுரைத்து மாங்கல்யதாரணம் செய்விக்கும் முறை நம் பாரத நாட்டின் பண்பாடாகும். அதனுல் தலைவனும், தலைவியும் இறைவன் முன் மட்டுமல்லாது, தேவாதி தேவர்கள் முன்னிலையிலும் ''சதிபதிகளானேம்'' என்பதற்குச் சாட்சியாக விளங்கி வருவதாகக் கருதுகின்றனர்.

நம் முன்னேர்கள் அம்மி மிதித்து அருந்ததி கண்டு திருமணம் செய்யும் முறையையே சாலச் சிறந்த தார்மீக முறை எனக்கருதுகின்றனர். கருதுவது மட்டுமல்ல—அவ்வாறு மணமுடித்த மாண் புடைப் பெண்டிரை எல்லாம் ''கற்புக்கரசிகள்'' எனவும் போற்றுகின்றனர். அவ்வாறு போற்றுதற்குரிய புனிதவதிகளில் சிலரை இங்கு காணலாம்.

''முக்கணர்தண்டலை நாட்டில் கற்புடை
மங்கையர் பெருமை மொழியப் போமோ?
ஒக்குமெரி குளிரவைத்தா ளொருத்தி; வில்
வேடனை யெரித்தாளொருத்தி; மூவர்
பக்கமுற வமுதளித்தா ளொருத்தி; எழு
பரி தடுத்தா ளொருத்தி; பண்டு
கொக்கெனவே நினைந்தனை யோகொங்
கணவா' வென்றெருத்தி கூறினளே''.

ஜூபிடர் பிக்சர்ஸார் தயாரித்து வரும் ''கற்புக்கரசி'' என்ற கதையின் ஆசிரியரான இக்கட்டுரையாளர் காயத்திரி புரொடக்ஷன்ஸ் பாகஸ்தரும் கூட.

இப் பழமொழி விளக்கமெனும் தண்டலையார் சதக நூலிலுள்ள பாடலைப்பாடி அருளியவர் படிக்காசுப்புலவராவர். கருத்துச் செறிவு நிறைந்த இப்பாடலில் ஐம்பெருங் கற்பரசிகளின் மாண்பு விளங்கி இருப்பதைக் காண்கிறேம். வீரஞ் செறிந்த அறப் பெண்டிர் ஐவரின் பெருமையை ஆராயுமிடத்து சிறந்த பண்பும், நிறைந்த அன்பும் சீரிய ஒழுக்கமும் பொதிந்து கிடக்கும் என்பதை உணரலாம்.

சந்திரமதி

''ஒக்குமெரி குளிர வைத்தாள் ஒருத்தி'' என்று குறிப்பிடப்படும் உத்தமியாகிய வித்தகி சத்திய நெறி தவரு அரிச்சந்திரனது அரிய சதி சந்திரமதியாவாள்.

பதிவிரதா சிரோன்மணி, பதி சொல் தவரு சந்திரமதி நாடு இழந்த தன் கணவனுடன் நலம் எல்லாம் இழந்து, காடு நோக்கி கடிது சென்று, துக்கங்களில் பங்கு கொள்கிருள். அரிச்சந்திரனது சத்தியநெறியைச் சோதிக்க முனைந்த விசுவாமித்திர முனிவர் தன் தபோபலத்திஞல் காட்டும் பாதையின் நடுவே கடுந்தீ உண்டாக்கி ஏவுகிருர். கொழுந்து விட்டெரியும் தீப்பொறி அவர்களையும் அணுகிட, அல்லல் வந்துற்றதே என்று எண்ணிய சந்திரமதி, கெடுதி நேரா வண்ணம் அக்னிப் பிரவாகத்தைத் தன் கற்பின் சக்தியால் நீராக்கி அவித்தாள் என்பதைக் குறிக்கிறது முதல் குறிப்பு.

தமயந்தி

இரண்டாவதாக ‘‘வில் வேடனை எரித்தாள் ஒருத்தி’’ என்று கூறப்படும் வீர உரைக்கு இலக்காக நிற்கும் தலைவி நிடத நாட்டுப் புரவலன் நளச்சக்கரவர்த்தியினது இன்னுயிர்த் தலைவி தமயந்தி. விதி நடத்திய சதியால் மதியிழந்து, மாயச் சூதாடி பணயம் வைத்த நால்வகையங்கம், நாடு நகரங்களை இழந்து, வீணையும், நாதமும் போல எந்நாளும் இல்லற தர்மம் தவறாது இழைந்து ஒன்றுபட்டிருந்த ஒண்தொடி தமயந்தியோடு நாடுவிட்டுக் காடேகி கடுந்துன்பஞ் சகியாத தன் காதலியைக் காண மனமில்லாதவனாய்க் காரிருளில், அவள் கண் உறங்கும் போது கைவிட்டுப் போகிறான் கலி செய்த லீலையினால், கண்ணீர் மல்கியவாறு.

ஆதித்தன் உதித்த பின் தன் அருகில் அன்புக் கணவன் இல்லாமை கண்டு, பிரிவாற்றாமையினால் ஆற்றொணாத் துயரிலாழ்ந்து கிடக்கும் அன்புக் கிழத்தியை அரவு ஒன்று விழுங்க யத்தனிக்கும் பொழுது, அவ்வழிப் போந்த வனசரனொருவன் அப்பேரரவத்தைக் கொன்று மெல்லியாளை விடுவித்துப் பின் காம சிந்தனையால் தூண்டப்பட்டவனாகி செயலும் சொல்லும் மாறுபாடடைந்தவனாகக் காணப்படத் தன் தீச்சுடர் விழிகளால் அவனை நோக்கி அக்கணமே கற்புச் சுடரால் அவனை சாம்பராக்கினாள்.

அனுசூயை

மூன்றாவதாக ‘மூவர் பக்கமுறவமுதளித்தாள் ஒருத்தி எனப் புகழ் பாடப்படும் உத்தம பத்தினி அத்திரி மாமுனிவரின் அருமை மனையாட்டி அனுசூயை என்றும் அறச்செல்வி தன் கற்பின் மகிமையால் சிறந்த சிறப்பினை அடைந்தவளாவாள். திரிலோக சஞ்சாரியும், பிரம்ம புத்திரருமாகிய நாரத முனிவர் மும்மூர்த்திகளின் சதிமார்களிடம் அனுசூயையின் கற்பின் பெருமையை எடுத்துரைக்க தன் பதிமார்களை அனுப்பி அனுசூயையின் மாண்பை சோதிக்குமாறு இரைஞ்சுகின்றனர்.

அவ்வாறே மும்மூர்த்திகளும் ஆண்டி உருக்கொண்டு பக்த சிரோன்மணியாகிய அத்திரி மகரிஷியரின் பர்ணசாலை புகுந்து யாசிக்கின்றனர். பதியே தெய்வமெனப் போற்றும் நிறையுடை மாது பரிவோடு அன்னமிட வருகிறாள். அனுசூயையின் கற்பின் திறனை உலகோர்க்கு உணர்த்தும் நோக்கத்தான் தாங்கள் குறிப்பிட்ட ஓர் காலத்தில்தான் பிச்சை புக வெளியே வருவதென்றும் அவ்வாறு வெளிப்போந்த காலத்து அவர்கள் நாடிடும் இல்லத்துக்கு உடையாள் நிர்வாணமாக வந்து நின்று ஐயமிட்டாலன்றித் தாங்கள் அப்பிச்சையை ஏற்கோம் எனவும் உரைத்து நிற்க, அம்மாது சிரோன்மணி தன் கணவனின் திருநாமத்தை நினைந்துருகி, யாசகம் வேண்டி நின்ற மும்மூர்த்திகளையும் மூன்று மழலைச் செல்வங்களாக மாற்றுகிறாள். குழந்தைகளாகச் சமைக்கப்பட்ட மும்மூர்த்திகளும் ஆடை களைந்து நிர்வாணமாக விருந்து பாலூட்டிய பதிவிரதையிடம் பால் அருந்திட தன் கற்பின் சக்தியால் உலகை இயக்கும் பிதாக்களையே தன் மக்களாக அடையப்பெற்ற பெரும்பேறு பெற்றமைக்கு அவள் உவகை அடைகிறாள்.

நளாயினி

நான்காவதாகக் குறிப்பிடும் ‘‘எழுபரி தடுத்தாள் ஒருத்தி என்று கூறப்படும் பழுதுபடா பத்தினித்தங்கம் நளாயினி என்பாள். இவ்வம்மையார் மௌத்கல்ய முனிபுங்கவரின் இல்லாள். உத்தம பத்தினியின் உன்னதக் கற்பைப் பலப்பல சமயம் சோதித்தும் அவள் முறைதோறும் இறையினருளால் முன்னணியிலிருக்கவே முழு மனதுடன் அவள் மனநிலை ஆராய்வான் பொருட்டு, முனிவர் பெருமான் தன் தபோ வலிமையினால் பார்ப்போர் அருவருப்படையும் கொடிய நோயால் பீடிக்கப்பட்டவர் போலக் காட்சி அளிக்கிறார்.

கைப்பிடித்த கணவனைக் கட்டிப் பிடித்திருக்கும் நோய் மிகப்பயங்கரமானதும், தொத்து நோயாகவும் இருந்த போதிலும் மனம் நோகாமல், சிரத்தை குன்றாமல் கணவனுக்காற்றும் அரும்பணிகளைச் செவ்வனே செய்து இன்புற்றிருப்பாளாயினள், அவ்வில்லக் கிழத்தி.

இவ்வாற்றான் இருந்துவரும் காலை, அவர் வதிந்து வந்த வேதண்டத்தினருகேயுள்ள தண்ணடையின் கண் உரைந்து வரும் ஒண்தொடியாகிய பொருட் பெண்டு ஒருத்தி மேல் காமுற்று, தான் மதிகுன்றி இருப்பதாகவும், எவ்வாறேனும் அக்கணிகையிடம் இன்பம் துய்க்க விரும்பும் தன் பேரவாவை நீக்குவது தன் தலைவியின் தலையாய கடமை எனவும் தன் கருத்துச் சிதற கூறினர், கொடுநோய் கிழவர்.

அருங்குணவதியாகிய நளாயினி தன் அரிய சேவையால் விலைமகளின் மனம் நோவா நடந்து அவள் அன்பிற்கு பாத்திரமடைந்து, அவள் சம்மதம் பெற்று, ஓர் இரவு குட்ட நோயால் முடமாகிய கணவனைக் கூடை ஒன்றிலிட்டுத் தன் தலையில் சுமந்த வண்ணம், இட்ட அடி நோக, எடுத்த அடி கொப்பளிக்க பரத்தையின் வீட்டில் விட்டு வெளியே காத்திருந்து விடி வெள்ளி முளைக்கா முன்பு, முனிவரை முன் போலவே சுமந்து பர்ணசாலைக்குத் திரும்ப எடுத்து வருகிறாள்.

அது போழ்து நெடுவழியில் கழுவேற்றப்பட்டிருந்த யோகர் திருவடிகளில் கூடை தாக்குண்டு அதிர அதனால் வேதனையடைந்த தாபதர் கண் விழித்து கடுஞ்சினங் கொண்டு, ''கூடையை சுமந்தேகும் மங்கை பொழுது புலர்வதற்குள் கணவனை இழந்த கைம் பெண்ணாகக்கடவாள்'' என சபிக்கிறார். கணவனே கண்கண்ட கடவுள் எனக்கருதிய அக்கற்பரசி கடுஞ்சினமுற்று, தான் கைம்மை அடையாதிருக்க வேண்டி, தான் கற்பு நெறிதவறா உத்தமியாயின் பொழுது புலராது போகக்கடவது. என மறுசாபமிடுகிறாள்.

உலகம் இயங்கவோ லோகமக்கள் உய்யவோ வழி இல்லாதிருப்பதைக் கண்ட தேவாதி தேவர்கள் நளாயினியை சுமங்கிலியாக வாழ வாழ்த்தி யருளிய பின்பே பத்தினிப்பெண் பதங்களைப் பாருலகில் பிரவேசிக்குமாறு பணித்தருளினாள்.

வாசுகி

செய்யுளின் இறுதியடிகளில் வரும் ''பண்டு கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா'' என்று விரித்துரைத்த உத்தமி திருவள்ளுவப் பெரியாரின் காதல் மனையாட்டி வாசுகி அம்மையாராவர்.

உண்டி சுருக்கி, ஊனை அடக்கி, கற்ப கோடி காலம் கடுந்தவத்திருந்த கொங்கணர் எனும் தவசியரின் தலையிலே, வானத்திலே வட்டமிட்டுக் கொண்டிருந்த கொக்கொன்று எச்சமிட்டு விடுகிறது. அது கண்ட கொங்கணர் கோபாக்னியோடு அக்கொக்கை விழிக்கவே, அவரது தவத்தின் சக்திக்கு இலக்காகப்பட்ட கொக்கு எரிந்து விழுந்து சாம்பராகிறது.

ஒரு நாள் அவர் பிச்சை ஏற்றுப் போகும் நோக்கத்தான் வள்ளுவப் பெருந்தகையின் இல்லம் புகலுற்றார். பதி பூசையில் மனம் லயித்திருந்த அம்மையார் பதிக்குப்பணி முடித்துப்பின் பிச்சை ஏந்தி வந்தார். தாமதித்து வந்து தன்னை வரவேற்றமைக்கு அவலம் அடைந்த அகதியார் தாம் முன்பு கொக்கை விழித்தது போலவே, வாசுகி அம்மையாரை விழித்துப் பார்க்கிறார். தன் கற்பின் சக்தியால் தவசியாரின் நோக்கத்தை உணர்ந்த அம்மையார், ''தபோநிதே! அடியாள் என்னையும் தாங்களெரித்த கொக்கெனவே நினைத்தீர்களோ?'' எனக்கேட்கிறாள். முனிவர் அம்மையாரின் கற்பின் மேன்மையை நன்குணர்ந்து, அவ்வுத்தமியின் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து பணிந்து செல்கிறார்.

இன்னோரன்ன 'கற்புக்கரசிகள்' நமது தாயகத்தில் அவதரித்து, நாட்டிற்கு நல்ல புகழையும் பெண்கள் குலத்திற்கே பெரும் நீதியையும் புகட்டியிருக்கிறார்கள்.

ஹிந்தி இலக்கியம்

"சௌரி"

பொதுவாக, தன் மொழி, இலக்கியம், கலாசாரம் இவைகளைக் கூடியவரையில் 'மிகப் பழமையானவை' என்று சாதித்து, பெருமை கொள்வது எல்லா மொழியினருக்கும் வழக்கமாகி விட்டது. 15-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே, தனக்கென்று ஒரு உருவத்தை அரைகுறையாகக்கொண்ட ஹிந்தி மொழியும் அந்த வழக்கத்திற்கு விலக்கல்ல.

சமஸ்கிருதத்தின் சிதைவு மொழிகளான அவதி, ஸௌரஸேநீ, கௌமீ, பாஞ்சாலீ முதலிய மொழிகளே புத்தர் காலத்திலிருந்து மக்கள் வழக்கு மொழிகளாக நிலவி வந்தன. ஸௌரஸேநீ மொழியின் சிதைவான விரஜ பாஷைதான் இன்றைய ஹிந்திக்கு மூலம் என்பது அம்மொழி ஆராய்ச்சியாளரின் துணிபு. கி. பி. 1200 முதல் 1850 வரை வட இந்தியாவின் பல பகுதிகளில் அதிகச் செல்வாக்கும், சூர்தாஸரின் 'சூர்ஸாகர்' போன்ற பல பேரிலக்கியங்களையும் பெற்ற விரஜ பாஷைக்கும், இன்றைய ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி மொழிக்கும் தொடர்பே கிடையாது என்பது சுநீதி குமார் சாடுர்ஜியா போன்ற மொழி ஆராய்ச்சியாளரின் கருத்து. இதில் ஓரளவு உண்மை இருக்கிறது. இன்றைய ஹிந்தியை நன்கு கற்றவர்கள், ஹிந்திக்காரர்கள் தம் பண்டைய இலக்கியங்கள் என்று கூறிக் கொள்ளும் கபீர்தாஸ், சூர்தாஸ், துளசிதாஸ் முதலானவர்களின் நூல்களைப் புரிந்து கொள்ளவே முடியாது. அந்நூல்கள் அப்போது பிரதேச மக்கள் பேசிவந்த கொச்சை மொழிகளில் சிறப்பாக, சுவையுடன் இயற்றப்பட்டவை. இன்றைய ஹிந்தியோ மூல சமஸ்கிருதச் சொற்களையும், பார்ஸீ, உருதுச் சொற்களையும் கலந்து ஆக்கிய ஓர் செயற்கை மொழி. இதற்கு 'கடீ போலீ' (கரடு முரடான மொழி) என்று ஹிந்தி ஆசிரியர்களே பெயர் வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒன்று; மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், பீஹார் முதலிய பிரதேச மக்கள் அந்தப் பழைய இலக்கியங்களை லகுவாகப் புரிந்து கொண்டு விடுவார்கள். காரணம், அவர்கள் பேச்சுமொழியுடன் அவ்விலக்கியங்கள் தொடர்புள்ளவை என்பதுதான்.

இன்றைய ஹிந்தி எப்படி உருவாயிற்று என்பதைச் சுருக்கமாகக் கவனிப்போம். அவதி, விரஜ பாஷை இவைதாம் 12-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை இலக்கிய மொழியாகவும், வழக்கு மொழீயாகவும் இருந்து வந்தன. 15-ஆம் நூற்றாண்டு முதல் முஸ்லீம்களின் ஆட்சி நிலைபெறத் தொடங்கவே, அவர்கள் ஆட்சி மொழியாக பார்ஸீ, துருக்கி சொற்கள் அதிகம் கலந்த புதுமொழியைப் பரப்பத் தொடங்கினார்கள். இதைத்தான் பிற்காலத்தில் 'உருது' (தர்பார் மொழி அல்லது ராணுவக் கூடாரத்து மொழி) என்று அழைக்கத் தொடங்கினார்கள். 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அக்பர் ஆட்சிக் காலத்தில் இம்மொழி நன்கு சீர்திருத்தப்பட்டு, பல பிராந்திய மொழிச் சொற்களையும் சேர்த்து, இலக்கிய மொழியாக்கப்பட்டது. இந்தியாவில் பல பகுதிகளிலுமுள்ள முஸ்லீம்கள் இந்த உருது மொழியையே பேச்சுக்கும், இலக்கியத்திற்கும் பயன்படுத்தி வந்தார்கள். 11ம் நூற்றாண்டு முதலே சில துருக்கி, பார்ஸியச் சொற்களைக் கொண்ட ஹிந்தி அல்லது ஹிந்தவீ என்னும் கொச்சை மொழி வடஇந்தியா

வின் பல பகுதிகளில் வழங்கி வந்தது. உருதுவின் ஆதிக்கம் வலுப்பதைக் கண்ட ஹிந்துக்கள், அதை 'யாவநீ' (யவனர்களின் நீச பாஷை) என்று வெறுக்கத் தொடங்கினர்கள். போட்டியாக விரஜ பாஷை, அவதி, புந்தேல் கண்டி, ராஜஸ்தானி, பிங்கலம் முதலிய சிதைவு மொழிகளில் ஏராளமாக இலக்கியங்களை உருவாக்கிமக்கள்மதிப்பையும் கவனத்தையும் உருதுவிலிருந்து திருப்பினர்கள். தில்லி ஆட்சிப் பீடத்தில் முஸ்லிம் மன்னர்கள் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்ததால், அவர்கள் பரப்பும் மொழியை ஆட்சி மொழியாக மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். மெள்ள மெள்ள பல பிரதேச மக்களின் பேச்சு மொழியிலும் உருது அதிகமாகக் கலக்கத் தொடங்கியது. இங்கிருந்துதான் ஹிந்தி, ஹிந்துஸ்தானி என்ற பிளவு ஏற்பட்டது. ஆரிய மொழிச் சொற்கள் பிரதானமாக உள்ள மொழி ஹிந்தி; உருதுச் சொற்கள் அதிகமுள்ளது ஹிந்துஸ்தானி. காந்தி அடிகள் இருந்த வரை, பாகிஸ்தான் பிரிவினையைத் தவிர்க்கவே ஹிந்துஸ்தானியை இந்தியாவின் அரசாங்க பாஷையாக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார். அவர் காலத்திற்குப் பிறகு, பாகிஸ்தானும் பிரிந்து விட்டதால், பாரத அரசாங்கம் ஹிந்தியை அரசாங்க மொழியாக்கியது. இப்போதும், கலைச் சொற்களை ஏற்கும் விஷயத்தில் சமஸ்கிருதச் சொற்களை அதிகம் ஏற்பதா, உருதுச் சொற்களை அதிகம் ஏற்பதா என்பதில் வாத விவாதம் நடந்து கொண்டேதான் இருக்கிறது. இதற்கிடையில், பெரும்பான்மையான ஹிந்தி எழுத்தாளர்களும், பேராசிரியர்களும் 'கடீபோலி' என்று முன்பு குறிப்பிட்ட செயற்கையான ஹிந்தியை (பெரும்பாலும் மூல சமஸ்கிருதச் சொற்கள் நிறைந்தது) பேச்சிலும் இலக்கியத் துறையிலும் வெகு தீவிரமாகப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இம்மொழி தென்னிந்தியருக்கும், மற்ற வட இந்தியப் பகுதியினருக்கும் சுலபம். இதற்கு ஆதரவும் பலமாகிக் கொண்டிருக்கிறது.

இலக்கியம்

ஹிந்தி இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் நான்கு காலப் பகுதிகளில் ஹிந்தி இலக்கியத்தை அடக்கி இருக்கிறார்கள். அவை—.

(1) வீரப்பாடல்கள் காலம். *(கி. பி. 11–ஆம் நூ. முதல் 14 நூ. வரை.)*

(2) பக்திப் பாடல்கள் காலம். *(14–ஆம் நூ. முதல் 17 நூ. வரை.)*

(3) இலக்கணம், அணி முதலியவை கூடிய ரீதிக் கிரந்தங்கள் காலம். *(17–ஆம் நூ. வரை.)*

(4) நவீன இலக்கிய காலம். *(19 ஆம் நூ. முதல் இன்றுவரை.)*

முதற்காலத்தில், சந்தபர்தாயீ என்ற கவி இயற்றிய 'பிருத்விராஜ ஸாரோ' (13-ஆம் நூ.), பட்ட கேதாரர் இயற்றிய 'ஜய சந்திர பிரகாஷ்', ஸாரங்கதரர் இயற்றிய 'ஹம்மீர் காவியம்' முதலிய பிரபந்த காவியங்கள் குறிப்பிடத் தக்கவை. இந்நூல்களுள் இடைச் செருகல்களும், சரித்திரம், பூகோளம் முதலியவற்றிற்கு முரணான செய்திகளும் மலிந்திருப்பதால், மூல உருவத்தையும், காலத்தையும் கண்டு பிடிப்பது கடினமாக இருக்கிறது. இந்நூல்களின் மொழியும், அரசாங்கத்துத் துதி பாடகர்களான சாரணர்கள் தாமாக அமைத்துக் கொண்ட ஒரு செயற்கை மொழி. எந்தப் பகுதியிலும் பேசப்படாத நாடோடிக் கொச்சைமொழி. இத்தகைய நாடோடி இலக்கிய மரபில் வட இந்தியாவில் மிகப் பிரசித்தமானது ஜகனிக் கவி இயற்றின 'ஆல்ஹா கண்ட' என்னும் வீரச்சுவை நூல்.

இரண்டாவது பகுதியான பக்தி காலத்தில்தான் இலக்கிய வளர்ச்சி வேகமாக முன்னேறத் தொடங்கியது. நாட்டில் முஸ்லீம் ஆட்சி வலுவானதும், வீர உணர்ச்சியில் மக்களுக்கிருந்த மோகம் குறைந்து விட்டது. இந்தச் சமயத்தில்தான் சங்கருடைய அத்வைதவாதம்

செல்வாக்குப் பெற்றிருந்தது. முஸ்லீம் துறவிகள் இம்மதத்திலிருந்து பல கருத்துக்களை ஏற்று, 'ஸூபி' என்றொரு சம்பிரதாயத்தைப் பரப்பத் தொடங்கினார்கள். இதைப் 'பிரேம மார்க்கம்' என்றும், வைதிக மதத்துடன் அதிகத் தொடர்பு கொண்டதை 'ஞான மார்க்கம்' என்றும் அழைத்தார்கள். ஞானமார்க்கத்தில் பல பக்திப் பாடல்களை இயற்றியவர்கள் கபீர்தாஸ், ரவிதாஸ், குரு நாநக், தாதூதயால், மலூக் தாஸ் முதலானவர்கள். பிரேம மார்க்கக் கவிகளுள் குதுபன், மலிக் முகம்மது ஜாயஸி, உஸ்மான், ஷேக் நபி, காஸிம் ஷாஹ், நூர் முகம்மது முதலியவர்கள் ஹிந்து சரித்திரக் கதைகளை ஆதாரமாகக் கொண்டு, தெய்வீகக் காதலை விளக்கி, காவியங்கள் இயற்றியிருக்கிறார்கள். இவர்கள் 16-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர்கள்.

ராமாநுஜாசாரியாருடைய ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம் வட இந்தியாவில் பிரபலமாகத் தொடங்கியதும், பகவானை அர்ச்சாரூபியாக ஆராதிக்க வேண்டும் என்கிற 'ஸகுண பக்தி' எங்கும் பரவத் தொடங்கியது. இந்த வழியில் மிகச் சிறந்த இலக்கிய சேவையோடு, தர்மத்திற்கும் தொண்டு புரிந்தவர் கி. பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கோஸ்வாமி துளசிதாஸ். இவர் இயற்றிய 'ராம சரித மானஸம்' என்னும் ராம கதை மிகச் சிறந்த நூல். பாமரர் முதல் பண்டிதர்கள் வரை எல்லோரும் காவியச் சுவையோடும், பக்தி சிரத்தையோடும் படித்தும், பாராயணம் செய்தும் பெருமை கொள்கிறார்கள். இத்தகைய பெரும் சிறப்பு வேறு எந்த மொழி நூலுக்காவது ஏற்பட்டிருக்கிறதா என்பது சந்தேகம்தான். இதற்குக் காரணம் துளசிதாஸரின் புலமையும், மக்கள் பேச்சு மொழிகளிலிருந்து இனிமையான சொற்களைச் சேகரித்து எளிமையும், அழகும் குன்றாமல் காவியம் இயற்றிய திறமையும் தான். பெரியவையும், சிறியவையுமாகப் பன்னிரண்டு நூல்கள் அவர் இயற்றியிருக்கிறார்.

16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சூர்தாஸ், பாகவதத்தை ஆதாரமாகக் கொண்டு, விரஜ பாஷையில் ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றியவர். 'சூர்ஸாகர்', 'சூர் ஸாராவளீ', 'ஸாஹித்ய லஹரீ' என்ற பெயர்களில் அவை தொகுக்கப்பட்டிருக்கின்றன. அதே நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்த பக்த மீராபாய் அம்மையாரின் பாடல்களும் இலக்கியச் சுவை நிரம்பியவை. கிருஷ்ணனுடைய சரிதத்தில் ஈடுபட்டுப் பல கவிகள் இக்காலத்தில் அநேகம் பக்தி நூல்களை இயற்றியிருக்கிறார்கள். ரஹீம், ரஸ்கான் முதலிய முஸ்லீம் கவிகள் கூட கிருஷ்ண பக்தியில் லயித்து, மிகச் சிறந்த பாடல்கள் பாடியிருக்கிறார்கள்.

17-ஆம் நூற்றாண்டிலிருந்து, மூன்றாம் இலக்கிய காலமான ரீதி காலம் தொடங்குகிறது. கேசவ தாஸ், சிந்தாமணி திரிபாடி முதலியவர்கள் சமஸ்கிருத அணி நூல்களை ஆதாரமாகக் கொண்டு, இலக்கண நூல்கள் இயற்றத் தொடங்கினர். காவ்யவிவேகம், காவ்யப்ரகாசம், சந்தவிசாரம் முதலிய அணி நூல்கள் வெளிவந்தன. இக்காலக் கவிகளும் ராமகதையைப் பல அணிகள் கொண்டு வர்ணித்திருக்கிறார்கள். இக்காலக் கவிகளில், பிஹாரிலால், பூஷண், விருந்த கவி முதலியவர்கள் மிகப் புகழ் பெற்றவர்கள்.

19-ஆம் நூற்றாண்டுக்கு அடியெடுத்து வைக்கும்போது, ஹிந்தி இலக்கியம் பல வகையில் புதுமை பெற்று விடுகிறது. உருதுச் சொற்களும், பிராந்தியச் சொற்களும் கலந்து செயற்கை மொழி உருவாகி, உரைநடை நூல்கள் வெளிவரலாயின. தூய உருது மொழியிலும் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே சிறந்த இலக்கியங்கள் வெளியாகி, ஹிந்து ரசிகர்களையும் கவர்ந்திருந்தன. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பண்டித தௌலத்ராம் பத்ம

புராணத்தை வசன நடையில் எழுதினார். இன்றைய ஹிந்தியின் முதல் உரை நடை நூலாக இதைக் கொள்ளலாம்.

பிறகு, கல்கத்தாவின் போர்ட் விரியம் காலேஜ் பேராசிரியர் ஜான் கில்க்ராயிட் என்பவர் எல்லா மக்களுக்கும் பயன்படும்படி, உருது, ஹிந்திச் சொற்களைக் கலந்து பல நூல்களை வெளியிட்டார். முன்ஷி ஸதாசுகலால், இன்ஷா அல்லாகான், லல்லுலால், ஸதல்மிச்ரா இவர்கள் இத்துறையில் பணியாற்றியவர்கள். 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலம், வங்க மொழிகளின் செல்வாக்கு அதிகமாகவே, பல நூல்களை மொழிபெயர்க்கத் தொடங்கினார்கள். பாரதேந்து ஹரிச்சந்திரர், தமிழகத்தில் பாரதியாரைப்போல் இந்தியாவின் சுதந்திரம் எல்லாத்துறையிலும் பறிபோகிறதே என்று துடித்துப் பல நூல்களை இயற்றினார். அவர் சில சமஸ்கிருத நாடகங்களை ஹிந்தியில் மொழி பெயர்த்தார். இவர் காலத்திலிருந்துதான், ஹிந்தியில் இந்தியக் கலாசாரத்தைப் பிரதிபலிக்க சமஸ்கிருதச் சொற்கள் அதிகம் சேர்க்கப்பட வேண்டுமென்ற தீவிர எண்ணம் பரவத் தொடங்கியது. இவர் காலத்திலேயே சுமார் 50 ஹிந்திப் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின.

இலக்கிய மாதப் பத்திரிகை 'சரஸ்வதி'யின் ஆசிரியர் மஹாவீர ப்ரஸாத் துவேதி தான் இன்றைய பண்பட்ட ஹிந்திக்குத் தந்தை என்கிறார்கள். அதுவரை இலக்கண வரம்புகளைக் கவனியாது எழுதிக் கொண்டிருந்தவர்களைத் திருத்தி, மொழியைச் சீர்படுத்திய பெருமை இவருக்கு உண்டு. பிரேம்சந்த் முதலிய உருது கதாசிரியர்களை ஹிந்திக்குக் கொணர்ந்தவரும் இவர்தான். பாபூ சியாம சுர்தாஸ், சந்திரதர் குலேரி முதலிய இலக்கிய விமரிசகர்களும் துவேதியுடன் ஒத்துழைத்துப் பல நூல்கள் இயற்றினார்கள்.

20-ம் நூற்றாண்டிலிருந்து ஹிந்தி இலக்கியம் பல துறைகளிலும் முன்னேறத் தொடங்கியது. ஆங்கிலேயர்களின் வழியைப் பின்பற்றி பல வகை நூல்கள் வெளியாயின. ஹிந்தி இலக்கிய வரலாறு நூல்கள் எழுந்தன. சில ஆசிரியர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஹிந்தி இலக்கியம் தொடங்குவதாக எழுதி வைத்தார்கள். பிற்காலத்தில் ராமச்சந்திர சுக்லா எழுதிய ஹிந்தி வரலாறு நூலில் தான், சுமார் 800 ஆண்டுகளாகத் தான் ஹிந்தி இலக்கியம் உருப்படியாகக் கிடைக்கிறது என்பதை ஆராய்ந்து நிரூபித்தார். ஆனால், அந்தப் பழைய இலக்கிய மொழி இன்றைய ஹிந்தியின் மூலபாஷை அல்ல என்பதில் ஓரளவு உண்மை இருக்கிறது.

இன்றைய ஹிந்தியிலும் நிறைய இலக்கியங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. பிரேம்சந்த், கௌஸிக், ஜயசங்கர் பிரஸாத், ஜைனேந்திரகுமார், யசபால், அக்ஞேய முதலிய பெரும் மேதைகள் நாவல், சிறுகதை, நாடகம், இலக்கிய விமரிசனம் எல்லாத் துறைகளிலும் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள்.

ஜயசங்கர் பிரஸாதின் பெருங்காவியம் 'காமாயனீ' உலக இலக்கிய வரலாற்றில் இடம் பெறத் தகுந்தது. மேலும் மைதிலீ சரண் குப்தா, மகாதேவி வர்மா, மகாகவி நிராலா, சுமித்திரா நந்தன் பந்த், பச்சன், அஞ்சல், தினகர், நவீன், மாகன்லால் சதுர் வேதி முதலிய தலைசிறந்த கவிகள் ஹிந்திக் கவிதை இலக்கியத்தைப் புதுப் புது வழிகளில் வளமாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஹிந்தியை இந்தியாவின் அரசாங்க மொழி என்று நிர்ணயிக்க முயன்றதும் விஞ்ஞானம், வைத்தியம், கலாசாரம், மொழி இலக்கிய ஆராய்ச்சி எல்லாத் துறைகளிலும் ஏராளமாக நூல்கள் வெளிவரத் தொடங்கி விட்டன.

ஹிந்திக்காரர்கள், தம் பழைய இலக்கியங்களையும் மறப்பதில்லை, புதுமை இலக்கியங்களை வளர்த்துக் கொள்வதிலும் தளர்வதில்லை. ★

சீர்திருத்தம்

லெ. பழனியப்பன்

சிந்தனை, சீர்திருத்தம், மறுமலர்ச்சி, நல்வாழ்வு இந்த வார்த்தைகள் தற்பொழுது உலகின் பல பாகங்களிலும் உள்ள மக்கள் வாயிலிருந்து வெளி வந்தபடியே இருக்கின்றன. காரணம்...?

ஒரு காலத்தில், யார் எதைச் சொன்னாலும் தேவ வாக்கு என்றுதான் நம்பிக் கொண்டிருந்தார்கள். நாளாவட்டத்தில் நம்பி வந்த அந்தச் செய்திகள் சரிதானா, உண்மைதானா என்று சிந்திக்கத் தொடங்கினார்கள். சிந்தித்த அவர்களுக்கு சீர்திருத்தம் என்ற தோட்டம் தெரிந்தது. அதில் மறுமலர்ச்சி என்ற செடிகளும் தென்பட்டன. ஆகையினால் செடிகளுள்ள அத்தோட்டம் அழகுச் சோலையாக, கண்ணிற்குக் குளிர்ச்சி தரும் பசுமை தோன்றப் பொலிந்திருந்தது. வண்ண மலர் இல்லாவிட்டால் சோலையாயிருந்தாலும் பாலை போல் தானே தோற்றமளிக்கும்? சோலை மணம் பெறவேண்டுமென்பதற்காக அதில் நல் வாழ்வு என்ற வண்ண எழில் மலரைக்காண விழைந்தார்கள். கண்டும் பயனடைந்தார்கள் மக்கள்-என்று உலக வரலாறு கூறுகிறது. ஆகையினால், சிந்தனையில் பிறக்கும் சீர்திருத்தம் என்ற கருவூலம், எப்படிப் பயன் பட்டது என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம்.

பிரெஞ்சுப் புரட்சி

பிரெஞ்சு நாட்டுப் புரட்சி - கேள்விப் படாத படித்தவர்களே இருக்க முடியாது — உலகத்தில், பிரபுக்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே ஏற்பட்ட ஏற்றத் தாழ்வு, ஏழைகளைத் அற்பமாக மதித்துவந்த பிரபுக்களுக்குப் பாடம் புகட்டுவதற்கு ஏற்பட்ட ஒரு சீர்திருத்தப் புத்தகம். அந்தப் புத்தகத்தை உருவாக்க - வீழ்ச்சியுற்ற பிரான்சில் எழுச்சிகாண — வால்டேர், ரூஸோ என்ற இரண்டு புரட்சி இயக்கத் தலைவர்கள் தோன்றி, புரட்சிக்காரர்களுக்கு உற்சாகத்தையும், உணர்ச்சியையும் ஊட்டி, வீரகாவியங்களை எழுதிக் குவித்தார்கள்.

ஒட்டியவயிறு — பஞ்சடைந்த கண் - பரட்டைத்தலை - பார்ப்போர் வெறுக்கும் நிலை - இவற்றோடு, சோர்ந்து சுருண்டு கிடந்த ஏழை மக்களின் நரம்புகளில் சூடேற்றி-சுழன்றோடும் இரத்தப் பெரு வெள்ளத்தை ஏற்படுத்தித் தந்தது அவர்கள் எழுத்து.

மாடமாளிகைகளில் மதுவருந்தி, மங்கைகளோடு மந்தகாசமாகப் பேசிக் குதூகலித்திருந்த பிரபுக்கள் மடிந்து கொண்டே இருந்தார்கள். அனாதைகளாக - ஆதரவற்றவர்களாக இருந்த ஏழைகளின் புரட்சி இயக்கம் வலுத்தது. பிரபுக்களும் ஏழைகளாயினர். கோமானும் குடிசை நிழல் கிடைக்காதா, கும்பி நிறையாதா என்று புலம்பும் நிலை ஏற்பட்டது. அதற்குப் பின்தான் பிரான்சு நாட்டிலே ஏற்பட்ட பிரளயம் ஓய்ந்தது. கொந்தளித்த கடலில் இருந்து குளுமையான காற்று வீச ஆரம்பித்தது. குமுறிய எரிமலை அடங்கியது. கொதித்து நின்ற ஏழைகள், தவித்து நின்ற பிரபுக்கள் இருவரும்ம குதூகலிக்கும் தினம் ஏற்பட்டது. உண்மை அரசோச்சியது - சீர்திருத்தம் என்ற செங்கோல்

லெனின்

ஏந்தி, புயலுக்குப்பின் அமைதி - இருளுக்குப்பின் ஒளி - இளமைக்குப்பின் முதுமை என்பது போல் சிந்தனைக்குப்பின் சீர்திருத்தம் - புரட்சிக்குப்பின் புத்துலகம் என்பதாக பிரான்சு நாட்டில் சீர்திருத்தம் ஏற்பட்டது. அதன் பின்னர் மக்கள் நல்வாழ்வடைந்தனர் என்பதாகச் சரித்திரம் எடுத்தியம்புகிறது.

ரஷ்யப்புரட்சி

கொடுங்கோல் மன்னன் ஜாரின் ரஷ்ய ஆட்சி முறையிலும் இப்படித்தான் சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கிறது. ஜாரின் கொடுமை அதிகமாக ஆக, காரல் மார்க்ஸின் கம்யூனிஸக் கொள்கையும் நாடெல்லாம் மின்னல் வேகத்தில் பரவ ஆரம்பித்தது. 'ரஷ்யாவின் தந்தை' என்று இன்று போற்றப்படும் லெனின், கம்யூனிஸ தத்துவங்களை நாடெல்லாம் - மக்கள் உள்ளமெல்லாம் - நல்லவர்கள் இதயமெல்லாம்—வரவேற்கும்படி உணர்ச்சியையும் இடையிடையே குழைத்துப் புகட்டினார். விழித்தனர் மக்கள். களிப்படைந்தார் லெனின். கம்யூனிஸம் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்தது. கொடுங்கோலன் ஜார் மன்னன் வெகுண்டெழுந்தான். கொடுங் கோலன் ஆட்சி நெடுங்காலம் நீடிக்காது என்பதை மக்கள் நிரூபித்தனர். முடியாட்சிக்குக் குழி தோண்டிப் புதைத்தனர் மக்கள். சோவியத் சரித்திரத்தில் சீர்திருத்தம் இந்த முறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்கப் புரட்சி

நீக்ரோக்களைப் பிடித்துவந்து, அடிமைச் சந்தையிலே விற்றார்கள் அமெரிக்கர்கள். அந்த நீக்ரோக்களை அமெரிக்கப் பிரபுக்கள் விலைகொடுத்து வாங்கி, அடிமைகளாக்கித் துன்புறுத்தி வந்தார்கள். அடிமை நீக்ரோக்களை சவுக்கால் அடித்து, அவர்கள் கதறி அழுவதைக் கண்குளிரக் கண்டு கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்தனர் பிரபுக்கள், தங்களின் வேடிக்கைப் பொழுது போக்கிற்காக. அமெரிக்காவில் மாற்ற முடியாத



யாவருக்கும் நிறபேதமின்றி சமத்துவம் வழங்கப்பட வேண்டும் என ஏற்பாடு செய்த லிங்கன்.

நிலையாக அமெரிக்கரின் இரத்தத்தில் ஊறிப்போன வெறி நிலையாக இருந்தது இது. காடுகளில் விறகு வெட்டிக் கொண்டிருந்த ஒரு ஏழையின் மகன், ஒருநாள் நியூயார்க் சந்தைக்கு வரும்பொழுது, இந்த இழி நிலையைக் காண நேர்ந்தது. கண்டவன் அதை ரசிக்கவில்லை, மாறாகக் கண்ணீர் சிந்தினான். கருவறுக்கும் செயலை விடக் கொடுமையான—மிகப் பயங்கரமான செயல் இது என்று எண்ணினான். சிறுவன் அவன், என்ன செய்ய முடியும்? சிந்தித்தான். பற்பல புரட்சி ஏடுகளைப் படித்துணர்ந்தான்.

சிறுவன் பெரியவனாகிப் புரட்சி இயக்கத் தலைவனானான். இளமையில் கண்டுவந்த கொடுமையை எண்ணி எண்ணி ஆவேசம் கொண்டான். கொடுமையை ஒழிக்க கொடுவாளை ஓங்கினான், புரட்சி இயக்கத்தின் துணைகொண்டு. பிரபுக்கள் நிலை தடுமாறினர். மன்னர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தான். சாஸனம் மாற்றப்பட்டது. மக்கள் ஆட்சி ஏற்பட்டது. நீக்ரோக்கள் அடிமைகளாக இல்லாமல் மக்களாக மதிக்கப்பட்டனர். மக்களால், மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மக்கள் ஆட்சிக்கு ''ஜனநாயகம் அல்லது குடியரசு'' என்ற உலகம் ஒப்பும்

பொன்மொழியை உதிர்த்தான். மக்கள் ஆட்சியின் முதல் ஜனாதிபதியாகவும் இருந்து வந்தான். அவன் தான் அடிமை விலங்கறுத்த ஆப்ரகாம்லிங்கன். வீணர்களை வீரர்களாக்கிப் புரட்சி கொடியேந்திய அமெரிக்கச் சீர்திருத்தத்தின் முன்னோடி ஆப்ரகாம் லிங்கன்.

சாக்ரடீஸ் போதனை

அரசியலிலே மட்டும் அறிஞர்கள் சீர்திருத்தம் ஏற்படுத்தவில்லை. மதங்களிலும் மாற்றங்காண விழைந்தார்கள். ஆண்டவன் பெயர் சொல்லி, அநியாயம் பல புரிந்து வந்த கிரேக்கநாட்டுப் பாதிரியார்களுக்கு புத்தி புகட்டத் தோன்றினான் சிந்தனையாளன் சாக்ரடீஸ். நெடுஞ்சாலை யோரத்தில், சந்துமுனைத் திருப்பங்களில் எல்லாம் சீர்திருத்தப் பிரசாரம் செய்து வந்தான். பற்பல நூல்கள் எழுதி நாட்டு மக்கட்குப் படைத்தான். ''கிரேக்கத்துப் பெருமக்களே, கேளுங்கள்! கேளுங்கள்!!'' என்று அறிவுக் கருவூலங்களை அள்ளி வீசினான். ''உன்னையே நீ உணர்'' என்ற உயர்ந்த பொன்மொழியை நாட்டுக்குத் தந்தான்-மக்களின் நலங்கருதி. சிந்தனையாளன் சீர்திருத்தம் பேசுகிறானே என்று சிறை அழைத்து அணைத்துக் கொண்டது. ஒரு கோப்பை விஷம் அவனை ஆட்கொண்டது. அப்பொழுதும் அவன், ''உன்னையே நீ உணர்'' என்ற ஒப்பற்ற வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டே மடிந்தான். இறந்தபின்தான் நாட்டு மக்களுக்குச் சீர்திருத்தம் என்றால் என்ன வென்பது விளங்கியது. சாக்ரடீஸின் சிஷ்யர்கள் அவன் விட்டுப்போன காரியத்தை சிரமேற்கொண்டு வெற்றி கண்டனர் கிரேக்க நாட்டில் மதச் சீர்த்திருத்தம் இந்த முறையிலே ஏற்பட்டது.

புத்தருக்கு ஞானோதயம்

மனிதனுக்கு ஏன் மரணம் ஏற்படுகிறது? நோய் ஏற்படுகிறது? என்று சிந்தித்தான் சித்தார்த்தன். முடிவுகாண விரும்பினான். ஆசை மனைவியையும் அருமை மகனையும் விட்டுப்பிரிந்து, காடுகளில் சுற்றியலைந்தான். சுற்றியலைந்த பின்னும் புத்தி தெளியவில்லை. தான் தேடிவந்தது காடுகளில் கிடைக்க வில்லையே என்று அயர்ந்து, போதி மரத்தின்கீழ் அமர்ந்தான். அமர்ந்தவனுக்கு அப்பொழுது ஞானவொளி ஏற்பட்டது. சிந்தை தெளிந்தது. ''ஆக்கப்பட்டபொருள் என்றாவது அழிக்கப்படத்தான் வேண்டும். அழிக்கப்படுமுன் இடையிடையே ஏதாவது இடையூறுகள் ஏற்பட்டால், அது அழிவிற்கு அறிகுறி'' என்ற உண்மையைக் கண்டுணர்ந்தான். சிந்தை தெளியாதிருந்த சித்தார்த்தன், ஞானவொளி பரப்பும் புத்தனாக மாறினான். மனிதர் தம் வாழ்வில் இன்பம் துன்பம் மாறி மாறி வருவதற்குக் காரணம் கண்டுபிடிக்க நினைத்தவன், அரண்மனை வாழ்வு, போக பாக்கியம் எல்லாம் துறந்து, தன்னையே சீர்திருத்திக்கொண்டு பின்னர் உலகைச் சீர்திருத்த ஆரம்பித்தான்.

இம்முறையில் தங்கள் சொந்த வாழ்வையும் சீர்திருத்தத்திற்கென்றே பலியாக்கிக் கொண்டவர்கள் காந்திஜியும், வ. உ. சிதம்பரம் பிள்ளையும் ஆவார்கள். இங்கர்சால் என்பவர் 'சீர்திருத்தம்' என்று புத்தகமே எழுதியிருக்கிறார்.

சேரன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோ, தனக்கு அரசபதவி கிடைக்க இருந்தும் 'அண்ணனிருக்கையில் தம்பி அரசபதவியேற்பது முறையல்ல' என்பதையுணர்ந்தான். ஆகவே தன்னை சீர்திருத்திக்கொள்ள விரும்பி அரசியல் பற்றற்று, துறவியாக மாறி, சிலம்புச் செல்வமான 'சிலப்பதிகார'த்தை உருவாக்கினான்.

சீர்திருத்தம் என்பது, ஏற்கனவே ஆக்கப்பட்ட ஒன்றை ஒழுங்குபடத்திருத்துவது என்பதேயாகும். 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்றபழமொழியைத்தான் அறிஞர் பெருந்தகையாளர்கள்சீர்திருத்தம் என்று ஒரே வார்த்தையில் சொல்லிப் போயினர் போலும்.

போலி வைரங்கள்

'ஆறுமணி'

வைரம் என்றால் தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஆனால் பெரும்பாலோர் அதைப் பார்த்திருக்க முடியாது. காரணம் அது விலையுயர்ந்த பொருள்; செல்வந்தர்களிடமே காணக்கூடியது. நம்மில் பெரும்பாலோர் பார்த்திருப்பதெல்லாம் நகைகளில் பதித்திருக்கும் கற்கள். இவற்றையே வைரம் என்றும் எண்ணியிருக்கின்றனர். ஆனால் இவை வைரமல்ல; போலி வைரங்களே!

வைர நெஞ்சம் என்று பெயர் பெற்ற கெட்டித் தன்மை போலி வைரத்திற்கில்லை. ஆனால் பளபளப்புமட்டும் ஈடாகவே யிருக்கும். வைரங்கள் இயற்கையில் கிடைக்கக்கூடியவை. ஆனால் போலி வைரங்கள் செயற்கைப் பொருள். ஒரு கேரட் (அதாவது தோலாவின் 56-ல் 1 பாகம்) எடையுள்ள வைரம் விலை சுமார் 200 ரூபாயாகிறது. ஆனால் போலியின் விலை சுமார் 2 ரூபாய்தான். வைரத்தை அணிந்தால், சில விசேஷத்தன்மைகள் அணிபவர்களுக்கு ஏற்படும் என்கிறார்கள். ஆனால் போலிக்கு இவ்விதத் தன்மை இல்லை.

வைரத்தின் பளபளப்பு, பார்ப்பவர்களிடம் அதை அணியவேண்டும் என்ற ஆவலைத் தூண்டி விடுகிறது. அதன் உற்பத்தியோ மிகக்குறைவு; விலையோ அதிகம். ஆனால் அணிய ஆசைப்படுவோரின் தொகையோ அதிகமாகிக் கொண்டே போகிறது. எளிய முறையில் விலை குறைவாயும் வேண்டிய அளவு கிடைக்கக் கூடியதுமான போலி வைரங்கள் பெருக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. இவை எப்படித் தயாரிக்கப்படுகின்றன என்பதை மேலாக நோக்குவோம்.

எப்படித் தயாரிக்கப்படுகிறது?

இதற்கான மூலப்பொருளை ஸ்விட்ஸர்லாந்து நாட்டிலிருந்து தருவிக்கிறார்கள். இவற்றிற்கு கூஜா, அல்லது மணி என்று பெயர். இவை பல நிறங்களிலும் கிடைக்கிறது. இவை கெட்டியான கண்ணாடித் துண்டுகளேயாகும். இந்தத் துண்டுகள் உருவத்தில் சுண்டு விரல்போலவும், பருமனிலும்அதேபோல்காணப்படும்.இவற்றில் ஒன்று சுமார் 2 தோலா எடை இருக்கும். ஒன்றின் விலையும் சுமார் 2 ரூபாய்தானிருக்கும். இதை கட்டிங்பட்டரை என்பதன் உதவியால் பிளந்து, தேவையான அளவிற்கான கனசதுரத் துண்டுகளாக வெட்டிக் கொள்வர். இதன் பின் இவற்றிற்கு கட்டிங்தலம் என்று பெயர்.

பின்பு கட்டிங்தலத்தை சுடை சிரைப்பு என்ற பட்டரையின் உதவியால், வைரத்தின் உருவத்திற்குக் கொண்டுவர முயற்சிப்பார்கள் அவை இரண்டு கூம்புகளை அடிப்பக்கம் பிணைத்து ஒன்றைப் பாதியாக, நுனிப்பக்கத்தில் வெட்டி எடுத்த பின்பு இருப்பதைப் போன்ற உருவம் உடையதாயிருக்கும்.

இங்கு தயாரிக்கப்பட்ட கற்கள் அடுத்து வண்டிகை என்ற இடத்தில் ஓரளவு உருவங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டு அதன்மேல் பட்டைகள் தீட்டப்பெறுகின்றன. இங்கு கற்கள் எந்த உருவத்தில் அமைந்தால் நன்றாக ஒளிவீசும் என்ற அமைப்பு கூர்ந்து கவனிக்கப்படுகிறது. இதுவரை கற்களுக்கு எவ்வித பிரகாசமும் இருக்காது. சாதாரண வெங்கக்கல்லைப் போலத்தானிருக்கும். அடுத்த வேலையான மெருகிடுதலின்

போதுதான் பளபளப்பைப் பெறுகிறது.

மெருகு தரும் வேலை

இங்கு வண்டிகையில் நீட்டிய பட்டைகள் சீராக்கப்பட்டு அதன் மேல் பளபளப்பான மெருகு தரப்படுகிறது. இது ஏதோ திரவத்தைக் கொண்டு மேலே கண்ணுடிக்கு ரசம் பூசுவதைப்போல் கொடுப்பது அல்ல. முதலில் எஃகு வில்லையின்மேல் அசல் வைரத்தைப் பொடியாக்கி, அதைத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து தடவுவார்கள். பின்பு அந்த வில்லை பொருத்தப்பட்டுள்ள கட்டையைச் சுற்றுவார்கள். அப்போது வில்லையும் சுற்றும். அப்படிச் சுற்றும்போது கற்களை அதில் தேய்ப்பார்கள். அப்படித் தேய்க்கும்போது உண்டாகும் பளபளப்புதான் நீண்ட நாட்கள் மாருமல் கற்களை ஒளிவீசச் செய்கிறது. இப்படித் தேங்காயெண்ணெயுடன் வைரப்பொடியைக் கலந்து வேலை செய்வதற்கு கல்சாணை என்பர்.

இதுவல்லாது செம்புவில்லையில் சக்கிக் கற்களைப் பொடி செய்து தண்ணீருடன் கலந்து தடவி கற்களைத் தேய்த்தும் மெருகு கொடுத்தனர். இதைச் சக்கரச்சாணை வேலை என்பர். இங்கு கொடுக்கப்படும் மெருகு தெளிவில்லாதிருக்கும். ஆனுல் கல்சாணையில் கொடுக்கப்படும் மெருகைவிட அதிக நாள் நிலைத்திருக்கக் கூடியது. இதை இப்போது யாரும் உபயோகிப்பதில்லை. ஆனுல் கெட்டி இல்லாத படிகம் போன்ற வகைக் கற்களுக்கு மெருகு கொடுக்க இதை உபயோகின்றனர்.

இவ்விதம் சாதாரண வெங்கக் கல்லைப் போன்றிருந்த கண்ணுடித் துண்டுகளான மணி, ஒளிவீசும் வைரக்கற்களாக மாற்றப்படுகின்றன. இதில் வேலை செய்பவர்கள் திறமையைப் பொருத்து தினம் ஐந்து ஆறு ரூபாய்வரை கூலி பெறுகின்றனர். இந்தவேலை நடக்கும் இடங்களைக் கல்பட்டரை என்றே அழைக்கின்றனர்.

ரங்கூன் கமலம்

இந்தத் தொழிலில் பிரதான ஸ்தானம் வகித்து வந்தது ரங்கூன் ஆகும். இதனுல் நம் நாட்டில் தயாராகும் இவ்விதக் கற்களுக்கும் ரங்கூன் கமலங்கள் என்றே பெயராயிற்று. இங்கு தயாரிக்கப்படுபவை ரங்கூனில் தயாரிக்கப்படுபவற்றிற்குச் சமான வேலைப்பாடுகள் கூடியவையாயிருந்த போதிலும், அதனுடைய பளபளப்பைப் பெறமுடிவதில்லை. காரணம்; அங்கு உபயோகிக்கப்படும் மூலப்பொருளான கூஜா ரகங்கள் இங்கு கிடைப்பதில்லை.

நம் நாட்டில் ஜெய்பூரில் இவ்விதம் போலி வைரத்தொழில் நடைபெறுகிறது. இதில் பெரும்பாலும் பெண்களே ஓய்வு நேரங்களில் வேலை செய்கின்றனர். ஆனுல் இங்கு தயாரிக்கப்படும் கற்கள் ரங்கூன் கற்களைப்போல் அமையாது, துவரம் பருப்பைப் போன்றிருக்கின்றன. இவற்றிற்கு ஜெய்பூர் போலிகள் என்று பெயர். இவற்றிற்கு ஜொலிக்கும் பளபளப்பு இருக்காது.

கேரளத்திலும், கோவையிலும் இத்தொழில் நடைபெற்று வருகிறது.

திருச்சிதான் இவ்வேலைக்கு கேந்திரமாக விளங்குகிறது. இவ்வட்டாரத்தில் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இத்தொழிலையே நம்பி இருக்கின்றன. இங்கு தயாராகும் சரக்குகள் அகில இந்தியாவிற்கும் செலவிடப்படுவதன்றி, சிலோன், மலேயா போன்ற அயல்நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. தென் இந்தியாவில் இக்கற்களைப் பதித்து நகைகள் செய்யும் வேலை திருச்சியிலும் பெங்களூரிலும் பெருத்த அளவில் நடைபெறுகிறது.

ஆகவே ஏழைகளை அதிகம் பெற்றுள்ள நம்நாட்டில், ஆயிரக்கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றும் குடிசைத்தொழிலையும் திருச்சி பெரியகடை வீதிபோன்ற வியாபார ஸ்தலங்களையும் உண்டாக்கிவரும் வைரத்தைப் போலி என்று கூற மனம் வருமா? ★

மிகவும் துரதிருஷ்டமான வைரம்!

மிகவும் துரதிருஷ்டமான தென்று கருதப்பட்ட நீலநிற வைரத்தை இப்போது அமெரிக்க வர்த்தகப் பிரமுகர் ஹேரி வின்ஸ்டன் வைத்திருக்கிறார். இதை இவர் 2,50,000 பவுன் விலை கொடுத்து வாங்கியிருக்கிறார். இவர் இந்த வைரத்தை வாங்கியதினால் கவலைப்பட்டதாகத் தெரிய வில்லை. ஆனால் இவர் கைக்கு வரும்வரை இது பலருடைய கைமாறி, ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு தீங்கை இழைத்துள்ளது.

பிரபல அமெரிக்க பத்திரிகாசிரியர் இவ்வைரத்தை 75,000 பவுன்களுக்கு வாங்கினார். இவர் இதை வாங்கிய 8 வருஷங்கள் கழித்து அவருடைய 11 வயது பையன் காரில் அகப்பட்டு மாண்டான். பின்னர் இவருடைய வியாபாரத்தில் ஒரு பெரு நஷ்டம் ஏற்பட்டது. கடைசியில் அவரும் அவர் மனைவியும் சித்தம் தடுமாறி மாண்டனர்.

இந்த வைரம் புத்தவிக்கிரகத்தின் இரு கண்களில் ஒன்றில் பதிக்கப்பட்டிருந்தது என்றும் அதை ஒரு பிரெஞ்சுக்காரர் பெயர்த்து பாரிஸுக்கு எடுத்துச் சென்று விட்டதாகவும் கூறப்படுகிறது. கோயிலிலுள்ள விக்ரகங்களின் நகைகளிலுள்ள கற்களை மனிதர்கள் அழகுபடுத்திக் கொள்ள போட்டுக் கொள்ளலாகாதென்கிற நம்பிக்கை கீழ்நாடுகளில் இருந்து வருகிறது.

இந்த வைரத்தை பிரான்ஸின் மன்னரான பதினாலாவது லூயி வாங்கினார். மேடம் டீ மான்டெஸ்பான் என்ற தன் ஆசை நாயகிக்கு லூயி இதை பரிசாக அளித்தார். இதை அவள் அணிந்தது முதற்கொண்டு அரசனின் தயவை அவள் இழந்து விட்டாள்.

மேரி அன்டாபனட் என்கிற ராணி (16-வது லூயின் மனைவி) இதை அணிந்திருந்தாள். அவள் கில்லட்டீன் செய்யப்பட்டு மாண்டாள். இந்த வைரம் ஆமஸ்டர்டாம் வைரத் தொழிலாளி பால்ஸிடம் எப்படி வந்தது என்பது தெரிய வில்லை. இவனுடைய சொத்தெல்லாம் சூறையாடப்பட்டு விட்டன. பின்னர் பல கைகள் மாறிய பின் ஹென்றி தாமஸ ஹோப் என்கிற இங்கிலீஷ்காரர் வசம் இந்த வைரம் வந்து சேர்ந்தது. இதை இவர் 70 வருஷங்கள் வைத்துக் கொண்டிருந்து பின்னர் விற்றார்.

இதை வாங்கிய நியூயார்க் நகைவியாபாரி சொத்தை எல்லாம் இழக்க நேரிட்டது. தனிடோவங்கி என்ற ரஷ்ய இளவரசர் இதை வாங்கினார். இந்த இளவரசர் குத்தப்பட்டு மாண்டார். துருக்கி சுல்தான் அப்துல் ஹமீத் இதை வாங்கினார். இதை அணிந்த அவர் மனைவி சுல்தான் கையாலேயே குத்துண்டு மாண்டார். பின்னர்தான் இந்த வைரம் அமெரிக்கா போய்ச் சேர்ந்திருக்கிறது.



பல் சக்கரம்

ஜகதீஸ்வரி நாகராஜன்

என் கை கடியாரம் ''மக்கர்'' பண்ண ஆரம்பித்து விட்டது. ஒரு வாரத்திற்கு முந்திதான் கடியார டாக்டருக்கு ஐந்து ரூபாய் அழுதுவிட்டு, கடியாரத்தை மீட்டு வந்தேன். நோயெல்லாம் குணமாகி விட்டதென்றும் இனிமே கடியாரம் மக்கர் பண்ணாதுங்கோ என்றும் சொன்னான் அவன். ஆனால்...?

எனக்கு கடியாரங்களைப் பற்றி அரைகுறையாகத்தான் தெரியும். ஆகையினால் என் கைக்கடியாரத்தை அக்கு வேறு ஆணி வேறாக கழற்றி, கண்ணாடி குப்பியில் பல் சக்கரங்களை போட்டு மூடி வைத்து வெய்யில் வேளையாதலால் சிரமம் தீர கொஞ்ச நேரம் படுக்கலாமென்று நாற்காலியில் அப்படியே சாய்ந்து கொண்டேன்.

'கிடுக்கு, கிடுக்கு' என்ற சத்தத்தைக் கேட்டு ஏதோ என்னமோவென்று, அலறியடித்துக்கொண்டு கண்களை நன்றாகத் திறந்துப் பார்த்தேன். என் கடியாரத்திலிருந்த இரண்டு பல் சக்கரங்கள் கைக் கோர்த்துக் கொண்டு என் எதிரில் வந்து நின்றன. அவைகளைப் பிடித்து, கண்ணாடிக் குப்பியில் போடலாமென்று கையை நீட்டிய உடனே, ஒரு பல் சக்கரம் பேசத் தொடங்கியது.

''அன்பரே, எங்களை அதற்குள்ளாக, கண்ணாடி குப்பியில் போட்டு விடாதீர்கள். உங்களோடு எவ்வளவோ பேச வேண்டியதிருக்கிறது'' என்றது அந்தப் பல் சக்கரம்.

''இது ஏதடா, நாம் வேறு உலகத்திற்கு வந்து விட்டோம். ஜடப் பொருள்களும் பேசுகின்றனவே!'' என்ற வியப்பினால் வாயடைத்துப் போனேன். சக்கரம் மேலும் பேசத் தொடங்கியது.

''தாங்கள் இல்லாமல் உங்களுடைய விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவுகளான இயந்திரங்கள் இயங்காது. எங்கள் மூர்த்தி சிறியதாக இருந்தாலும், எங்கள் கீர்த்தி பெரியது'' என்றதும் மற்ற சக்கரம் பேசத் தொடங்கியது.

''மனிதர்களுக்கு ஒரு கெட்ட குணமுண்டு. நீங்கள் எங்களைத் தனித் தனியாகப் பிரித்து விட்டீர்கள். எங்கள் அமைப்பைப் பார்த்து வியந்தும் இருப்பீர்கள். ஆனால்எங்கள் பூர்வோத்திரத்தைக்

குறித்து சிறிதேனும் சிந்தித்திருப்பீர்களா?'

''மனிதனுக்கும், அவன் சம்பந்தப்பட்ட கலாசாரத்திற்கும்தான் பூர்வ சரித்திரமுண்டென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனல் உங்களுக்கும்...'' என்று நான் சொன்னதுதான் தாமதம், பல் சக்கரங்களுககு கோபம் வந்து விட்டது.

''உங்களுக்கு உபயோகமாயிருந்தால் போதும். எங்களைக் குறித்து ஏன் தெரிந்து கொள்ள ஆசைப்படப் போகிறீர்கள்! விஞ்ஞானிகள் மாத்திரமே எங்கள் வரலாறுகளை ஆராய்ந்து, எங்கள் முன்னேற்றததிற்கு பாடுபடுகிருர்கள். ஆனல் இந்த 'பொது அறிவு யுகத்தில்' எங்களைப் பற்றி யாவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் நாங்கள் எழுத்தாளராகிய உங்கள் முன்னிலையில் நிற்கிறோம்.''

''அரிஸ்டாடில் என்ற கிரேக்க விஞ்ஞானிதான் எங்கள் மூதாதைகளான ''உராயும் சக்கரங்களை''க் கண்டுபிடித்தார். சில சக்கரங்களை, அவைகளின் கேந்திரங்களை ஒரே கோட்டில் வரும்படி வைத்து, மேல் வட்டங்களை ஒன்றோடொன்று உராயும்படி அமைத்து, ஒரு சக்கரத்தை சுற்றினல் மற்ற சக்கரங்களும் சுற்றும். இதுதான் எங்களுடைய இயக்கத்தின் அடிப்படைத்தத்துவம். இந்தச் சக்கரங்கள் உராயும் சக்தியினல் ஓடுவதினல் இவைகளை ஆங்கிலத்தில் ''ப்ரிக்ஷன் வீல்ஸ்'' என்று சொல்லுவார்கள்.

''கி.மு. 250-ம் ஆண்டில் ஸ்டெனிபியஸ் என்ற விஞ்ஞானி உராயும் சக்கரங்களுக்கு மேல் பக்கத்தில் பல் அறுத்து, உபயோகமுள்ளவைகளாக அமைத்தார். இந்த விஞ்ஞானி தான் அமைத்த சக்கரங்களைக் கொண்டு ''தண்ணீர் கடியார''த்தை நிர்மாணித்தார். அதை இன்றும் லண்டன் மாநகரத்தில் உள்ள விஞ்ஞானப் பொருட்காட்சி சாலையில் காணலாம்.

''இந்த ரூபமாக வெளியான பல் சக்கரங்களை இயந்திரங்களுக்கு உபயோகிக்கலாம் என்ற உண்மையை ''ஆர்க்கிமெடிஸ்'' என்ற விஞ்ஞானி நன்குணர்ந்திருந்தார். ஒரு சமயத்தில் இந்த பூகோளத்தையே பல் சக்கரங்களினலும், மறைகளினலும் சுற்றவைக்க முடியுமென்று சொன்னராம் ஆர்க்கிமெடிஸ்.

''இருபது வருடங்களுக்குப் பிறகு, (கி.மு. 230) 'பிலோன்' என்பவர் பல் சக்கரங்களைக் கொண்டு வாசனை திரவியங்கள் தெளிக்கும் இயந்திரத்தையும், தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தையும் செய்தார்.

''ரோம் ராஜ்யம் ஓங்கியிருந்த காலத்தில் நாங்கள் அதிவேகமாக முன்னேறிக் கொண்டிருந்தோம். ரோம் நகரவாசிகள் எங்களை நன்ருகப் பயன்படுத்திஞர்கள். ஆனல் வாழ்விருந்தால் கூடவே தாழ்விருக்கு மென்பார்களே, அதே போல் ரோம் சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைந்ததுமே நாங்கள் கவனிப்பாரற்றுக் கிடந்தோம்.

''கி. பி. 11-ம் நூற்ருண்டில் விஞ்ஞானிகள் எங்கள் வரலாறை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர்கள்.

''எங்கள் மறுமலர்ச்சி வரையில் எங்கள் உடம்பு மரத்தினல் செய்யப்பட்டு வந்தன. அழகும் இல்லாமல் எப்படியோ எங்கள் கடமைகளை குற்றம் குறைகளுடன் செய்து வந்தோம். ஆனல் கி. பி. 14-ம் நூற்ருண்டில்தான் உண்மையாக எங்களுடைய முன்னேற்றம் தொடங்கியதென்று சொல்லலாம்.

''இந்த நூற்ருண்டில் உலோகத்தினல் செய்யப்பட்ட பல் சக்கரங்கள் ஊர் நடுவில் வைக்கப்படும் கோபுர கடியாரங்களில் பொருத்தப்பட்டன.

''பதினைந்தாம் நூற்ருண்டில் எங்களைக் குறித்து அக்கறை விஞ்ஞானிகளுக்கும், இஞ்ஜினியர்களுக்கும் ஏற்பட்டது. கட்டிட வேலைகளுக்கும், கப்பல் வேலைகளுக்கும், யுத்த தளவாடங்களின் வேலை

களுக்கும் எங்களை உபயோகப் படுத்தத் தலைப்பட்டார்கள். இதிலிருந்துதான் எங்களுக்கு நல்ல யோகமென்று சொல்லலாம்.

''1440-ம் ஆண்டில், எங்களைக் கொண்டு கண்டு பிடிக்கப்பட்ட ''டைப்'' இயந்திரத்தினால், புத்தகங்களை மலிவான விலையில் அச்சடிப்பதற்கும், கல்வியை உலகெங்கும் பரப்புவதற்கும் சாத்தியமாகியது.

''அது வரையில், நாங்கள் சர்வ சாதாரணமான பாமரர்களைப் போல் கணக்கு வழக்கில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தோம். ஆனால் எங்கள் முன்னேற்றத்தையும், திறமையையும் கண்ட விஞ்ஞானிகள் எங்கள் மேலுள்ள பற்களைகணக்குப்பிரகாரம் அமைக்கத் தொடங்கி விட்டார்கள்.

''மனிதர்களுக்கு, சிங்கப் பற்களென்றும், அரிசிப் பற்களென்றும் பல வகை பற்களிருப்பதுபோல், எங்கள் பற்களும் பல ரூபங்களெடுக்க ஆரம்பித்தன.

''இயக்க வேண்டிய இயந்திர சக்திக்குத் தகுந்தாற்போல் எங்கள் பற்கள் அமைக்கப் பெற்றன. எல்லாவிதப் பற்களைக் குறித்து விபரமாகச் சொல்ல ஆரம்பித்தால் பல நாட்கள் தேவைப்படும்.

''முன்பெல்லாம் எங்கள் பற்களை அறுப்பதற்கு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப் படவில்லை. தொழிலாளி தன் கைத் திறமையைக் கொண்டே பற்களைச் செய்து வந்தான். ஆகையினால், எங்கள் தோற்றத்தில் பல வித்தியாசங்களும், பற்களில் பலக் குறைவும் ஏற்படுவது சகஜமாக இருந்தன.

''பத்தொன்பதாம் நூற்றாண்டில் நீராவி இயந்திரங்கள், சமுதாய முன்னேற்றத்திற்கு இன்றியமையாத கருவியாக அமைந்ததும், எங்கள் தேவை அதிகமாகத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கண்டு பிடிக்கப்பட்ட விமானங்களும் மோட்டார் காரும் எங்களுடைய உபயோகத்தை பன்மடங்காக்கின.

இந்த இயந்திரப் புரட்சியினால் எங்களை மிகவும் வல்லமையுள்ளவர்களாகவும் அமானுஷ சக்திகளைத் தாங்கும் யோக்கியதை யுள்ளவர்களாகவும் ஆக்கிவிட்டார்கள்.

''எங்கள் பற்களைக் கணக்குப் பிரகாரம் அமைப்பதற்கு வேண்டிய இயந்திரங்கள் கண்டு பிடிக்கப் பட்டன.

''முன்பெல்லாம் ஒரு பல் சக்கரம் செய்ய ஒரு வாரமாகும். இந்த நாட்களில் ஒரு மணிக்கு நூற்றுக் கணக்கில், எங்களைக் கொண்டே, எங்கள் போன்றவர்களைத் தயாரிக்கும் இயந்திரங்கள் உள்ளன.

''எங்கள் முன்னேற்றம், இன்றும் பரிபூரணமடையவில்லை. இன்ஜினியர்கள், இன்றும் எங்களுடைய ரூபத்தை ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்'' என்று முடித்தது அந்தப் பல் சக்கரம்.

''இதென்னடா அதிசயஉலகம்!'' என்று கண்களைத் திறந்தேன்.

என் ஐந்து வயது புத்திரி, நான் கழற்றிய பல் சக்கரங்களில் இரண்டை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். ★

கோழை உள்ளங்கள், தங்களால் அழிக்கப்பட முடியாத ஆசைகளோடு சமாதானம் செய்து கொள்கின்றன. ஆனால் உறுதியான உள்ளங்களோ அந்த ஆசைகளை அழித்து விட்டு தங்கள் இலட்சியங்களை நிலை நாட்டுகின்றன.

—கவி லாங்பெல்லோ.

உண்மையான தெய்வம், உண்மையான தர்மம், உண்மையான நீதி ஆகியவை ஒரே ஒரு விஷயத்தில்தான் இருக்கின்றன. எல்லா மக்களுடைய துன்பத்தையும் குறைப்பது தான் அது.

—மெக்காலே.

இந்திய காமசாஸ்திர நூல்கள்

வி. சந்தானம்

நமது இந்திய தேசத்து முனிவர்கள், ''கணக்கு தெரியாத கணக்குப் பிள்ளை போல, காம சாஸ்திர விஷயங்களை அறியாத மணமான ஆண், பெண்கள் திண்டாடுவர்'' எனக் கூறியிருக்கின்றனர். நமது முன்னோர்கள் சமையல், (நளபாக சாஸ்திரம்) நடனம், (பரத நாட்டிய சாஸ்திரம்) முதலிய பல்வேறு விஷயங்களுக்கு சாஸ்திரங்கள் வகுத்திருக்கின்றனர். அவ்வாறே ஆண், பெண் தாம்பத்ய உறவு பற்றியும் நூல்கள் எழுதி வைத்துள்ளனர்.

வெறும் சரீர சம்பந்தமான காம உணர்ச்சியைப் பற்றி நம்முடைய சமுதாயத்தில் மிக மிக அலட்சிய மனப்பான்மையே இருந்து வருகிறது. இவர்களைப் பரிகசித்தால், ''மீன்குட்டிக்கு நீச்சல் கற்றுக் கொடுக்க வேண்டுமா? யௌவன ஆண், பெண்களுக்கு விஷயம் தெரியாதா?'' என்பர். அமெரிக்கா முதலிய நாடுகளில் ஆண், பெண் தாம்பத்ய உறவு பற்றிய விஷயங்களை 18, 20 வயது ஆண்களுக்கும், பெண்களுக்கும் பள்ளியிலேயே போதிக்கின்றனர். இந்தியாவிலோ இந்த மாதிரி ஒரு விஷயம் இருக்கிறது என்பதே அறியாமல் பெண்கள் காரியாலயங்களுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லுகின்றனர்.

பல நாடுகளிலிருந்து மங்கையர்கள்

இந்தியாவின் காம சாஸ்திர நூல்கள் ரதி ரகஸ்யம், பஞ்ச சாக்யம், சமேர பிரதீபா, ரதி மஞ்சரி, அனந்த ரங்கம், ரச மஞ்சரி முதலியவை. ரதி ரகஸ்யம் என்னும் காம நூலின் ஆசிரியர் பெயர் கொக்கோகர். இவர் ஒரு முனிவர் என்பது எல்லோருக்கும் ஆச்சரியத்தை அளிக்கும். பரத நாட்டிய சாஸ்திரம் எழுதிய பரதர் என்பவரும் ஒரு முனிவர். என்பது இவ்விடத்தில் குறிப்பிடவேண்டிய விஷயம். இவர் காஷ்மீரை ஆண்ட அரசன் ஒருவர் சபையில் இருந்து வந்தார். அம்மன்னனுக்குப் பல மனைவிமார்கள். அம்மங்கையர் முறையே மலையாளம், ஆந்திரம், தமிழ், கூர்ஜரம், உஜ்ஜெயினி, பஞ்சாப், சிந்து, குஜரத், மகாராஷ்டிரம், கன்னடம், வடக்கு வங்காளம், காமரூபம் முதலிய நாடுகளிலிருந்து வந்து, மன்னனுக்கு வாழ்க்கைப் பட்டவர்கள். மன்னன் காம சாஸ்திரப் பிரியன். அவன் கொக்கோக முனிவரை ஒரு காம சாஸ்திரம் எழுதித் தரும்படி வேண்டினன். அவர் அவ்வாறே 'ரதி ரகஸ்யம்' என்ற நூலை சமஸ்கிருதத்தில் எழுதித் தந்தார். பல பெண்களுடன் ஒரே சமயத்தில் தாம்பத்ய உறவு கொள்ளுவது எப்படி என்பது பற்றியும், ஆந்திரம், கேரளம். மகாராஷ்டிரம் முதலிய தேசத்துப் பெண்கள் எப்படிப்பட்ட நகைகள், புஷ்பங்கள் இவைகளால் திருப்தியடைவர் என்பதையும் குறித்திருக்கிறார். மேற்கூறிய நூலிலிருந்து கொக்கோக முனிவர் காலத்து இந்திய ராஜ்யப் பிரிவுகள் நன்கு தெரிகின்றன. மலையாள ராஜ்யப் பெண்கள், மல்லிகைப்பூ என்றால் உயிரை விடுவார்களாம்; தமிழ் நாட்டுப் பெண்கள் தலையில் திருகுப்பூ முதல் உடம்பு முழுவதும் பொம்மை மாதிரி 100 பவுன்களுக்குக் குறையாமல் நகை போட்டுக்கொள்ள ஆசைப் படுவார்களாம்; மலையாள ராஜ்யப் பெண்களைப் பற்றி வர்ணிக்கும் போது, அவர்கள் வெற்றிலை போட்டுக் கொண்டால் அந்த சிவப்பான வெற்றிலைச் சாறு கழுத்தின் வழியாகப் போவதை வெக்கழுத்தின் மூலமாகவே பார்க்கலாம் என்கிறார். மகாராஷ்டிரப் பெண்கள், நல்ல சித்திரங்களை விரும்புவார்களாம்; காஷ்மீர் நாட்டுப் பெண்

கள், வெள்ளை வஸ்திரங்களையே விரும்புவார்களாம்.

சுருண்ட தலைமயிர் ஆண்களுக்கு யோகம்

'பஞ்சசாக்யம்' என்ற காம சாஸ்திர நூலின் ஆசிரியர் ஜயோதிரீஷன், அறுபத்து நாலு வித நிலைகளில் தாம்பத்ய உறவு சுகம் அனுபவிக்கும் விதங்களை எழுதியிருக்கிறார்.

'சமேர பிரதீபா,' வேஷபதி என்பவரின் மகன் குணகன் என்பவரால் இயற்றப் பட்டது. பல்வேறு பெண்களைக் கவரும் விதம் இதில் கூறப்பட்டுள்ளது. சுருண்ட தலைமயிர் உள்ள ஆண்பிள்ளையைக் கண்டு மயங்காத பெண் இல்லை என்கிறார் இவர்.

'ரதி மஞ்சரியை' இயற்றியவர் ஜயதேவர். தாம்பத்ய உறவு சுகத்தை முறைப்படி அனுபவித்தவன், மனைவியுடன் மோட்சத்திற்கு செல்லுவான் என்கிறார் இவர்.

வாதத்தில் வென்ற கலியாணமல்லன்

கலியாணமல்லன் எழுதியது 'அனந்தரங்கம்' என்ற நூல். லோடிகான் என்ற முகம்மதிய மன்னனால் காம சாஸ்திர நூலை எழுதுவதற்காகவே சபையில் நியமிக்கப்பட்டவர். பெண்களுக்குக் காமமே கிடையாதென்றும், கலியாணம் ஆயிற்று என்ற சம்பிரதாயத்தில் ஆண்களின் காம உணர்ச்சிக்கு அவர்கள் துணைக் கருவிகளாக— பேசாப் பதுமைகளாக இருக்கின்றனர் என்றும் ஒருவர் இவரிடம் வாதம் செய்தார். கலியாணமல்லன் பின்வரும் சமயங்களில் பெண்களுக்குக் காமம் ஏற்படுகிறது என்று ஆராய்ச்சி செய்து நிரூபித்தார். (1) கணவன் வெளி நாட்டில் இருக்கும்பொழுது (2) கனபகஸ்தூரி, மல்லிகை இவைகளின் மணம் இவர்கள் மீது வீசும்போது (3) வீணை, பிடில் இவைகளுடன் சேர்ந்த இனிமையான கானம் இவர்கள் காதில் விழும்போது (4) நல்ல இனிமையான குரலுடைய ஆண் பாடும்பொழுது (5) ஏதாவது ஒரு காரணத்தால் எல்லையற்ற மகிழ்ச்சியில் இருக்கும்போது (6) கருவுற்ற ஆரம்ப மாதங்களில் (7) நெடுந்தூரப் பயணம் அல்லது அதிக உழைப்பால் களைத்திருக்கும்போது (8) குழந்தை பிறந்த நான்கு மாதங்களுக்குப்பிறகு (9) ருசிகரமான நாவல்கள் முதலியவற்றைப் படிக்கும்போது (10) இடியும், மின்னலும், புயலும், பெரிய பிரளய மழையுமாக வெளியே பெய்து கொண்டிருக்கும்போது.

'ரசமஞ்சரி' பானுதத்தன் என்ற பிராமணப் புலவரால் இயற்றப்பட்டது. இவர் பெண்கள், தங்கள் உடலை, ஆண்களுக்கு அனுபவிக்கும் நிலைக்களனுகத் தியாகம் செய்வதின் மூலம் தாங்களே இன்பம் அடைகின்றனர் என்கிறார்.

கண்களுக்கு மையிட்டுக் கொண்டால்?

இவைகளைத் தவிர, வாத்ஸ்யாயனர் என்ற முனிவர், காம சூத்திரங்களை அருளியிருக்கிறார். இவர் கூறியிருப்பதில் முக்கியமானது பெண்கள் கண்களுக்கு மையிட்டுக் கொள்வதால் ஆண்களைக் கவரலாம் என்பது.

உத்தம முனிவரின் புத்தகம் தற்போது உலுத்தர்களின் வேதம்

ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் இயற்றிய நூல்களை 'ஷேக்ஸ்பியர்' என்ற பெயராலேயே அழைக்கிறோம். அதுபோல் கொக்கோக முனிவர் இயற்றிய ரதி ரகஸ்யத்தை ''கொக்கோகம்'' என்றே அழைக்கின்றனர். இந்தியாவிலுள்ள காமசாஸ்திர நூல்களில் இதுவே சிறந்தது. இந்த நூலை அதிவீரராம பாண்டியன் தமிழில் மொழி பெயர்த்துத் தந்தான். இந்நூலின் அருமை பெருமைகளைத் தெரியாத சிலர், இந்நூல் காம இச்சையை ஆண், பெண் பாலரிடம் எழுப்புவது என்று தீர்மானித்து, இதைப்படிப்பவர்களைப் புல்லர்கள் என நினைக்கின்றனர். இந்த எண்ணம் தவறு! ★

மருந்தாகும் மலர்கள்

தென்காசி ரஷீத்

நம் நாட்டில் எங்கு நோக்கினும் கண்ணைக் கவரும் வண்ண மலர்களைக் காண்கின்றோம். அவைகளில் பல அலங்காரம் செய்வதற்கும் வாசனைத் திரவியங்கள் எடுப்பதற்கும் பயன்படுகின்றன. ஆனல் நோய்களைப் போக்கும் மருந்தாகவும் அம்மலர்கள் பயன்படுகின்றன என்பதை பலர் அறிந்திருக்க முடியாது. ஆகவே எந்தெந்த மலர்கள் மருந்தாகப் பயன்படுகின்றன என்பதைக் கவனிப்போம்.

ரோஜா: இதன் வாசனை இருதயத்திற்கு பலத்தை உண்டாக்குகின்றது. நெஞ்சுச்சளியை அகற்றுகின்றது. அதன் சாற்றை மூக்கில் பிழிந்தால் தலைவலி நின்றுவிடும். அதன் இதழ்களைத் தேனில் ஊற வைத்துச் சாப்பிட்டால் வயிறு சம்பந்தமான வியாதிகள் தீரும். அதன் இதழ்களையோ, மொட்டுக்களையோ நெய்யில் வறுத்து உணவுடன் உட்கொண்டால் நன்ருக பேதியாகும்.

பிச்சுப்பூ: கண் வியாதியால் கஷ்டப்படுவோர் இப்பூவை கண்களில் வைத்துக் கட்டினல் கண் வியாதிகள் நீங்குவதோடு, கண் சிகப்பும் நீங்கும்.

குண்டு மல்லிகை: இதுவும் மேற்சொன்ன வகையைச் சேர்ந்த பூவாகும். இதை தலையில் வைத்துக் கொள்வதால் கண் பார்வை கூர்மைப்படும். மனதிற்கு இன்பத்தைக் கொடுக்கும்.

செவந்தி: இப்பூவைத் தலையில் வைத்துக் கொண்டால் தலைமயிர் நன்ருக வளரும். கண்ணுக்கு குளிர்ச்சி ஏற்படும். இப்பூவை சூர்ணம் செய்து சாப்பிட்டால் அஜீர்ணம், வயிற்று வலி, தலைச்சுற்றல் காய்ச்சல் ஆகியவைகள் நீங்கும்.

மகிழம்பூ: இதை தலையில் வைத்துக் கொள்வதால் கண் நோய், சிரோவாதம், தலைவலி முதலியன நீங்கும்.

தாழம்பூ: இதன் வாசனை காம இச்சையை உண்டாக்கியபோதும் வாத நோய்களைப் போக்கும்; இருதயத்திற்கு பலமளிக்கும்.

அரளிப்பூ; இப்பூவைத் தலையில் வைத்துக் கொள்வதால் தலை அரிப்பு, துர்நீர் ஆகியவை நீங்கும். பேன் அணுகாது. கூந்தலுக்கு உறுதி உண்டாகும். வெள்ளை அரளிப் பூவை உலர்த்தி பொடி செய்து அத்துடன் புகையிலைத் தூளையும் சேர்த்து, பாம்பு கடிக்குப் பயன்படுத்துகின்ருர்கள்.

முருங்கைப்பூ: இப்பூவை உலர்த்தி சூரணம் செய்து காலை மாலை இரண்டு வேளைகள் சாப்பிட்டு வந்தால், வாதம், பித்தம் ஆகியவைகள் நீங்குவதோடு, வியாதிக் கிருமிகளையும் கொன்றுவிடுகின்றது. இப்பூவைச் சூடாக்கி கண்களில் வைத்துக் கட்டினல் கண் எரிச்சல் நீங்கும்.

அகத்திப்பூ: இப் பூவைக் கூட்டு செய்து சாப்பிட்டால் வாதத்தை நீக்கிவிடும்; உடல் கனத்தைக் குறைக்கும்; வயிற்று வலியைப் போக்கும். தலைவலியைப் போக்கும்.

சித்தகத்திப் பூ: கருஞ்சித்தகத்திப் பூவை நல்லெண்ணெயுடன் சேர்த்து காய்ச்சி, எண்ணெய் ஸ்நானம் செய்தால் மேகம் சம்பந்தப் பட்ட வியாதிகள் நீங்கும்.

ஆவரம்பூ: இப்பூவை உலர்த்தி, வத்தலிட்டு வறுத்துச் சாப்பிட்டால் குளிர்ச்சியைக் கொடுக்கும். உலர்ந்த பூக்களை இடித்துப் பொடியாக்கி, தலையில் தேய்த்தால் சீக்கிரத்தில் நரை விழாது. இப்பூவுடன் கடுக்காய்த் தோல், தானிக்காய், நெல்லிமுள்ளி சீயக்காய் விதை இவைகளைச் சேர்த்து வறுத்துப் பொடியாக்கிச் சாப்பிட்டால் நீரிழிவு சம்பந்தமான வியாதிகள் நீங்கும்.

சம்பங்கி: இப் பூவை கஷாயம் வைத்துச் சாப்பிட்டால் உஷ்ணம் தணியும்; வயிற்றிலுள்ள வாயு நீங்கும்; இதில் தயாரித்த எண்ணெய் மேகரோகம் சம்பந்தப்பட்ட வலியை நீக்கும். ★

பரத நாட்டியக்கலை

செந்தில்நாத்



பரத நாட்டியம் புராதன இந்தியத் தமிழ்க் கலை. பிற நாட்டினரையும் கவர்ந்து, ஆசையூட்டி இந்தியக் கலைத்திறனுக்குத் தலைசிறந்த எடுத்துக் காட்டாக விளங்கும் மாபெரும் கலை. விஞ்ஞான, இயந்திர, அறிவு வளர்ச்சியிலே உலகில் உச்சநிலை எய்திவிட்ட மேதைகளைக்கூட நமது நடராஜர்சிலை ஒன்று எளிதில் கவர்கின்றது. இன்று குடும்பக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் பாடமாகக் கற்பிக்கப்படும் அளவிற்கு நாகரிக அம்சங்களில் ஒன்றாய் திகழும் இக்கலை; நாகரீகச் சூழலிலே அடிக்கடி பாதிக்கப்பட்டே வந்திருக்கிறது. இயற்கையின் நியதியே அதுதானே? நேற்று கர்நாடகமாகத் தோன்றியவை, இன்று நவ நாகரீகமாய் காட்சி யளித்து, நாளை நினைவாகி, பின் கனவாகிக் கற்பனையாகிக் கதையாகி காவியமாக மாறிவிடலாம்.

பரத முனிவர் சமஸ்கிருதத்திலே 'பரத சாஸ்திரம்' எழுதினார். நந்திகேஸ்வரர் 'அபிநய தர்ப்பண'த்தை விரிவாக எழுதினார். அர்ஜுனன் பேடி ரூபத்திலே தானும் ஆடி, மற்றவரையும் ஆட்டி வைத்ததை 'அர்ஜுன பரதம்' என்னும் நூல் கூறுகிறது. ஆண்டவனே இக்கலைக்கு இலக்கணம் வகுத்ததாக 'அகத்திய பரதம்' தனித்தமிழ் சூத்திரங்களாலே அறிவிக்கிறது. தேவலோக நடர்களின் சாப விமோசனகாரணார்த்தம், பூலோகத்தில் தோன்றிய மாபெரும் கலையை மாதவி ஆடினாள் என்பதை விளக்க 'சிலப்பதிகாரம்' இக்கலையைப்பற்றித் தெளிவான பல அம்சங்களை விளக்குகின்றது. தஞ்சை புத்தக நிலையமென்ன, சென்னை சர்வ கலாசாலைப் புத்தக நிலையமென்ன, கலாக்ஷேத்ரம் போன்ற தனிப்பட்ட ஸ்தாபனங்கள் என்ன—தங்கள் ஆராய்ச்சித் திறனுக்கேற்ப புரியாத புதிராகப்



சங்கு முத்திரை

பல நூல்களையும், நூல்கள் இருந்திருக்கலாம் என்ற பல தகவல்களையும் சேகரித்து வைத்திருக்கின்றன. கரையானரிக்காது, கள்வரால் கவர்ந்து செல்லப்படாது, அன்னியரின் படை எடுப்பிலே, சமயச் சண்டைகளிலே, பாஷை உரிமைச் சண்டையிலே, காலச்சுழலில் சிக்கி அழிந்தவை போக மிகுந்த இந்த கிடைத்தற்கரிய பொக்கிஷங்களான நூல்களின் மேன்மையை யாரும் மறுக்க முடியாது. இவற்றைச் சேகரித்துத் தொகுத்து வைத்துள்ள அறிவாளிகளின் தொண்டும் மெச்சத் தகுந்ததே. ஆனால் இப்படிச் சேகரித்து வைத்து விட்டு, நமது கலையின் பழம் பெருமைகளை மாத்திரம் சொல்லிக் கொண்டிருப்பதில் பலனில்லை; பாரதியார் சொன்னதுபோல், மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் பேசிப் பயனில்லை. க்ஷேமமுற வேண்டுமெனில் இக்கலையை, தேமதுரத் தமிழிலே நாடெல்லாம் பரப்புதல் வேண்டும். இக்கால மக்களின் மனப்போக்கை கவர்ச்சி செய்யுமளவு அழகிய எளிய நடையிலே தற்கால சூழ்நிலைக் கேற்ப, அந்த அரிய நூல்களின் அபூர்வ விஷயங்களை வெளியிடவேண்டும். பாமரர் முதல் பண்டிதர் வரை விரும்பிப் படிக்கத்தக்க முறையில் அமைய வேண்டும்.

சுத்தானந்த பாரதியார் 'சிலப்பதிகாரத்தை' மூலமாகக் கொண்டு 'சிலம்புச் செல்வம்' என்ற புத்தகத்தை பாமர மக்கள் இக்கலையை தெரிந்து கொள்ளும் அளவு சிரமப்பட்டு எழுதியிருக்கிறார். தவிர 'நவரஸ நடனாஞ்சலி' என்ற அவரது பாடல் தொகுப்பிலும் அந்த லட்சியத்தையே கையாண்டிருக்கிறார். ஈ. கிருஷ்ணய்யர் இந்திய நடனங்களின் வகைகளை வெகு அழகாகச் சேகரித்து கட்டுரைகள் எழுதியுள்ளார். ரஞ்சன் தனது 'நாட்டியம்' என்ற பத்திரிகை மூலம் இந்த லட்சியத்தை பூர்த்தி செய்ய நினைத்து பட்ட அரும்பாடு பாதியோடு தடைப்பட்டுப்போய் விட்டது.

எவ்வளவோ பிரயத்தனத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட மாபெரும் நூல்களும், பெரிய பெரிய எழுத்தாளர்களின் ஆராய்ச்சி பூர்வமான கட்டுரைகளும் இந்த பரதக்கலையளவில் 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்பதுபோல் ஆகிவிடுகிறது. பாரதியார் காதலைப் பற்றி, ''சொல்லித் தெரிவதில்லை மன்மதக்கலை'' என்றார். இந்தக் கலையின் விசேஷத்தன்மையும் சொல்வதாலோ, படிப்பதாலோ, பூர்த்தியடைந்து விடுவதில்லை. ''கற்க கசடறக் கற்பவை கற்ற, பின் நிற்க அதற்குத்தக'' என்ற நிலையில் படித்ததைக் கேட்டதைச் செயலளவில் ஆடி, அப்யசித்து, அனுபவித்துத்தான் பூர்ண பலிதம் அடையமுடியும். ஆகவே இக்கலை, புத்தகத்தளவோடு நிற்காமல் குரு சிஷ்யர்களிடையே நிலவும் குரு சிஷ்ய பாவத்தைப் பொருத்ததாக அமைகிறது.

குரு சிஷ்ய பாவம்

பண்டைக்காலத்தில் குருகுல வாசத்தின் மூலம் பயபக்தியுடன் சிஷ்யர்கள், பாடம் கேட்டு வந்தனர். தவிர எந்தப் பாடமுமே ஏட்டளவிலோ, எழுத்தளவிலோ நின்று விடவில்லை. மாணவர்களும் நல்ல மனப்பாடமாகவும், தெளிவாகவும் பாடம் பூர்த்தியடையுமளவு கற்று பின்பு சாகுமளவும் தனக்குக் கலை கற்பித்த குருவை தெய்வத்திற்கு சமமாக பாவித்து வந்தனர்.

சிலப்பதிகாரத்தில் ''ஆடல் ஆசிரியன்'' இருக்கவேண்டிய பண்புகளை இளங்கோவடிகள் எழுதியிருப்பதை நோக்குங்கால் ஆடலாசிரியர் சகல கலா பூஷணமாக இருந்திருக்க வேண்டும்; ஆசிரியர்களும் மாணவர்களைத் தங்கள் குழந்தைகள்போல பாவித்து வஞ்சனையின்றி பாடத்தைக் கற்பித்தனர். தனக்குத் தெரிந்த கலையை பிறருக்குப் போதிக்காதவர்கள் பெரும் பாவிகள் என்று கருதப்பட்டனர். பொருளைப் பற்றியோ சன்மானங்களைப் பற்றியோ இரு சாராருக்கும் கவலை இருந்ததில்லை.



சர்ப்ப முத்திரை

இடைக்காலத்திலே பொருள் ஆசை மேலீட்டிலே குருமார்கள் பாடங்களை எழுதிக் கொடுக்காது, விவரங்கள் என்ன, என்பதையும் கற்பிக்காது 'கோலெடுத்தால் குரங்கு ஆடும்' என்பதுபோல இயந்திரம்போல் குழந்தைகளை ஆட்டி வைத்தனர். சகல பிடிப்புக்களையும் தங்கள் வசம் வைத்துக் கொண்டு தங்கள் தட்டுக் கழியை (ஆட்டுவிக்கும் கோல்) செங்கோல் போல உபயோகித்தனர். இதை ஒட்டியே ''நட்டுவாங்கம் ராஜாங்கம்'' என்ற பழமொழி தோன்றியதுபோலும்.

மிருகி (மான்) முத்திரை

இந்நிலை மாறிப் பழையபக்தி சிரத்தையானதும், கலைண்யக் கலையுணர்ச்சியுடன் படிக்கும் தன்மையும் உண்டாகும் நாள் எந்நாளோ?

பரதக்கலை-ஆணுக்கா? பெண்ணிற்கா?

பரதக்கலை பெண்ணிற்கு மாத்திரம் சொந்தமல்ல. ஆடுவதே பெண்மை என்று கருதப்படும் பேதமை நமக்குள் ஒழிய வேண்டும். நவரஸ பாவங்களை ஆண்மகன் வெளியிட்டால் ஆண்மையின் அழகு பரிமளிக்கும். பெண் நடித்தால் பெண்மையின் பொலிவு விளங்கும். இரண்டும் சேர்ந்து இயங்குமே ஆயின் இயற்கையின் எழிலை நன்கு ரஸிக்க முடிகிறது. ஆனால் பெண்மையை ஆணோ, ஆண்மையை பெண்ணோ அப்யசிப்பதால்தான் இத்தகைய தப்பான அபிப்பிராயம் மக்களிடையே தோன்றக்கூடும் அப்படி அப்யசிப்பது மிகவும் கண்டிக்கத்தக்க, இயற்கைக்கே மாறான விஷயம். ஆடும் கலை பயில்வதனால் ஒரு ஆண்மகன் அலுக்கிக் குலுக்கி நடக்க வேண்டிய அவசியமுமில்லை. பெண் ஒருத்தி ஆடுவதால் பெண்மைக்கே உரிய அச்சம்,

மடம், நாணம், பயிர்ப்பு போன்ற நற்குணங்களை விடுத்து அங்கமெல்லாம் தெரிய ஆடி, கலைக்குப் பழிச்சொல் தேடித்தர முயல்வது கூடாது. ஆணில்லையேல் பெண் ஏது? பெண்ணில்லையேல் ஆண் ஏது? இயற்கை வாயிலாகத் தோன்றிய இக்கலை பொதுவான ஆன்மீக வளர்ச்சிக்காக ஏற்பட்டது. ஆகவே இக்கலை ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி வழங்காது. தவிர நடராஜர் சிலை என்று நினைக்கும் மாத்திரத்தில் ஆடல் ஆண்மகனின் கம்பீர அழகுத் திறனைக் காட்டவில்லையா? அதனால்தான் ஆண்களின் ஆடல் வகைக்கு 'தாண்டவம்' என்றும், பெண்களின் ஆடல் வகைக்கு 'லாஸ்யம்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆடலாசிரியர்கள் இதுவரையில் ஆண்களாகவே தான் பெரும்பான்மையும் இருந்து வந்திருக்கின்றனர்.

பரதக்கலையும் - இயற்கையும்

பஞ்சபூதங்களின் சேர்க்கையினாலான இயற்கையைத் தன்னுள்ளடக்கிய ஸ்வரூபம் தான் ஒரு பாதம் ஊன்றி, ஒரு பாதம் தூக்கிய நடராஜரின் ஆனந்த நடனநிலை. மனித வர்க்கத்தின் அஹங்காரத்தை முயலகன் என்னும் ராட்சசனாக உருவகப்படுத்தி, அவனை ஊன்றிய பாதத்திலே மிதித்து தூக்கிய திருவடியில் துணை நல்கி, உமருகத்திலே சிருஷ்டித்து, அபயகரத்தால் காத்து, மழுவால் அழித்து இயற்கையின் மாயத்தை உணர்த்தும் நிலையில் சாம்பலைப் பூசி, தானும் ஆடிப்பிறரையும் ஆட்டுவிக்கும் மோன நிலையைக் குறித்துத் தான் ராமலிங்க சுவாமிகள், ''அம்பலத்தே ஆடுகின்றார் வெண்ணிலாவே, என்னை ஆட்டுகின்றார் இப்பரத்தே வெண்ணிலாவே'' என்று பாடியிருக்கிறார்.

ஆஸ்திகச் சமய சித்தாந்தக் கொள்கையிலே இந்த நடன நிலை பற்றியும், கலை பிறந்ததைப் பற்றியும் அநேக கதைகளிருக்கின்றன. தத்துவஞானிகளின் கொள்கைப்படி இயற்கைதான் கடவுள் என்ற நம்பிக்கைக்கு தகுந்த முறையிலே இயற்கையின் சகல அம்சங்களையும் தன்னுள்ளடக்கியிருக்கிறது. விஞ்ஞானியின் கொள்கைக்கேற்ப மனித சரீரத்தின் சேர்க்கையே பஞ்சபூதங்கள் தானே ?

இத்தகைய ஆஸ்திக நாஸ்திக வாதங்களை நீக்கி ''எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்பதற்கிணங்க பகுத்தறிவு மூலம் நோக்குகையில் மனிதவர்க்கம் பேசும் திறனடையுமுன் ஒருவருக்கொருவர் சமிக்ஞைகளின் மூலம் தான் தமது கருத்துக்களை விளக்கினர் என்பதும் அவர்கள் சந்தோஷ உணர்ச்சியில் குதித்து ஆடிய ஆடல்கள், பின்பு மனித நாகரிகம் முன்னேறி, பின்பு பரத முனிவர் போன்ற அறிவாளிகளால் இயற்கையை ஒட்டி வழக்கில் இருந்து வரும் சமிக்ஞைகளை முத்திரைகளாகவும், அழகு நிலைகளை அடைவுகளாகவும் நவரஸ பாவங்களை சாகித்யங்கள் மூலமும், ஒரு ஒழுங்கான கட்டுப்பாட்டுக்குள் அடக்கி பாவ, ராக, தாளங்களை அடக்கிய, இந்த பரதக்கலையை உண்டாக்கினர் போலும். இன்றும் வழக்கிலே இருந்து வரும் பல அழகிய நடன நிலைகளும், முத்திரைகளும் அன்றாட வாழ்க்கை நடைமுறையிலிருந்து வரும் இயற்கை ஸ்வபாவத்தை ஒட்டியே இருப்பதை உணர்கிறோம். ஆகவே இக்கலை இயற்கையையே பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடி.

பரத நாட்டியமும் இதர சில இந்திய நடனங்களும்

'தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு' என்பதுபோல ஒவ்வொரு தேசத்தின் சூழ்நிலைக்கும் கலைத் திறனுக்கும் ஏற்பவே அவர்களது ஆடல்கலையும் இருந்து வருகின்றது. வட நாட்டிலே 'கதக்' நடன வகையில் காலடிகளுக்கு முக்யத்துவம் கொடுத்து நிறையச் சுற்றி சுற்றி ஆடுவர். இவை ஏதோ சிறிய கதையைத் தழுவியும் இருக்கின்றன. அஸ்ஸாம் மாகாணத்தை சேர்ந்த ''மணிபுரி' நடனங்கள் கூடைப் பாவாடை போன்ற பிரத்யேக உடைச்சிறப்புடன் குறிப்பான ஜதிசேர்க்கையுடன்

ஆடிவரும் 'லாஸ்ய' வகையைச் சேர்ந்தது. மேற்குப் பாகத்திலே குஜராத்தி ஜாதியினர். 'காபா' என்ற கும்பலாக ஆடிவரும் பஜனை போன்ற நடனங்கள் ஆடிவருகின்றனர். 'குச்சுபிடி' என்ற தெருக் கூத்து வகை ஆந்திர நாட்டில் இருந்து வருகின்றது. மலையாளப் பகுதியிலே 'ஆட்டகதா'' என்ற வகை நடனங்களும், தஞ்சையில் பாகவத மேளமும் இருந்தன. நாடோடி நடன முறையிலே கரகம், ஒயில், கும்மி போன்றவற்றை தமிழ் நாட்டிலே இன்றும் காண்கிறோம் 'பொய்க்கால் குதிரை' ஆட்டத்தை தஞ்சைக்குப் பக்கத்திலே நிறையக் காண்கிறோம்.

இவ்வளவு ஆட்ட வகைகளிலும் நமது பரத நாட்டியமும் மலையாள தேசத்தைச் சேர்ந்த கதகளி நடனமும் மாத்திரம்தான் சிறந்து புகழப்படுவதன் காரணம் இவற்றின் அபிநயச் சிறப்பும் சாஸ்த்ரோக்தமான முத்திரைகளும் கர்நாடக சங்கீத அஸ்திவாரமுமே ஆகும். அதிலும் கதகளியில்கூட அபிநயம் சற்று மிகைப்படுத்தப்பட்டும் சற்று கடினமும் முரட்டு நடைகளுமிருப்பதால் இதைவிட பரத நாட்டியம் தனது லாவகமான அபிநயச் சிறப்பிலே தனக்கு நிகரில்லை என்று புகழுடைந்திருக்கின்றது.

பெயர்க் காரணமும்-இதன் முக்கிய அங்கங்களும்

பரதமுனிவரால் வகுக்கப்பட்ட கலையாதலால் பரதக்கலை என்பர் சிலர். சகுந்தலை மகன் பரதன் அரசாண்ட பரத கண்டத்தின் கலையாதலால் 'பரதம்' என்ற பெயர் வழங்கியதாகவும் சிலர் கொள்கின்றனர். பாவ, ராக, தாளங்களின் சேர்க்கையான கலையாதலால் இவற்றின் முதலெழுத்துக்களைச் சேர்த்து இப்பெயர் வழங்கியதாகவும் சொல்வர்.

இக்காலத்திய விளம்பரங்களிலே 'பரதநாட்டியமும் அபிநயமும்' எனக் காண்கிறோம் அபிநயமில்லாது பரத நாட்டியமே இல்லை. இவர்கள் குறிப்பிடும் அபிநயமில்லாத ஆட்டப் பகுதிக்கு 'நிருத்யம்' என்று பெயர். இன்றைய வழக்கிலே, நிகழ்ச்சி நிரல்களிலே இடம் பெறுபவை—அலாரிப்பு, ஜதிஸ்வரம், ஸப்தம், வர்ணம், தில்லானா, விருத்தம், சில பதங்கள், மகுடி முதலியன. அதுவும் மகுடி, மணிப்புரியைத் தழுவியும் சிலர் ஆடுகின்றனர். சில கதம்ப நிகழ்ச்சிகளையும் காண்கிறோம். பாலட் என்று சொல்லக்கூடிய நாட்டிய நாடகங்களையும் கண்டு வருகிறோம்.

பழையகால நிகழ்ச்சிகளிலே அலாரிப்பு, ஜதிஸ்வரம், ஸப்தம், வர்ணம், தில்லானா, பதங்கள் (சேஷத்ரஞ்ய பதங்கள்) விருத்தம் ஸ்லோகங்கள் (கிருஷ்ண. ராம கர்ணாமிர்த ஸ்லோகங்கள்) பத்யங்கள், ஜாவளிகள், மகுடி எடுத்தல் அதாவது பின்புறமாக வளைந்து கண் இமைமூலம் ஆசி, பவுன் முதலியவற்றை எடுத்துப் பரிசுகளைப் பெற்றனர். இவைகள் அன்றி தேவாரம், திருப்புகழ்போன்ற பக்திப்பாக்களும் இடம் பெற்றன.

இவை தவிர சித்ர நாட்டியத்தில் சிலர் சிறந்து விளங்கினர். அதாவது சிறு மணல் பரப்பி, அதன்மேல் அகலமானதொரு வஸ்திரத்தை நான்கு மூலைகளிலும் முளையடித்து அதன்மேல் நின்று சிம்ம நந்தனம் அல்லது ஹம்ச நந்தனம் போன்ற நடனங்களை முறையே ஏற்பட்ட ஜதிகளைப்பாடி ஆடினர். அந்த ஜதியின் தாளமே பல தாள வகைகளைச் சேர்ந்து 128 அக்ஷர காலத்தில் முடிவதாக மிகவும் திறமை வாய்ந்தவர்கள் செய்தனர். ஆடி முடிந்த பின்னர் வஸ்திரத்தை எடுத்தால் மணலிலே சிம்மமோ, ஹம்ஸமோ (அன்னம்) போன்ற சித்திரங்களோ காணப்பட்டன. இது தவிர எண்ணை தடவிய வாழைக் குருத்தின் மேல் கவிழ்த்திய பச்சைப் பானைமேல் நின்று ஆடினர். பட்டாக்கத்திகளை கீழேவைத்து நாட்டியங்கள் ஆடினர். அகன்ற தட்டங்களிலே தண்ணீரை ஊற்றி வைத்து அதற்குள்ளிருக்கும் தண்ணீர் வெளியில்

அச்சிடப்பட்ட நாட்டிய நூல்கள்

நூலின் பெயர்	ஆசிரியர்	மொழி
நாட்டிய சாஸ்திரம்	பரதர்	ஸம்ஸ்கிருதம்
பிருஹத்தேசி	மதங்கர்	...
அபிநய தர்ப்பணம்	நந்திகேசுவரர்	...
அபிநய பாரதி	அபிநவகுப்தர்	...
சங்கீத ரத்னாகரம்	ஸாரங்க தேவர்	...
சங்கீத ஸாராம்ருதம்	துளஜா மஹாராஜா	...
சங்கீத ஸமயஸாரம்	பார்ச்வதேவர்	...
சிலப்பதிகாரம்	இளங்கோவடிகள்	தமிழ்
சிலப்பதிகார உரை	அடியார்க்குநல்லார்	தமிழ்

அச்சில் ஏறாத சுவடி நூல்கள்

பரதார்ணவம் (நந்திபரதம்)	நந்திகேசுவரர்	ஸம்ஸ்கிருதம்
பாதார்ணப ஸங்கிரஹம்	...	...
அர்ஜுன பரதம்	அர்ஜுனன்	...
சிருங்கார ப்ரகாசம்	பல்லாடா	...
நிருத்த ரத்னாவளி	ஜயஸேனாபதி	ஸம்ஸ்கிருதம்
மதங்கபரதம்	லக்ஷ்மணர்	...
சங்கீத தர்ப்பணம்	தாமோதரர்	...
சங்கீத முக்தாவளி I	தேவேந்திரசாரியர்	...
... ... II	...	...
சங்கீத மகரந்தம்	வேதஸூரி	...
ஆதிபரதம்	...	வடமொழி, தெலுங்கு
சுத்தானந்த ப்ரகாசம்	...	தமிழ்
கூத்து நூல்	...	தமிழ்

சாண்டில்யம், பஞ்சபரதம், குணநூல், இந்திரகாளீயம், நாடகத் தமிழ் நூல், தவிர, அகத்தியம் போன்ற நாடக நூல்கள் கிடைத்தற்கரியனவாகி விட்டன.

சிதறாமல் ஆடினர். ஒரு குறிப்பிட்ட ஜதி ஆடுவதற்குள் கைகளாலே துணியைக் கொண்டு புருக்களைச் செய்துகொண்டே ஆடினர். வெள்ளை அல்லது கறுப்பு சல்லா உடைகளை ஆடும்போது அணிந்து ஆடிவந்தனர்.

ஆடும்போது நல்ல வியர்வை வடிகிறது. உடலின் கழிவுப் பொருள்கள் நீங்க வியர்வை நல்ல சாதனம்; இடைவிடாது இக்கலையின் அப்யாசம் நல்ல தேகப் பயிற்சியாகிறது. மனச் சோம்பல் முதலியன நீங்கப் பெற்று நல்ல ஆரோக்ய ஆனந்த நிலை ஏற்படுகிறது. இந்த முறையில் ஆரோக்யமாக இருக்கும். சரீரம் அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கும்.

கலைஞர்களுக்கு பெரும் அறிவாளிகளிடம் (Intellectual Heroes) நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்படுகிறது. இக்கலைக்கே இன்றியமையாத சங்கீத ஞானம், பல திறப்பட்ட சங்கீத வாத்யக் கருவிகளைப் பற்றிய ஞானம், அழகுக்கலை, சபா லக்ஷணங்கள், மின்சார சாதனங்களைப் பற்றியும் அநேகம் அறியவேண்டி வருகிறது. இவ்வளவு தெரிய வரும் பொழுது அறிவு வளர்ச்சி ஏற்படாமல் ஞான சூன்யமாகவா இருப்பான் கலைஞன் ?

ஆகவே இந்த பாரத நாட்டைப் பெருமைப் படுத்தப் பிறந்திட்ட இந்த அமரக்கலை, தேக ஆரோக்யமும், மனோவலியும், அறிவு வளர்ச்சியும் அளிக்கக் கூடிய சிறந்த சாதனமாக அமைகிறது. இதை உணர்ந்துதானோ என்னவோ தீர்க தரிசியான மகாகவி பாரதி, "பாட்டும் செய்யுளும் கோர்த்திடுவீரே ! பரத நாட்டியக் கூத்திடுவீரே !!" என்று எழுதினார் போலும். ★

ஜாதகம் பிறந்த கதை

ஸி. ராஜப்பா

'வான மண்டலத்தில் இருக்கும் கிரஹங்களின் சஞ்சாரத்தால், பிரபஞ்சத்தில் வாழும் மனிதனின்வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள் உண்டாகின்றன' என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டதே ஜோதிஷ சாஸ்திரம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தன் எதிர்காலத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளும் ஆவல் இருப்பது சகஜம். ஆகவே, கிரஹங்களின் சஞ்சாரம் ஒவ்வொரு மனிதனையும் எவ்விதம் பாதிக்கிறது என்பதைக் கண்டறிய வேண்டிய அவசியம் ஏற்படுகிறதல்லவா? இதன் காரணமாகத் தோன்றியதே 'ஜாதகம்.'

'ஜாதகம்' என்ற பதத்தை ஆங்கிலத்தில் 'ஹாரஸ்கோப்' என்றழைக்கின்றனர். ஆனால் இச்சொல் கிரேக்க மொழியைச் சேர்ந்தது. 'ஒரு குறிப்பிட்ட நேரத்தைக் கொண்டு, நிகழவிருக்கும் சம்பவங்களைக் கூடியமட்டும் சரியாகக் கணக்கிட்டு அறிந்துகொள்ளுதல்' என்பதே 'ஹாரஸ்கோப்' என்னும் கிரேக்கச் சொல்லின் பொருள். ஜாதகம் உலகில் எப்போது பிறந்தது? எந்த நாட்டினர் முதன் முதலில் இதைக்கண்டு பிடித்து பலனடைந்தனர்?

காற்றைவிடக் கடுகி ஓடும் காலச்சக்கரம் மூவாயிரம் ஆண்டுகள் பின்னோக்கிச் சுழன்றால்...! இன்றைய எகிப்து அல்லது மெஸபடோமியா நீர்நிறைந்த பரந்த பள்ளத்தாக்காக இருந்தது. மலைகளோ, குன்றுகளோ காணப்படவில்லை. அடிவானத்தை தெளிவாகக் காண முடிந்தது. ஆகவே, அக்கால மக்கள் வானவெளியை ஆராய்வதில் முனைந்தனர்.

வான வெளியில் பகலில் சூரியனைக் கண்டனர்; இரவில் சந்திரனைக் கண்டனர். ஆனால் சந்திரனைச் சில இரவுகளில் அவர்களால் காணமுடியவில்லை. சூரிய, சந்திரனைத்தவிர, வான வெளியில் அவர்கள் நட்சத்திரங்களைக் கண்டனர். இருள் சூழ்ந்த வானில் மின்னும் இந்தச் சுடர்களை வியப்புடன் கவனித்து வந்த மக்கள், அவைகள் அடிக்கடி இடம்பெயர்வதைக் கண்டு வியந்தனர். குறிப்பாக ஐந்து பெரும் நட்சத்திரங்கள் இடம் பெயர்வதை அவர்களால் கவனித்துவர முடிந்தது. அக்கால மக்கள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைத் தெய்வமாக வணங்கி வந்தனர்.

விஞ்ஞானம் இன்னதென்றறியப் படாத அக்கால மக்களும் தங்கள் ஆராயும் திறனைக்கொண்டு சில உண்மைகளைக் கண்டறிந்தனர். ஜுபிடர் (வியாழன்) என்னும் கிரஹமும், ஸாடர்ன் (சனி) என்னும் கிரஹமும் மெதுவாக நகரக்கூடியவை; இவை ஒன்றையொன்று முப்பது ஆண்டுகளுக்கு

மனிதனின் எதிர்காலத்தைக் கண்டறிய உதவும் 'தூரதரிசினி'யான ஜாதகம் எப்போது உலகில் பிறந்தது...? கட்டுரையைப் படியுங்கள்.

ஒரு முறை சந்தித்து வருகின்றன என்ற உண்மையைக் கண்டனர் அவர்கள். ஆகவே அந்த கிரஹங்களின்சந்திப்பை சிறப்புறச்செய்ய வேண்டி அந்த தினத்தை விழாவாகக் கொண்டாடினர் அக்கால மெஸபடோமியர்.

கிரஹங்களைத் தெய்வமாக வணங்கிவரும் இவர்கள், இந்த இரு கிரஹங்களின் சந்திப்பை தெய்வ வழிபாடாகக் கொண்டனர். அவைகளின் கருணையால் நாங்கள் வாழும் பூமிக்கு சகல சௌக்கியங்களும் உண்டாக வேண்டும் என்பதே அவர்கள் பிரார்த்தனை. அவர்கள் பிரார்த்தனையின் விளைவாக நடந்த சம்பவங்களால், அவர்களுக்கு பலத்த நம்பிக்கையும் வளரலாயிற்று, இந்த ஐந்து கிரஹங்களின் சஞ்சாரம், பொதுவாக பிரபஞ்சத்தில், பயிர் பச்சை வளரவும், கொடிய நோய்கள் தோன்றி மறையவும், போர், அரசியல் மாற்றங்களுண்டாகவும் காரணமாகின்றன என்று ஊகித்தறிந்தனர். இவ்வாறு பொதுப்படையாக இந்த கிரஹங்களின் பலனைக் கண்டறிந்த ஜனங்கள், இவை தனி மனிதனை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆராய்வதில் மிகுந்த அக்கறை காட்டினர். ஆவல் கொண்டனர். இத்தகைய இடைவிடாத ஆராய்ச்சியின் பயனாகவே உலகில் ஜாதகம் பிறந்தது! ஜாதகத்தை உலகில் தோற்றுவித்தவர்கள் மெஸபடோமியா வாசிகள் தான். அதன் பின்பே கீழ்நாடுகளிலும், மேலை நாடுகள் பலவற்றிலும் ஜாதகம் கணிக்கும் முறை பரவலாயிற்று.

தற்போது உலகெங்கும் ஜாதகம் கணிக்கும் முறை பரவியிருந்த போதிலும் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் கையாளப்பட்டு வரும் முறைகளுக்கும் ஆசிய நாடுகளில் ஜாதகம் கணிக்கப்படும் முறைக்கும் ஏராளமான வித்தியாசங்கள் இருந்து வருகின்றன.

இந்திய ஜோதிட நிபுணர்கள் ஜாதகம் கணிப்பதை மிகவும் சிரமசாத்தியமானதென்று கூறிவருகின்றனர். ஆனால் ஐரோப்பிய நாடுகளில், தூரதரிசினியின் உதவியால் வானவெளியில் கிரஹங்களின் நிலையைக் கண்டறிந்து, அதிக பட்சம் ஐந்து நிமிடங்களில் ஒரு மனிதனின் ஜாதகத்தைக் கணித்து வருகின்றனர். மேலும் மிகவும் நுட்பமாக ஆராய்ந்தே அவர்கள் ஜாதகம் கணிக்கின்றனர். ஒரு கிரஹத்துக்கும் மற்றொரு கிரஹத்துக்கும் உள்ள தூரம் என்ன, என்பது முதற்கொண்டு கணக்கிடப்படுகிறது. ஆனால் இந்தியர். இவ்வளவு நுட்பமாக இவற்றைக் கணக்கிடுவதில்லை.

இந்தியரும், சீனரும் ஜாதகம் கணிப்பதில் ஒரே முறையைப் பின்பற்றி வருகிறார்கள். அதாவது சந்திரனின் நிலையை கேந்திரமாகக் கொண்டு, மற்ற கிரஹங்களின் ஸ்தானம், சஞ்சாரம் இவற்றை கணக்கிடுகின்றனர். சந்திரன் சஞ்சரிக்கும் பாதையை இருபத்தி ஏழு பகுதிகளாகப் பிரித்திருக்கின்றனர் இந்திய ஜோதிட நிபுணர்கள். அவற்றிற்கு 'லூனர் மான்ஷன்ஸ்' என்று பெயர். அதாவது அஸ்வினி முதல் ரேவதி வரை இருபத்தி ஏழு நட்சத்திரங்களின் பெயர்கள் அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன.

உதாரணமாக 'கிருத்திகா' நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சிறந்த வானசாஸ்திரியாக விளங்குவர் என்பதாகக் கருதப்படுகிறது.

கிரஹங்களின் தோற்றம்

இப்போதுள்ள சூரியமண்டலம் முழுவதும் கற்பனைக்கும் எட்டாத வெகுகாலத்திற்கு முன்னர் வாயு நிலையில் இருந்தது. வெப்பம் சிறிது சிறிதாக ஆகாய வெளியில் சென்றுவிடவே வாயு குளிரத் தொடங்கியது. இதன் விளைவாக வாயு மண்டலத்தின் சுழற்சி விரைவு அதிகமாகி, வாயு வட்டங்களை அது உமிழ்ந்தது. அவையே இறுகிக் கிரஹங்களாக மாறின. — காண்ட்

'பரணியில் பிறந்தவர்கள் தரணியாளுவார்கள்' என்பதும் 'அவிட்டத்தில் பிறந்தவர்களுக்கு தவிட்டுப் பானையிலும் தனம்' என்பதும் ஜோதிட சாஸ்திர சம்பந்தமான பழமொழிகள். ரோஹிணி நட்சத்திரத்தில் பிறந்த நந்தபாலன், தன் மாமன் கம்ஸனைக் கொன்றதால், 'ரோஹிணியில் பிறந்த குழந்தை தாய் மாமனுக்கு சத்துரு' என்ற நம்பிக்கை நம்மிடையே இருந்து வருகிறது.

ஜாதகம் கணிக்க சந்திரன், சூரியன் செல்லும் பாதையைக் குறிப்பாகக் கொண்டே கணக்கிடுகின்றனர். ஏனெனில் மற்ற கிரஹங்களும் அதே பாதையில் சஞ்சரித்து வருகின்றன. இவ்வாறு சந்திரன், சூரியன், மற்ற கிரஹங்கள் செல்லும் பாதையை ''ஜோடியாக்' என்ற பெயரில் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கின்றனர். இவைகள் 'ராசிகள்' என்றழைக்கப்படுகின்றன.

அவை முறையே மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்யா, துலா, விருச்சிகம், தனுர், மகரம், கும்பம், மீனம் என்பவையாகும். இவற்றை ஆங்கிலத்தில் கேப்ரிகார்ன், அக்வாரிஸ், பிஸிஸ், ஏரிஸ், டாவ்ரஸ், ஜெமினி, கான்ஸர், லியோ, விர்கோ, லிப்ரா, ஸ்கார்ப்பியோ, ஸாகிடரியஸ் என்றழைக்கப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறித்துக் கொண்ட பின்பே ஜாதகம் கணிக்க முடியும் என்பதை மெஸபடோமியர் கண்டுபிடித்தனர், அதனால்தான் குழந்தை பிறந்தவுடன், சற்றும் தாமதியாமல் சரியான மணி, அப்போதுள்ள முக்கிய கிரஹங்களின் சஞ்சாரம் இவற்றைக் குறித்து வைத்தல் வழக்கமாயிற்று. இக்குறிப்பில் சில தவறுகள் ஏற்பட்ட போதிலும் ஜாதகம் கணிக்கப்பட்டு, பலன்கள் கூறப்படும் போது வித்தியாசம் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பமிருக்கிறது. இத்தகைய தவறான குறிப்புகளால் ஜோதிடத்தில் நம்பிக்கை இழக்கவும் நேரிடுகிறது.

> **சூரியனைச்சுற்றும் கிரஹங்கள்**
>
> சூரியனைச்சுற்றி புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், சிறு கோளத்திரள்கள், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், ப்ளூடோ முதலிய கிரஹங்கள் சுற்றிவருகின்றன.

சரியான குறிப்புகள் தயாரிக்கப்படாமல், பொதுவாக ஜாதகம் கணிக்கும் போது பொதுப் பலன் தான் கூற முடியும். அதாவது சிம்ம ராசியில் பிறந்தவர்களுக்கு சிம்மத்தைப் போன்ற மனவுறுதியும், யாருக்கும் கீழ்ப்படியாத் தன்மையும் இருக்கும் என்ற பொதுத் தத்துவத்தைக் கொண்டு, ஒரு குழந்தை சிம்மராசியில் பிறந்தது என்றால் அதற்கு இத்தகைய தன்மைகள் உண்டு என்று பொதுவாகக் கூறலாம். ஆனால் இதைப் பொருத்தமென்று சொல்வதற்கியலாது. பன்னிரண்டு ராசிகளாகப் பிரிந்துள்ள 'ஜோடியாக்' முறையில் ஒவ்வொரு ராசிக்கும் 2 நட்சத்திரங்கள் எனப் பிரித்து மொத்தம் 27 நட்சத்திரங்களைப் பங்கிட்டிருக்கின்றனர்.

உதாரணமாக மேஷ ராசி என்றால் அஸ்வினி, பரணி, கார்த்திகையில் 1/4 பாகம் என்று பிரித்திருக்கின்றனர். தவிர, ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் முதல் பாதம், இரண்டாம் பாதம், மூன்றாம் பாதம், நான்காம் பாதம் என்ற பிரிவினைகள் உண்டு. ஆகவே கார்த்திகையில் 1/4 பாகம் என்பது, கார்த்திகை நட்சத்திரத்தின் முதல் பாதமாகும். ஒரு நாளுக்கு ஒரு நட்சத்திரம் என்ற கணக்குப்படி 24 மணி நேரத்தை நான்கு பாகமாக்கி பாதங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. ராசிகள் மூலம் பலன் அறியும் முறை இது.

நவக்கிரஹங்களான, சூரியன், சந்திரன், ராகு, கேது, செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி தவிர நெப்டியூன், புளூட்டோ, யூரேனஸ் போன்ற கிரஹங்களை

யும் வளரும் விஞ்ஞானம் கண்டு பிடித்து, பலன்களை ஆராய்ந்து வருகின்றது.

பன்னிரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ராசிகளை 'வீடுகள்' என்றும் ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. மேற்குறிப்பிட்ட ஒன்பது கிரஹங்கள் இத்தகைய பன்னிரண்டு வீடுகளில் சஞ்சரிக்கும் போது பலன்களும் அதற்கேற்றவாறு கூறப்படும்.

நல்லவர் நேசத்தால் தீயவனும் நல்லவனுகிருன். தீய குணம் மிகுந்தவன், வலிவற்ற நல்ல குணம் வாய்ந்தவனை அடக்கி தன் சக்தியை நிலை நாட்டுவது இயற்கையல்லவா? இதே தன்மை இந்த கிரஹங்களுக்கும் உண்டு. கெடுதலை விளைவிக்கும் கிரஹத்துடன் வலிமை வாய்ந்த நன்மைபயக்கும் கிரஹம்கூடி ஒரே வீட்டிலிருந்தால் கெடுதல் அதிகம் விளையாமல் தடுக்கும் சக்தி அதற்கு உண்டு. ஆனல் நன்மைதரும் கிரஹம், பலஹீன மடைந்ததாக இருந்து தீமை தரும் கிரஹம் வலிவுற்றிருந்தால் தீமைகளே அதிகம் விளையும். கிரஹங்களின் இயற்கைத் தன்மை இது.

அஷ்டமத்தில் (எட்டாம் இடத்தில்) சனி என்ருல் அந்த ஜாதகன் மிகவும் சிரம தசையிலிருப்பான் என்று பொருள். சுக்கிரனின் பார்வை மிகுந்திருந்தால் செல்வத்தில் புரளுவான் என்ற நம்பிக்கை. வியாழ நோக்கம் வந்துவிட்டதென்ருல் விவாகம் செய்து கொள்ளும் நேரம் நெருங்கிவிட்டதென்று கருதப்படுகிறது.

கிரேக்கர்கள் ஜுபிடர், மார்ஸ், வீனஸ், மெர்க்குரி, நெப்டியூன், ஆகிய கிரஹங்களை தெய்வமாக வணங்கி வந்தனர். ஜுபிடர் கிரஹம் சமாதானப் பிரியன்; மார்ஸ் யுத்தக் கடவுள்; வீனஸ் அழகுத் தெய்வம்; நெப்டியூன் கடலரசன்; மெர்க்குரி தேகாரோக்யத்தை யளிக்கும் தெய்வம் என்பதாக எண்ணியிருந்தனர் அவர்கள். ஆகவே ஜாதகம் கணிக்கும் போது இந்த கிரஹங்களின் சஞ்சாரத்திற்கு பிரதான மளித்துப் பலன்களை ஆராய்ந்தனர்.

சித்தார்த்தன் பிறந்தவுடன் அவனது ஜாதகத்தை ஆராய்ந்த யோகிகள் அவன் 'உலகத்தை உய்விக்கும் உத்தமனுக விளங்குவான்' என்று கூறினர். காரணம் அவன் ஜாதகத்திலுள்ள முக்கிய கிரஹங்கள் யாவும் இரக்கம், துறவித்தன்மை, சாந்தம் இவற்றைக் கொடுக்கும் தன்மை பொருந்தியவையாக இருந்ததுதான்.

மேல் நாடுகளில் ஜுபிடர் கிரஹம் அதிர்ஷ்டம் நிறைந்ததெனவும், ஒருவரின் ஜாதகத்தில் இந்த கிரஹம் சஞ்சரித்து வரும் போது மிகச்சிறந்த பலனை அளிக்கும் என்பதாகவும் நம்பப்படுகிறது. ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் பிறந்த தினம் ஜுபிடர், நெப்டியூன், சந்திரன் மூன்றும் சேர்ந்து ஒரு ராசியிலிருக்கும்போதென்று குறிப்பிடப்பட்டது. ஏழாம் எட்வர்டு மன்னர் ஜுபிடர், சனி, செவ்வாய் மூன்றும் கூடியிருந்தபோது, என்றும் விக்டோரியா மஹாராணி சூரியன், சந்திரன், ஜுபிடர் கூடியிருந்தபோது பிறந்தாரென்னும் குறிப்பிடப்பட்டது. பொதுவாக அவர்கள் ஆட்சிக்காலம் மிகச் சிறந்ததாகவே இருந்து வந்தது. பெரும் போர்கள் நிகழ்ந்த போதிலும் வெற்றி தேவதை அவர்களையே தொடர்ந்து வந்து கொண்டிருந்தாள்.

அடுத்தாற்போல் உலகத்தையே கலக்கிய ஜெர்மானியத் தலைவன் ஹிட்லரின் ஜாதகத்தில் காணப்படும் குறிப்புகளைக் கவனிப்போம். மெர்க்குரி, யுரேனஸ், சனி மூன்றும் சேர்ந்திருந்த போது பிறந்தான் ஹிட்லர் என்று அவனது ஜாதகம் கணிக்கப்பட்டது. மெர்க்குரியினுல் சிறந்த பேச்சுவன்மையும். யுரேனஸ் கிரஹத்தால் திடீர் யோசனைகளும், அவசரத்திட்டங்களும், தோன்றுவதுடன், சனியின் தன்மையில் இவையாவும் இறுதியில் பயனற்று வீழ்ச்சியடையும்படி முடிவடைந்தன. ஹிட்லரின் பேச்சுவன்மை அவனுக்கு ஜெர்மானிய மக்களின் ஆதரவை அளித்தது. திடீர் யோசனைகள், அவசரத்திட்டங்கள் அவனை உயர் பதவிக்குக் கொண்டுவந்தன. ஆனல்

சனியின் கொடூரத்தன்மை அவனை இறுதியில் தோல்வியடையச் செய்து, இருக்குமிடம் தெரியாமல் மறைத்து விட்டது.

ஆகவே குறிப்பிட்ட நபரின் ஜாதகம், அவர் பிறந்த நேரத்திலுள்ள கிரஹங்களின் நிலை, சஞ்சாரம் இவற்றையே பெரும்பாலும் பொருத்திருக்கிறது.

'ஜாதக விசேஷம்' என்று ஜோஸியர்கள் குறிப்பிடுவதாவது, குறிப்பிட்ட நபரின் ஜாதகத்திலுள்ள கிரஹங்களின் நிலையும், அவை அளிக்கவிருக்கும் பலன்களுமேயாகும்.

வராஹமிஹிரர் என்னும் வான சாஸ்திரி சந்திரகுப்த விக்ரமாதித்தன் காலத்தில் வாழ்ந்த நவரத்னங்களில் ஒருவர். அவரது ஜோதிடக் குறிப்புகள் இன்றும் தனிச் சிறப்பு வாய்ந்தவை.

விவாஹங்களை நடத்துமுன் இந்துக்களிடையே ஜாதக பரிசீலனை நடத்தப்படுவதன் நோக்கம் திருமணத் தம்பதிகளின் வாழ்க்கை சுபிட்சமாக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையில்தான். பலன்களை ஆராய்ந்து கூறும் தன்மை ஜோதிடத்தில் ஒருவருக்குள்ள திறமையைப் பொருத்தே அமைந்திருக்கிறது.

தவிரவும் நவக்கிரஹங்களில் சூரியன் உயிர், உத்யோகம், தன்னம்பிக்கை இவைகளைத் தருவதாகும். மேஷத்தில் சூரியன் இருந்தால் நல்ல திடநம்பிக்கையையும், தைரியத்தையும் நீண்ட ஆயுளையும் தருகிறது. சந்திரன் உடல்பலம், சாந்தி, புகழ், கவிதை முதலியவைகளைத் தருகிறது. சந்திரன் கடகத்தில் குருவுடன் கூடிய ஜாதகங்களில் சிறந்த பலன்கள் ஏற்படுகின்றன. செவ்வாய் மகரத்தில் உச்சமாக இருந்தாலும், மேஷத்தில் ஆட்சி பெற்று குருவோடு கூடியிருந்தாலும் 11-ம் இடமானாலும் 10 லும் சிறந்த உத்தியோகம், சேனையில் திறமை, வைத்தியத்தில் புகழ் முதலியவைகளைத் தருகிறது. நில புலன்கள் செவ்வாயின் காரணமாகவே உண்டாகின்றன. ராகு 10ல், 6ல், 11ல் உள்ளபொழுது பாட்டனார் சொத்து, புகழ், உயர் பதவி முதலியவைகளைத் தருகிறது. குருபலன் பெற்றபொழுது ஆலோசகராயிருத்தல் மந்திரியாக இருத்தல், பெரிய புகழடைதல் முதலிய பலன்களுண்டாகின்றன. சனி, 3, 6, 11ல் துலா, மகர, கன்யா, விருஷபங்களில் இருந்தால், கிராமாதிபத்யம் நியாயாதிபதி முதலிய பதவிகளையும், புகழையும் தருகிறார். புதன் ஸ்வக்ஷேத்திரத்தில் ரவியோடு கூடியபொழுது கணிதத் திறமை, ரேடியோ, முதலிய தொழில்களில் திறனைத் தருகிறது. சுக்கிரன் 1, 2, 4, 5, 9, 11ல் சிறந்த பலன்களைத் தருகிறது. கேது எங்கிருந்தாலும் அறிவுத்திறன் தவிர மற்றவைகளில் மத்திய பலனையே தருகிறது என்பது முதலிய பொதுப் பலன், ஜாதகங்களைப் பார்த்தவுடன் பொதுவாகத் தெளிவாகிறது. அதிக எதிர்பார்த்தலின்றி உண்மையறிய ஜோதிடம் சிறந்த சாதனம். ஆனால் ஜோதிடர்களும் உண்மையைத் தவிர, அனாவசியமான ஆவல்களுக்கு இடமளிக்காதிருப்பின் கலை நன்கு விளங்கும்.

தூரதரிசினியின் உதவியால் தொலைவிலுள்ள பொருள்களை நாம் ஓரளவு பார்க்க முடிகிறது. அப்பொருளைப்பற்றிய முழுவிவரமும் அறிந்தவர்கள், அதை தூரதரிசினி மூலம் கண்டதும் மேலும் ஆராய்கிறார்கள் ஆனால் அப்பொருளைப்பற்றி எந்த விவரமும் அறியாத ஒருவர் தூரதரிசினியின் உதவியால் அப்பொருளைக் கண்டதும், தொலைவிலுள்ள ஒரு பொருள் கண்ணுக்குப்புலப்படுகிறது என்று மட்டும் தான் கூற இயலும். அதனைப்பற்றிய இயற்கை விவரங்களை ஆராயும் தன்மை பலருக்குக் கிடையாது. ஜாதகம் நமக்கு நம் எதிர்காலத்தைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள உதவும் தூரதரிசினியே யாகும். ஆகவே ஜோதிடக்கலையில் சிறந்தவர்கள் இதன் உண்மைத் தத்துவத்தை உணர்ந்து, பலன்களைக் கூறமுயல்வதே இக்கலையைப் போற்றி வளர்ப்பதாகும். ★

தேனீக்களில் பல ரகங்கள்

டி. ஸி. வெங்கடரமணய்யர்

ஆசிரியர் ஸ்ரீ ராமநாத் அவர்களின் தந்தை டி. ஸி. வெங்கடரமணய்யர் அறிவு வளர்ச்சிக்கான பல விஷயங்களைக் குறித்து 'விவேகசிந்தாமணி' 'பிழைக்கும் வழி' முதலிய சஞ்சிகைகளில் எழுதியிருக்கிறார். இக்கட்டுரை 'விவேகசிந்தாமணி'யில் (1905) வெளியானது.

ஈக்களில் தேனீ என்பது ஒரு ஜாதி. இதில் மலைத் தேனீ, நாட்டுத்தேனீ கொசுகுத்தேனீ என்று மூன்று விதங்களுண்டு. தேனீக்கள் விஷம் நிறைந்தவை. மலைத்தேனீக்கள் உருவத்தில் ஒன்றரை யங்குல நீளமுள்ளதாகவும், கொடுக்குகள் நீண்டு வளைந்து கூர்மையுள்ளதாகவும் உடல் கருநிறமானதாகவும் இருக்கும். இது செங்குத்தான குன்றுகளிலும் பாறை இடுக்குகளிலும் உயர்ந்த மரக்கொம்புகளிலும், கூடு கட்டுகிறது. இதற்கு மூர்க்க குணமும் கடுங் கோபமும் அதிகம். தங்களுக்கு தீங்கு செய்ய வருபவர்களை மைல் கணக்காக துரத்தி விரட்டியடிக்கும் தன்மை உள்ளது. மூன்று ஈக்கள் சேர்ந்தால் ஒரு பலமுள்ள மனிதனை எதிர்த்து கொன்று தீர்க்கும் சக்தியுள்ளவை. இவ்வீக்களைக் கண்டால் குரங்கு, கரடி முதலிய மதுப்பிரியமுள்ள மிருகங்களுக்கும் அதிக பயம். இதனுடைய ரீங்காரத்துவனியை கேட்டவுடன் அவைகள் பயந்தோடி, பதுங்கி விடும். இவைகளின் கொடுக்கு நீளம் கோபம் வந்த காலத்தில் இன்னும் நீளக்கூடியதாகும்.

இவைகள் கட்டும் கூடு 6 அல்லது 7 அடி சுற்றளவுள்ளதாகவும் அரையடி கனமுள்ளதாகவும் ஒவ்வொரு அறையும் இரண்டங்குல ஆழமுள்ளதாகவும் இருக்கும். இவைகள் மனித சஞ்சாரம் குறைவான இடங்களில் கூடு கட்டுவது வழக்கம்.

இம்மலைத் தேனீக்களின் கூடுகள் தூரப்பார்வைக்கு முழுச் சாக்கு மூட்டைகள் போல காணப்படுகின்றன. இவ்விடத்திலிருந்து தேன் எடுப்பது மிகக் கஷ்டமும் பயங்கரமுமான செய்கை.

செங்குத்தாக நிற்கப்பட்ட பாறையின் உச்சியில் இரும்பு கடப்பாறை கொண்டு துவாரம் செய்து, அதில் கடப்பாறையையே முளையாக வடித்து இதற்கென்றே தயார் செய்து வைத்திருக்கிற சமீப கணுக்களை யுடையதும், ஒரு புறத்தில் கொக்கி மாதிரி வளைத்துக் கட்டியும், மற்றப் புறத்தில் துவாரம் செய்து சில முளையடித்ததுமான பிரம்பைக் கொண்டு வந்து மேற்படி பாறையில் அடித்த முளையில் மாட்டி, உற்ற துணையை முளையில் நிறுத்திவிட்டு பிரம்பின் வழியாக ஒருவன் கீழே இறங்குவான். ஒரு கையில் தீக் கொளுத்திய ஒரு பந்தத்தை எடுத்துக் கொண்டும், தேன் கூடுகளை எடுத்து வரத் தகுந்த வலையை இடையில் கட்டிக்

கொண்டும் பிரம்பின் கணுக்களில் கால் விரல் சந்தினுல் பற்றிக் கொண்டும் இறங்குவான்.

ஒரு கஜம் கீழே இறங்கி விடுவானுனல் மேலே இருப்பவன் இவனைக் காண முடியாது. சுமார் 200 கஜத்திற்கு கீழே பூமி கல்லும் கரடுமாகக் காணப்படும். கூட்டுக்கு சமீபமாக இறங்கியதும் தீப்பந்தத்தினுல் ஈக்களை சுடுவான். ஈக்கள் ஒழிந்த தேன் கூட்டை வலையில் வைத்து மேலே இழுக்க சமிக்ஞை செய்வான். ஒரு தடவையில் இவர்கள் எடுக்கும் தேன் கூடுகளில் 40 படிக்கு குறையாமல் தேன் கிடைக்குமாம்.

நாட்டுத் தேனீக்கள்

நாட்டுத் தேனீக்கள் பல இடங்களிலும் காணப்படும். இதில் மூன்று விதமுண்டு. ஒரு அங்குலமுள்ளவை பெருந் தேனீ என்றும், அரையங்குலமுள்ளவை கொம்புத்தேனீ என்றும் காலங்குலமுள்ளவை சிற்றீ என்றும் சொல்லப்படும் இவைகளில் முதல் இரண்டு ர்கம் கருஞ்சிவப்பு நிறமானது. சிற்றீக்கள் கருமையாகவே காணப்படுகின்றன. இவை மரக் கொம்பு, மரப் பொந்து முதலிய இடங்களில் கூடு கட்டுகின்றன. இவைகளில் சிற்றீக்களை விட கொம்பு தேனீக்கள் மிகக் கொடியவை. இதைவிட கொடியவை பெருந் தேனீக்கள். இவைகள் எல்லாம் மலை தேனீக்கள் போல அவ்வளவு மூர்க்க குணமுடையனவல்ல என்ருலும் தங்களுக்கு இடர் செய்பவர்களை கொட்டாமலும் வருத்தாமலும் இராது. இவைகளுள் கொம்புத் தேனீக்களால் சேர்க்கப்பட்ட தேனே அதிக மதுரமானது.

கொசுகுத் தேனீ என்பது மிகவும் சிறியது. இது அளவில் சாதாரண சிக்காடு, கொசுகு, முதலியவைகளை விட சற்று பெரியது. இது அதி உஷ்ணமான இடங்களில் மட்டும் கற் சந்துகளில் கூடு கட்டும். இது தீங்கு செய்யாது. கொட்டாது. ஆனுல் கடிக்கும். இத்தேன் மருந்துகளுக்கு மிகவும் சிரேஷ்டமானதென்று சொல்லப்படுகிறது.

தேனீக்கள் எட்டு, அல்லது பத்து மைல் தூரமும் சென்று தேனை கொண்டு வந்து சேர்க்கும். நீலகிரி மலையில் கட்டை என்று ஒருவிதமான செடியுண்டு. இது பனிரெண்டு வருஷத்திற்கு ஒரு முறைதான் புஷ்பிக்கிறதென்று கூறுகிருர்கள். அதிலும் தோதவ நாட்டிலுள்ள செடிகள் புஷ்பித்த 6 வருஷமான பின்புதான் பறங்கி நாட்டிலுள்ள செடிகள் புஷ்பிக்கும் என்றும், பறங்கி நாட்டிலுள்ள செடிகள் புஷ்பித்த 6 வருஷங்களுக்குப் பின்தான் மறுபடியும் தோதவ நாட்டில் புஷ்பிக்குமென்றும் கூறுகிருர்கள். இது உண்மை என்றே நம்ப வேண்டியிருக்கிறது. இச் செடிகளில் புஷ்பங்கள் அதிகம். புஷ்பங்களில் தேனும் அதிகம். புஷ்பங்களைப் போலவே தேனின் நிறமும் இரத்தச் சிவப்பாக இருக்கும். ஒரு சமயத்தில் பறங்கி நாட்டிலுள்ள ஓரிடத்தில் எடுக்கப்பட்ட தேன் கட்டை புஷ்பத்தினின்று எடுத்து சேகரிக்கப்பட்ட தேனுக இருந்தது. பறங்கி நாட்டில் அப்போது அப்புஷ்பமே கிடையாது. ஈக்கள் தோதவ நாட்டிலிருந்து அத்தேனைக் கொண்டு வந்து

சேர்த்திருக்க வேண்டும், என்று நம்ப போதுமான காரணங்களிருந்தன.

தேன் சேகரிக்கும் விதம்

சாதாரணமாக தேன் சேகரிப்பவர்கள் வனங்களிலும் குன்றுகளிலும் காணப்படுகின்ற தேன் கூடுகளை கலைத்து தேன் எடுக்கிறார்களே தவிர தேனீக்களை வளர்த்து தேன் எடுப்பதில்லை. தேனீக்களை வளர்த்து தேன் பெற வேண்டும். தேனீக்கள் வந்து கூடு கட்டுவதற்கு வசதியாக தகுந்த இடத்தில் ஒரு சிறிய மரக் குடிசை செய்து அதில் பானையொன்றை வைத்து அதில் ஈக்கள் நுழையும்படி துவாரங்கள் செய்து வைக்க வேண்டும். இந்தப் பானை மீது கொஞ்சம் வெண்ணெயும் தடவி வைப்பதுண்டு, அமாவாசைக்கு நான்கு நாள் முந்தியே ஒன்று இரண்டு கூடுகளை விட்டுவிட்டு மற்றவைகளிலுள்ள தேன் எடுத்துக் கொள்ளப்படும். அவற்றிலும் எதில் தேன் அதிகமாக இருக்கிறதோ அவை எடுத்துக் கொள்ளப்படுகின்றன. முட்டைகளும் குஞ்சுகளும் அதிகமாக இருக்கிற கூடுகள் தொடப்படுவதில்லை. அமாவாசைக்குப் பிறகு எடுத்தால் தேன் அதிகமாக இருப்பதில்லையாம். சூரிய அஸ்தமனத்திற்குப் பின்பு கூடுகளை எடுப்பதனால் ஈக்கள் அவ்வளவாக கொட்டுவதில்லை.

கூண்டிலுள்ள முட்டைகளையும் ஈக்களையும் அழித்துக் கொன்று விடாமல் தேனை மட்டும் எடுத்து வைத்தால் தேன் வெகு காலம் கெட்டுப் போகாமல் இருக்கும். இவ்விதத் தேனில் ஒரு சொட்டு எடுத்து காகிதத்தின் பேரில் வைத்து ஊதினால் அது உருண்டோடும். அதுவே சிரேஷ்டமான தேன்.

கவிஞர்களும் தேனும்

நிடத நாட்டிலே-வேந்தன் நளனின் பூஞ்சோலையைக் காண்கிறார் புகழேந்திப்புலவர்.

''பீடாருஞ் செல்வப் பெடை வண்டோ-டூடா
முருகுடைய மாதர் முகநனைக்கும்.''

பெருமை நிறைப்பெண் வண்டு, ஆண் வண்டுடன் கலந்து கொள்ளுங்கால் அன்றலர்ந்த அரும்புகள் கட்டலர, அதனால் ஒழுகுகின்ற தேன் பக்கத்தே மலர் கொய்யும் மங்கைகளின் முகங்களை நனையப்பண்ணுமாம்.

மற்றும் ''தேனைக் குடித்துக் களிப்புக்கொண்ட வண்டின் கூட்டம் இரவில் செந்தாமரை மலர்களில் தங்கி,துயின்று விடியற்காலை சோலையினுள் சென்று ஆங்குள்ள குயில்கள் கூவ மலர்களில் உள்ள தேனைக் குடிக்குமாம்.''

ஜெ. எஸ். எம். பாலையா.

ஹாஸ்ய சம்பவம்

ஹாஸ்ய சம்பவம் எவ்வளவோ உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் அவைகளைப்பற்றி 100 வார்த்தைகளுக்குள் எழுதப்பட வேண்டும். பிரசுரிக்கப்படும் எல்லாவற்றிற்கும் சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்' 17 ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை–2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

கண்கள் செய்த விந்தை!

சென்ற ஜூன் மாதம் 7-ந் தேதியன்று பெங்களூரில் ஒரு பயங்கரமான கொலை நடந்ததல்லவா? காலையில் செய்திப் பத்திரிகை வாங்க நானும் நண்பரும் கடைக்குச் சென்றோம். அங்கே தலையங்கத்தைப் பற்றி ''நவ இந்தியா'' இதழ் தொங்கவிடப் பட்டிருந்தது. அதில் முதல் தலையங்கமாக ''படுபாதக வக்கீல் வீட்டில் ஐவர் கொலை'' என்றிருந்தது.

அவ்வளவு படுபாதகமான வக்கீலா அவர்? பாவம்! எவனுடைய வெறுப்பை அதிகமாகச் சம்பாதித்துக்கொண்டாரோ, அதனால்தான் கொலை நிகழ்ந்தது போலும், என்று சொல்லிக் கொண்டே பத்திரிகையை வாங்கிப் பார்த்தோம் அதில், ''படுபாதகம்; வக்கீல் வீட்டில் ஐவர் கொலை'' என்று போடப் பட்டிருந்தது. எங்கள் கண்கள் செய்த விந்தையை என்னவென்பது?

சற்று மடங்கிக்கிடந்த 'தலையங்க இதழ்' எங்களை நிமிர்ந்து பார்த்துச் சிரித்தது. நாங்கள் அதை நினைத்து, ''பெங்களூர் கொலை'' பற்றிய செய்தி வரும் பொழுதெல்லாம் வருத்தம் தோன்றினாலும் உள்ளூற இன்னமும் சிரித்துக்கொண்டே படிக்கிறோம்.

மு. மாரியப்பன்,
திருச்சி.

எடுத்துக்கொண்ட பொருள்...?

தேர்தல் சமயம். பொதுக்கூட்டமொன்று நடந்துகொண்டிருந்தது. எங்களூர் பொட்டலொன்றில் ஆட்களெல்லாம் கூடிநின்றனர். சொற்பொழிவுகளைக் கேட்க. மேடையில் பேச்சாளர் எதிர்க்கட்சியினரைத் தாக்கும் போதெல்லாம் மக்கள் கரகோஷம் செய்தனர். கரகோஷம் செய்வதில் சிறுவர்களுக்கு வெகு குஷி!

ஒருவர் பேச்சு முடிந்தது. அடுத்து இன்னார் பேசுவார் என்று தலைவர் கூறினார். அந்த நபரும் மேடைக்கு வந்தார். அவர் 'இக்கால அரசியல்' என்னும் பொருள் பற்றிப் பேச இருந்தார். 'மைக்'கின் முன் நின்று ஒரு கனைப்பு கனைத்தார். கைக் குட்டையை எடுத்து வியர்வையைத்துடைத்த வண்ணம் பேச்சை ஆரம்பித்தார்.

''தலைவர் அவர்களே......... நான் இப்பொழுது எடுத்துக்கொண்ட பொருள் என்ன வென்றால்.........'' என்று இழுத்தார். 'டக்'கென்று மேடையருகே கூடியிருந்த சிறுவர் கூட்டம் ''கைக்குட்டை!'' என்றது. உண்மையிலேயே பேச்சாளி தன்கையில் எடுத்துக் கொண்ட பொருள் கைக்குட்டையே தான்! கூட்டம் கோஷித்தது. இந்நிலையில் அவரால் மேலே ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை.

அவர் எப்பொழுதுமே கையில் கைக்குட்டையை எடுத்தவண்ணம் தான் பேசுவார் என்று தெரிந்து கொண்ட சிறுவர்கள், கூடிப்பேசி, இவ்வாறு நடத்திவிட்டனர் என்று தெரிந்து கொள்ள எனக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை.

சு. பொ. அழகர் சுவாமி,
திருநெல்வேலி

சோகத்தில் ஹாஸ்யம்!

1947 பிப்ரவரியில் திருச்சி தேசீய கல்லூரியின் வைர விழாக் கொண்டாட்டம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பல ஆங்கில, தமிழ், ஸம்ஸ்கிருத நாடகங்களில் பெண் வேஷம் தாங்கி, பல பரிசுகள் பெற்ற நான் அந்நாடகத்தில் திரௌபதியின் வேடத்தை ஏற்று நடித்தேன்.

நாடகம் விறுவிறுப்பாய் நடந்து கொண்டிருந்தது. அனைவரும் என் நடிப்பைக்கண்டு பிரமிக்க வேண்டும் என்று என்னால் முடிந்த வரையில் மிகச் சிரமப்பட்டு, உணர்ச்சி வசத்தோடு நடித்தேன். அவ்வப்பொழுது பாராட்டுத்தட்டல்களும் கிடைத்தன. துரியோதனன்சபை. துஷ்டன் துச்சாதனன் துகில் உரியும்கட்டம். அங்குதான் என் நடிப்புத்திறனைக் காட்டவேண்டும், அதிக பாராட்டுகளைப் பெறவேண்டுமென்று உணர்ச்சி வசப்பட்டு நடித்தேன். ஆனால் அதற்கு மாறாக அந்தசோக கட்டத்தில், ''புளியம்பழம் உதிர்வதுபோல்'' பலத்த சிரிப்பு கொட்டகையே அதிர்ந்து விடும் போல் ஏற்பட்டது. காரணம் ''கௌரவர்களின் இரத்தத்தைத் தலையில் தடவித்தான் கூந்தலை முடிவேன்'' என்று சபதம் செய்து தலைக்கிரீடத்தை எறியும் பொழுது, தலை டோப்பாவும் அதோடு சேர்ந்து கீழே வழுந்து விட்டது. திரௌபதி 'கிராப்' தலையுடன் காட்சியளித்தாள்! கையைத் தலையில் வைக்கும்பொழுது கிராப் தலைதான் தட்டுப்பட்டது. சபையோரின் சிரிப்புக்குக் காரணத்தை அறிந்தேன். அறிந்தவுடன் வெட்கமும், துக்கமும், அவமானமும் ஒன்று கூடி என்னை அழச்செய்து விட்டன. ஒருவாறு நாடகமும் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. அன்று தலைமை வகித்த பெரியார் உணர்ச்சியுடன் நடித்ததற்காக என்னைப்பாராட்டி, முதற் பரிசை சபையோரின் பாராட்டுதல்களுக்கிடையே வழங்கினார்.

டி. கிருஷ்ணமாச்சாரி,
ஸ்ரீரங்கம்.

பாட்டியின் யுக்தி

எங்கள் கிராமத்தில் சுமார் பதினைந்து சிறு வீடுகளுக்கு ஒருவர் சொந்தக்காரராய் இருந்தார். அவர் மிகவும் பணத்தாசை பிடித்தவர். வாடகை கொடுக்கத் தாமதமானால் மிரட்டி உருட்டிப் பணத்தைப் பெற முயலுவது அவர் வழக்கம்.

அவருடைய வீட்டில் ஒரு சிறிய அறையை காவேரி என்ற ஒரு பாட்டி வாடகைக்கு எடுத்துக் கொண்டு வசித்து வந்தாள். அந்தப் பாட்டியோ மிகவும் ஏழை. ஆனால் மிகவும் சாமர்த்திய சாலி. அந்தப் பாட்டி இந்த வீட்டுக்காரரை எப்படியாவது அவமானப் படுத்த எண்ணினாள். அதற்காக அவள் தினம் பொழுது புலரு முன் சாப்பிட்டு விட்டு கோவில் பக்கம் சென்று விடுவாள். இரவு 8 மணிக்கு மேல்தான் வீட்டிற்கு வருவாள். வீட்டுக்காரர் தினம் பாட்டி வீட்டிற்கு வருவார். கதவு தாழிடப் பட்டிருக்கும். இது போல் சில நாட்கள் சென்றன. ஒரு நாள் கோபமடைந்த வீட்டுக்காரர், பாட்டியின் வீட்டிற்குச் சென்று கதவையுடைத்து, சாமான்களை எடுக்க ஆரம்பித்தார். அங்கு இரண்டு அல்லது மூன்று சட்டி பானைகள் தான் இருந்தன. பாட்டி ஓடோடி வந்து, ''நான் இந்த வீட்டில் 500 ரூபாய் வைத்திருந்தேனே! வெள்ளிப்பாத்திரங்கள் சில இருந்ததே! ஒன்றும் காணவில்லையே! என்று 'ஓ' என்று கத்தி அழ ஆரம்பித்தாள். எல்லோரும் பாட்டிக்குப் பரிந்தே பேசமுற்பட்டனர். வீட்டுக்காரரை மிரட்ட ஆரம்பித்தனர். வீட்டுக்காரருக்கு அவமானம் தாங்கவில்லை. பேசாமல் பாட்டியிடம் கையிலிருந்த 20 ரூபாயைக் கொடுத்து விட்டு, ''அம்மா! நீங்கள் என்னை மேலும் அவமானப் படுத்தாதீர்கள்!'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து போய்விட்டார். அது முதல் அவர் குடியிருப்பவர்களிடம் மனிதத் தன்மையுடன் நடந்து வருகிறார்.

''ராஜா'',
சென்னை - 2.

போன் : 63   தந்தி : SIMCO



தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ் தீப்பெட்டிகளும் எங்கள் டிப்போக்களில் செலவாகி விடுகின்றன.

சிறந்த சரக்கு உற்பத்தி! சிறப்பான பொதுஜன ஆதரவு!

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க்; சிம்கோ ஊலட் மார்க்; சிம்கோ சைக்கிள் மார்க்; மைனர் சைஸ் சீனு லேடி மார்க்; சிம்கோ 60 குச்சி வேட்டை சிங்கம் மார்க் தீப்பெட்டிகள் கடற்கரை, குளிர் பிரதேசங்கள், மற்றும் மலபார் மழைக்கும் உகந்தவை.

★

சிம்கோ, சிவகாசி.

ஜூபிலி ரிலீஸ்
ரவி பிலிம்ஸ்
மகாகவி
காளிதாஸ்
தமிழ்
ஹொன்னப்ப பாகவதர்
ராஜ சுலோசனா
சரோஜா
மற்றும் பலர் நடிப்பது
சங்கீதம் : தக்ஷிணாமூர்த்தி
பாடல்கள் :
தஞ்சை ராமய்யதாஸ்
வசனம் :
M. விஸ்வம், B A., L. T.
பூர்ண உரிமையாளர் :
RKF ராதாகிருஷ்ணா பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட்
ஆலப்புழை
PSR